# பாரதமணி


ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
5, வெங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5 }

| | | |
|---|---|---|
| மாலை 6 | ஞாயிறு 17-8-41 விஷு ௵ ஆவணி ௴ 1௳ | முத்து 2 |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம். |
|---|---|---|
| போகிற போக்கில் ... ... | | 58 |
| புது உலகம் ... ... | ஏ. ஜி. வெங்கடாச்சாரி, பி. ஏ. | 61 |
| தொலை கிழக்கு நாடுகளுக்கு வழி ... ... | அ. முத்தையா, எம். ஏ. | 67 |
| பரம்பரை ஆழ்வாரும் பாட்டாழ்வாரும் ... | ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. | 71 |
| ஸி. ஒய். சிந்தாமணி ... ... | கே. ஏ. சிதம்பரம் | 73 |
| காதலி, தந்தை, மரணம் ... ... | ஏ. எம். ரஷீத் | 75 |
| ஞானஸ்தன் ... ... | "கம்பதாஸன்" | 78 |
| மும்மனம் ... ... | தி. ப. பத்மநாபன் | 80 |
| புண்பட்ட உள்ளம் ... ... | "கார்த்திகை" | 85 |
| விவாக தந்திரம் ... | வி. சத்தியமூர்த்தி, பி. ஏ., பி. எல். | 89 |
| குடித்தனம் ... ... | "குகப்ரியை" | 93 |
| விஞ்ஞானமும் அறநெறியும் ... | டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ. | 97 |
| புதிய மனிதன் ... ... | கு. ப. ராஜகோபாலன், பி. ஏ. | 102 |
| கிராமப் புனருத்தாரணம் ... ... | இரா. சோமசேகரன் | 104 |
| அரசனும் கிழவனும் ... | பெ. நா. அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல். | 106 |
| விளையும்பயிர் முளையிலே ... ... | எம். எஸ். சுப்ரமணிய அய்யர் | 108 |
| புத்தக விமர்சனம் ... ... | | 112 |


"பாரத மணியில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# போகிற போக்கில்



கொஞ்ச காலம் முந்தி தினசரிப் பத்திரிகைகளில் விசேஷமாய் பிரசுரிக்கப்பட்ட லண்டனிலிருந்து எழுதப்பட்ட மிஸ் ராத்போனின் கடிதத்தை நான் படித்தேன். படித்து மிக்க ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அடைந்தேன். இந்தியா காரியதரிசி அமெரியின் பிரசங்கங்கள்தான் இதுவரையில் எனக்கு இவ்வளவு ஏக்கத்தை உண்டு பண்ணுவது வழக்கம். மிஸ் ராத்போன் அமெரியையும் தோற்கடித்துவிட்டார்.

மிஸ் ராத்போன் கடிதத்திற்கு சரியான விடை யார் அளிக்கப் போகிறார்கள், என்று ஏக்கத்தில் இருந்தேன். ஏனென்றால் மேல் நாட்டு பிரசார கடிதங்களைப்பற்றி இப்பொழுது நமது தலைவர்கள் ஒரு கவனமும் எடுத்துக் கொள்வதில்லை. இருந்தாலும் மிஸ் ராத் போன் கடிதத்திற்கு ஓர் பதில் அவசியமென்று எனக்குத் தோன்றிற்று. ஈசனைப் பிரார்த்தித்தேன். எதிர் பாராத அனுக்ரகம் கிடைத்தது.

கவி மன்னர் ரவீந்திரநாத் தாகூர் அளித்த பதிலை எல்லோரும் ஆனந்தக்களிப்புடன் வாசித்தார்கள். நான் அவர் எழுதிய "கீதாஞ்ஜலி"யை பிரசுரமான உடன் வாசித்த ஊக்கத்தைவிட பத்து பங்கு கூடுதலாய் அவர் மிஸ் ராத் போனுக்கு அளித்த இந்த விடையை, மயிர் சிலிர்த்து உள்ளம் பூரித்து வாசித்தேன்.

தாகூருடைய சௌந்தர்யமும், அவருடைய ஸாமுத்திரிகா லக்ஷணங்களும், கவிதா ரஸமும், தைர்ய லக்ஷ்மியும், ஸம்பூர்ணமாய் இந்தக் கடிதத்தில் காணப்பட்டன. தங்கத்தின் கனமும் மேனியும் இதில் குடிகொண்டிருந்தன.

திடீரென்று இதைப் படித்து முடித்தவுடன் ஒரு எண்ணம் தோன்றிற்று: "அணையும் விளக்கின் மாசற்ற கடை ஜோதியோ இது?" என் மனம் தயங்கி நின்றது.

* * *

ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி வியாழக்கிழமை. சிராவண மகா புண்ணிய காலம். துங்கபத்ரா நதி

தீரத்தில் ஹரிஹர் என்னும் கிராமத்தில் பெருகும் வெள்ளக்கரையோரத்தில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்து கொண்டிருந்தேன். சென்ற பத்து வருஷங்களாக க்ஷேத்திரங்கள், கலாசாலைகள், நதிதீரங்கள், கிராமங்கள், நகரங்கள், நான் அலைந்து திரிந்து சென்ற இடங்கள் எல்லாம் என் கண்முன் ஸினிமா படம்போல் வந்து நின்றன. இந்தக் காட்சியில் குருதேவர் ரவிந்திரநாத தாகூருடைய தோற்றமும், சாந்தி நிகேதனத்தின் அழகும் சாந்தமும், கண்ணிலேயே, ஓடும் ஆற்று வெள்ளத்தின்முன் நின்றன. குரு தேவர் என்னிடம் காட்டிய அன்பை, எனக்கு என்னாளும் அழியாத ஓர் சம்பத்தாகக் கொண்டாடுகிறேன். இந்தியாவுக்கு புத்துயிர் அளித்த மகான்கள் மூவர்-ஸ்வாமி விவேகாநந்தர், ரவிந்திரநாத தாகூர், மகாத்மாகாந்தி. இம்மூவரில் தாகூர் செய்த தொண்டு என்னாளும் அழியாதது. ஏனெனில் நமது கவி சுப்ரமண்ய பாரதியாருடையது போல், தாகூரின் கவிதையே நமது தேசத்திற்குப் புத்துயிர் அளிக்க ஓர் முக்கியமானயோகஸாதனமாய் நிற்கிறது. ஓர் பெரிய வழி காட்டி. ஏனென்றால் இவர்கள் தங்கள் கவிதையை, அரசியல் இயக்கத்தில் ஈடுபடும்படி செய்து பாடுபட்டிருக்கிறார்கள்.

தங்கள் கட்டுரைகளையும் கானங்களையும், சுயராஜ்யப் போர் புரியும் ஆகாச விமானங்களாகச் செய்து தேசத்தில் உத்ஸாகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள்.

* * *

ரவீந்திரரின் கவிதையின் உயர்தர குணங்களைப்பற்றி விவரித்து சொல்ல நான் அர்ஹனல்ல. இது சமயமும் அல்ல. அவர் உண்மையில் கவிகளுக்குள் பலவிதத்தில் மன்னர்தான்.மனதை லயிக்கும்படியாய்ச் செய்யும் நாதப் பிரும்மத்தைக் கையாண்டு அனுபவித்தவர். இப்படிப்பட்ட மகானுபாவர்கள் உலகில் சிலரே. வேற்றுமையில் ஒற்றுமையை உணர்ந்தவரில் இவர் சிரேஷ்டர். ஆகையால்தான் இவருக்கு உபமான உபமேயங்கள் ஆற்றுமணலில் நீர்ப் பெருக்குப் போல் எப்பொழுதும் கொப்பளித்துக் கொண்டு பெருகிற்று. நமது கவி பரம்பரையில் இந்தவிஷயத்தில் இவரைக் காளிதாஸனுக்கு ஒப்பிடலாம்.

கவிதா மார்க்கத்தில் இவர் போகாத வழி இல்லை. கட்டுரை முதல் கானம் வரையில் ஒவ்வொன்றிலும் அவர் தொட்டது பொன் ஸ்பர்சமாய் விளங்குகிறது. அவர் கவிதையில் ஓர் சிரேஷ்டமான குணம் உண்டு. ஒரு ஜீவராசியை வர்ணிக்கும்பொழுது எல்லா ஜீவ

ராசிக்கும் அந்த வர்ணனை பொருந்தும்படியான ஓர் அழகிய அமைப்பு. இதனால் ஓர் ஐக்ய பாவம் பல ராசிகளையும் பேதங்களையும் ஒன்று கூட்டி ஒற்றுமைப் படுத்திவைக்கிறது.

* * *

உண்மையில் ரவீந்திரரின் பெருமை அவர் கவிதையினால் மாத்திரம் அல்ல. அந்தக் கவிதையின் அழகிய சொற்களை செயலாக மாற்றி நமது ஏழு லக்ஷம் கிராமங்களுக்கும் புத்துயிர் அளிக்க வேண்டுமென்று அவர் சாந்தி நிகேதனத்திலும், ஸ்ரீ நிகேதனத்திலும் முப்பது வருஷ காலமாய் பாடுபட்டதுதான். நமது அடிமை நாட்டிற்கு தற்காலம் அழகுவாய்ந்த சொல் மாத்திரம் போதாது. கொஞ்சமாவது செயல்வேண்டும். இதுதான் அவர் அந்தரங்கக் கொள்கை. கவிதையை தனக்கும் தன் தேசத்திற்கும் ஓர் யோக ஸாதனமாக மாற்றி, அழியா வெற்றி யடைந்ததற்குக் காரணமும் இதுதான்.

—மணி

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரேயில்வே, தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:

ஒன்றரைக்கோடி ரூபாய்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# புது உலகம்

[ஏ. ஜி. வேங்கடாச்சாரி பி.ஏ.]

இந்த யுத்தம் முடிந்தபிறகு வரும் சமாதானமும் அதன் விளைவுகளும் எப்படியிருக்கப் போகின்றன? இந்தகேள்வி வெகு முக்கியமானது. ஆனால் அதற்கு கிடைக்கும் பதில், வெற்றியடையப்போவது யாரார் என்பதையே பொறுத்திருக்கும். இப்போது ஐரோப்பா முழுவதையும் அநேகமாய் ஆட்கொண்டு உலக ஆதிக்கத்துக்காக பெருவாரியாக படுகொலையை நடத்திவரும் ஜெர்மன் பாஸிஸமும் அதன் நேச சக்திகளும் நிர்மூலமாக்கப் படவேண்டும் என்பதைப் பற்றி உலகமெங்கும் முற்போக்காளரிடையே கருத்து ஒற்றுமை இருந்து வருகிறது. இப்பொழுது யுத்தம் நடக்கும் ரீதியைப் பார்த்தால், ஹிட்லரின் வீழ்ச்சியில் முதல் அத்தியாயம் இவ்வருஷக் கடைசியில் ஆரம்பமாகலாம் என்று நம்புவதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. ஆனால் ஜெர்மனியர் துரிதமாகத் தோல்வியடைவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களுள் தங்கள் வெற்றியின் சிகரத்தை இன்னம் இரண்டு மாதங்களில் அடையக்கூடும் என்று புலப்படுகிறது. ஒன்றிரண்டு மாதங்கள் ஸ்திர நிலைமை இருக்கலாம். அதற்கப்புறம் ஜெர்மன் பாஸிஸம் மெதுவாக—ஆனால் நிச்சயமாக—அதன் அழிவை நோக்கிச் சரிய வேண்டியதுதான். இந்தச் சரிதலை வெற்றியடையப் போகும் நாடுகள் எவ்வளவு தூரத்துக்கு அனுமதிக்கப் போகின்றன என்பது வெகு முக்கியமான கேள்வி. பாஸிஸமும் பரிபூரணமாய் கவிழ்ந்து போய், ஜனங்களின் தங்கு தடங்கலற்ற அபிப்ராயம் உருவாகி சுயேச்சையுடன் எதிர்காலத்தை அமைக்க அனுமதிக்கப் படுமா? அல்லது திடீரென இடையில் கோளாறுகள் கிளம்பி, பாஸிஸ்ட் தன்மை மறையாத ஜனநாயக முலாமைக்கொண்டு சமுதாயத்துக்கு வர்ணம் தீட்டப் போகிறார்களா? இவை வீணர்களின், சோம்பேறிகளின் அல்லது வெறும் தர்க்கப் பற்றுள்ள குயுக்திக்காரர்களின் மனதில் எழும் பொழுதுபோக்குக் கற்பனைகள் அல்ல.

## யுத்தமும் விஞ்ஞானமும்

யுத்தத்தைக் காணாத தலைமுறை இல்லை. அதுவும் இந்த நூற்றாண்டில் நாகரிக முதிர்ச்சி ரொம்பவும் விபரீதமாக பிரதிபலித்திருக்கிறது. மனிதர்களை திடகாத்திரர்களாக்கி, அறிவை வளர்த்து, வசதிகளைப் பெருக்கி, இன்ப வாழ்வை அளிக்கும் சகல சுக போகங்களும் எல்லோருக்கும் உத்தரவாதமாய்க் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகள் உலகமெங்கும் கிடக்கின்றன. விஞ்ஞானம் பல புது உண்மைகளைக் கண்டுபிடித்து சென்ற தலைமுறையினர் கனவிலும் கண்டிராத புரட்சிகளை ஏற்படுத்தி யிருக்கிறது. 'உலகமே ஒரு குடும்பம்' என்ற உதார எண்ணத்துடன் விஞ்ஞானிகளும் அவர்களை ஆட்டி வைக்கும் சமூகத்தினரும் கருதி நடந்து கொண்டிருந்தால் இன்று உலகமெங்கும் புது யுகம் உதயமாகி யிருக்கும். ஸோவியத் ரஷ்யாவில் உலகம் பூராவின் எதிர்ப்படையே ஓரளவு வெற்றியுடன் நிறுவப்பட்டதுபோன்ற சமூக தர்மத்தின் லட்சிய நிலையை எல்லா நாடுகளுமே அடைந்திருக்க முடியும். ஆனால் விஞ்ஞானமும் பெரும்பான்மை விஞ்ஞானிகளும், தாங்கள் கண்டுபிடித்த உண்மைகளையும் அவற்றின் விளைவான உபகரணங்களையும் சிரிய சமுதாய நலனுக்குப் பயன்படுத்த முடியாமற் போனதால்தான் பயங்கரமான யுத்தங்கள் தோன்றித் தோன்றி மறைந்து; பஞ்சம், பிணி, பசி, வறுமை போன்ற கொடுமைகள் தலைதூக்கும்படி யாகிறது. இதற்குக் காரணம் என்ன? இன்று உலகத்தில் பெரும்பான்மை நாடு

களிலும் ஆட்சி புரிந்துவரும் அதிகார வர்க்கங்கள்தாம். சரித்திர பூர்வமான வசதிகளைப் பெற்ற ஒரு சிலர் தங்கள் சொந்த லாபத்திற்காக, சுகபோக வாழ்க்கைக்காக, செல்வாக்கிற்காக உற்பத்தி விநியோக சாதனங்களையெல்லாம் தங்கள் அல்லது தங்கள் குழுவின் ஏக போகமாக வைத்துக்கொண்டு, பெரும்பான்மை மக்கள் நிரந்தரமாய் கேவலமாவதை மதியாமல்,—அதுவே சரியான நியதி என்று சொல்லிக்கொண்டு கூட—ஆண்டு அனுபவித்து வருவதுடன் அவற்றை உத்தரவாதம் செய்வதற்கு வேண்டிய தேசிய, ஸர்வதேசிய அதிகாரமும் செல்வாக்கும் தம் கைகளிலிருந்து கை நழுவி விடாமல் உஷாராகப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். இதை ஒரு நாடு சம்பந்தப்பட்ட வரை முதலாளித்துவம் என்றும், எல்லைக்கு அப்பால் வியாபிக்கையில் ஏகாதிபத்தியம் என்றும் குறிப்பிடுகிறோம். பாஸிஸம் என்பது இந்த இரண்டின் கோரங்கள் எல்லாம் (திறமையின்மை நீங்கலாக) ஒன்று சேர்ந்து விசுவரூபம் எடுத்துள்ள ஒரு ராக்ஷஸத் தோற்றமாகும். இவை மூன்றுமே யுத்த கிருமிகளைக் கொண்ட கோட்பாடுகள். எனவே, விஞ்ஞானம் இவற்றின் அடிமையாக இருக்கும்வரை யுத்தங்களும் அதன் பெயரால் எண்ணிறந்த வகைகளில் அநீதிகளும் நடக்கத்தான் செய்யும். எல்லோரும் அடித்துக்கொண்டு மடிந்து சோர்ந்து போனபின்னர் சற்று குற்றுயிரான நிலைமையில் சமாதானம் தலை தூக்கப் பார்க்கலாம். ஆனால் விஞ்ஞானம் மறுபடியும் புதிய, பெரிய வழிகளில் மக்களை நிர்மூலப்படுத்தும் உபகரணங்களை சிருஷ்டிக்கவே உபயோகப்படும். இவை நிச்சயமாக மீண்டும் யுத்தம் தவிர வேறு எதிலும் கொண்டுபோய் விடமாட்டா. எனவே இப்பொழுது நடைபெறும் யுத்தத்துக்குப் பிறகு செய்ய உத்தேசிக்கப்படும் ஏற்பாடுகளில், விஞ்ஞானத்தை பரிபூரணமாய் (கொஞ்சங்கூட சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில்) விடுவித்து அதை, மனிதனைக் கொல்லும் சுபாவ விரோத வேலைகளைச் செய்யும் அடிமையாக்காமல், மனித வாழ்க்கையை மேம்படுத்தும் தோழனுக்குவதற்கு ஏதாவது யோசனைகள் இருக்கின்றனவா என்று பெரும்பாண்மையோரான உலகமெங்குமுள்ள ஏழை மக்கள் விசாரணை செய்வது இயற்கையே. இந்த யுத்தத்திற்குப் பிறகு கூட, முன் போலவே, ஒரு சிலர் உலகை படுகுழியில் தள்ளும் தர்மமே புதிய ரூபத்திலோ அல்லது பழைய போர்வையிலே நீடிப்பதாயிருந்தால் எவ்வளவு பசப்பாகப் பிரசாரம் செய்தாலும், யுத்த இயந்திரத்துக்கு தூபம் போட மனமுவந்து பெரும்பான்மையோர் இன்று எப்படி சம்மதிப்பார்கள்? அவர்களைக் கட்டாயப் படுத்த முடியும். ஆனால் எந்த கட்டாய ஏற்பாட்டுக்கும் வரையறுக்கப்பட்ட பலந்தான் உண்டு. அந்த பலம் பாஸிஸ்ட் ராக்ஷஸனை நிர்மூலமாக்குவதற்கு போதுமானதாயிருக்குமென யாரும் கருதமாட்டார்கள். மக்களின் சம்மதம் பெற்ற, மனப்பூர்வமான முயற்சியிலிருந்து தான் பாஸிஸத்தை வேரறுக்கக் கூடிய சக்திகள் பிறக்க முடியும். அத்தகைய சக்திகள் ஜனிப்பதற்கு ஒத்தாசையாக ரூஸ்வெல்ட்-சர்ச்சில் பிரகடனத்திலும், ரஷ்யாவுடன் அமெரிக்காவும் பிரிட்டனும் நடத்தப் போகும் சம்பாஷணையிலும் அம்சங்கள் இருக்கின்றனவா என்பதை உலகமாந்தர் ஆவலுடன் விவாதித்து வருகின்றனர்.

## ரூஸ்வெல்ட்-சர்ச்சில் திட்டம்

நம் நாட்டில் ஆட்சிபுரியும் அந்நிய ஏஜெண்டுகளும் அவர்களைத் தாங்கி நிற்கும் நம் தேசத்திலுள்ள பரசிரமஜீவிகளும் செய்வதுபோல் ஹிட்லர் பூச்சாண்டியை வலியுறுத்தி பீதியை கிளப்பும் பிரசாரம், கோறும் பலனைத்தராது. நம்மைப்போன்ற நிலைமையில் ராஜீய அல்லது பொருளாதார அடிமைகளாயிருந்து வருவோர்தான் உலகமெங்கும் பெரும்பான்மையாயிருப்பவர்கள். 'சுதந்திர'ம், 'ஜன நாயகம்' போன்ற பசப்பு வார்த்தைகளை மட்டும் உபயோகித்து, பிரத்தியட்ச நிலைமையில் அதை அடியோடு மறுத்து வஞ்சிக்கப்படும் பெரும்பான்மையோருக்கு எதிர்காலத்தைப்பற்றி உண்மையான நம்பிக்

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: (கல்கத்தா) 1048. (2 லைன்க

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா.



சௌரிங்கீ ஸ்கோயரில் நம்முடைய சொந்தக் கட்டட வேலை நடந்தேறிவருகிறது. இக்கட்டடத்தின் அஸ்திவாரக்கல் 1941௵ ஜூலை௴ 31உ ஆசார்யா ஸர். பி. ஸி. ராயால் வைக்கப்பட்டது.

●

கிளை ஸ்தாபனங்கள்:
லாகூர்; பெனாரிஸ்;
பாட்னா; பகல்பூர்;
டார்ஜிலிங்; திப்ருகா

---

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. 25 லக்ஷம்

ஸப்ஸ்க்ரைப் செய்ய பட்ட மூலதனம்
ரூ. 8,50,000

கொடுக்கப்பட்ட மூலதனம்
ரூ. 2,50,000

★

வருமான வரிக்குட்பட டிவிடெண்ட் முதல் வ ஷத்தில் (100-க்கு வீதம்) கொடுக்கப்ப டது.

100-க்கு 6-வட்டி வீத ஒருவருஷ பிக்ஸட் டெ ஸிட்டுகளை ஒத்த கொள்கிறோம். செப்ட பர் 1உ யிலிருந்து வட் 100-க்கு 5-வீதம் குறை துக் கொடுக்கப்படும்.

●

நமது கிளை ஆபீஸ், ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ரிடயர்ட் ஸூபெரிண்டெண்ட் ராவ்சாகிப் நடேசய்யரின் நிர்வாகத்தில், திறந்து வைத்து நடத்தப்படுகிறது.

விலையாகும்படியான எல்லா ஷேர்கள், கவர்ன்மெண்ட் செக் ரிடிகள் முதலியவற்றில் நாங்கள் வியாபாரம் செய்கிறோம்.

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிபோர்ட்"டுக்கு எழுதுங்க வருஷ சந்தா ரூ. 3. மாதிரி பிரதி கேட்பவர்களுக்கு அனுப்பப்படும்.

இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்க ஏஜெண்டுக தேவை.

கையைத் தரும் பங்கை ஏதாவது இந்த பிரகடனத்தில் இருக்கிறதா என்று ஆராய்வதுதான் சரியான வழி.

இந்தப் பிரகடனம் ஜனங்கள் மனதை இப்பொழுது திருப்தி செய்விக்க முயலும் தற்கால சாந்தியா? அல்லது, நிலைத்திருக்கக்கூடிய உண்மை யுணர்ச்சியுடன் நிறைவேற்றி வைக்கப்படும் என்ற நம்பிக்கை தரும் அம்சங்கள் இதில் இருக்கின்றனவா? ஒவ்வொரு யுத்தத்தின் போதும் உடனடியாக மக்களைத் தட்டிக் கொடுத்து வெற்றிக்கு அவர்களது உழைப்பை பயன் படுத்திக்கொள்வதற்காக ஆளும் வர்க்கத்தினர் அநுஷ்டிக்கும் உபாயங்களில் ஒன்று பிரத்தியட்ச தேவைக்காக லட்சியவாதம் என்ற மேக மண்டலத்தில் சஞ்சரிக்க புறப்பட்டு விடுவதுதான். ரூஸ்வெல்ட்-சர்ச்சில் பிரகடனம் இத்தகையதோர் சூழ்ச்சிதானா? பிரெஸிடென்ட் வில்ஸன் சென்ற மஹாயுத்தத்தின் இறுதியில் கிளப்பிய '14-பாயிண்டுகள்' புகைந்து போனது போல் இந்த லட்சியத் திட்டமும் போய்விடுமா?

இந்த 8-லட்சிய திட்டத்தின் கருத்துகள் வருமாறு:

(1) பிரிட்டனும் அமெரிக்காவும் இந்த யுத்தத்தின் பயனாக தமது ஏகாதிபத்தியங்களின் நிலப்பரப்பை விஸ்தரித்துக் கொள்ளப் போவதில்லை என உலகிற்கு உறுதி கூறுகிறார்கள். வேறு வித சுய நல விஸ்தரிப்பும் இராது என்று பொதுப்படையாக அறிவிக்கிறார்கள்.

(2) தேசங்களின் எல்லைகள் மாற்றியமைப்பதில் ஜனங்களின் விருப்பம் முக்கியமாக மதிக்கப்படும்.

(3) தமது ராஜாங்க அமைப்பை தாமே நிர்ணயித்துக்கொள்ள எல்லா மக்களுக்கும் உரிமை உண்டு என்பதை பிரிட்டனும் அமெரிக்காவும் ஒப்புக் கொள்கின்றன. பலவந்தமாக சுயாட்சியும் ராஜாங்க கௌரவமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ள மக்களுக்கு சுயாட்சியும் ராஜாங்க உரிமையும் மீட்கப்பட வேண்டும் என்பது பிரிட்டன், அமெரிக்கா விருப்பம்.

(4) இப்போதுள்ள பொறுப்புகளுக்கு பாதகமில்லாமல் பொருளாதார தேவைகளுக்கான மூலப் பொருட்களில் எல்லா நாடுகளுக்கும் சமமான வசதிகள் அளிக்கப்படும்.

(5) பொது மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கான ஸர்வ தேசிய ஒத்துழைப்பு.

(6) நாஜி கொடுமை ஒடுக்கப்பட்ட பிறகு எல்லா நாடுகளையும் பயம், வறுமை ஆகிய இரண்டு பீடைகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவது.

(7) கடல் பிரயாண சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு.

(8) ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் இவற்றுடன் சேர்ந்து போரிடும் மற்ற நாடுகளும் நிராயுதபாணிகளாக ஆக்கப்படும். ஆக்கிரமிப்பு நாடுகளுக்குத்தான் அது முதலில் அமுலுக்கு வரும். காரிய திருஷ்டியுடன் கவனித்தாலும், ஆத்மீக திருஷ்டியுடன் தர்ம நீதி தத்துவப்படி கவனித்தாலும் பலாத்காரம் கைவிடப் படவேண்டியதே.

## புது நாகரிகம் ஏற்படுமா?

இந்த திட்டத்தின் மூலம் ஒரு புது நாகரிகம் உலகில் ஏற்பட்டுவிடுமா? இந்த திட்டத்தை சற்று ஆராய்ந்தால் இதற்குப் பதில் கிடைக்கும்.

(1) பிரிட்டனும் அமெரிக்காவும் தான் இப்பொழுதுள்ள 'புளியேப்ப' அரசாங்கத் தொகுதிகள். இனிமேல் நிலப்பரப்பு வேண்டாம் என்று அவை சொல்லுகின்றன. அப்படியே உண்மையுணர்ச்சியுடன் நடப்பதாக வைத்துக் கொண்ட போதிலும் இது விசேஷமாய் குதூகலிக்க வேண்டியதாயிருக்க முடியாது. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தையும் ஸர்வ வியாபகமாயுள்ள பண ஆதிக்கத்தையும் நிலப்பரப்பையும் முறையே அனுபவிக்கும் இந்த இரண்டு வல்லரசுகள் உலகை தம் முதலாளித்துவ ஏகாதி பத்திய கிடுக்கி முனையில்

வைத்துள்ளன. இந்த பொருளாதார ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட மாட்டாது என்றோ அல்லது கைவிடப்படும் என்றோ பிரஸ்தாபம் இல்லை.

(2) மக்களின் சுய நிர்ணய உரிமையைப் பற்றிய இரண்டாவது அம்சம் நவீன ஆக்கிரமிப்புக்காரர்களின் அடிமைகளாயுள்ள மக்களை மட்டும் கட்டுப்படுத்துமா, அல்லது சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முந்தியும் அடிமைகளாக்கப்பட்ட நம் போன்றோருக்கும் வழி பிறக்குமா என்பது வழவழாவென மழுக்கப்பட்டிருக்கிறது.

(3) இந்த பகுதியை சற்று ஆழ்ந்து கவனித்தால் இந்த உத்தேச ஏற்பாடு நவீன அடிமைகளுக்கே ஒழிய புராதன அடிமைகளுக்கு அல்ல என்று தொனிக்கிறது. அதாவது வெள்ளையர்களின் அடிமைகளாய் வாழும் பெரும் பான்மையோருக்கு சுதந்திரம் உத்தரவாதம் செய்யப்படவில்லை என்று தான் பொருள்.

(4) இதுவும் முந்திய கருத்துடன் பிணைக்கப்பட்டது. மூலப் பொருள் வசதிகளின் சம விநியோகம் கற்பனையில் தித்திக்கும். 'இப்போதுள்ள பொறுப்புகளுக்கு பாதகமில்லாமல்' என்ற ஒரு வில்லங்கத்தை சேர்த்திருக்கிறார்கள். 'இப்போதைய பொறுப்புகள்' என்பது இப்பொழுது இருந்து வரும் உற்பத்தி-விநியோக உரிமையாளரின் லாபத்தை உத்தரவாதம் செய்வதற்கான வசதிகள்' என்று தான் பொருள்பட முடியும். இந்தியா, சீனா, ஆப்ரிகா, தென் அமெரிக்கா, ஒருக்கால் ரஷ்யா போன்ற நாட்டினர் மூலப் பொருள்களை மட்டுமே சப்ளை செய்ய வேண்டுமென்று 'ஸர்வதேச நியதி' என்ற பெயரால் விலங்குகளை பிணைத்துவிடக் கூடும். வெற்றியடைந்து சமாதான மகாநாட்டில் உலகின் தலை விதியை எழுதப் புறப்படுவோர், இடைக்கால ஏற்பாடு என்று பெயரிட்டு, அதை நடத்தி வைப்பதற்கு அவசியம் என்று பறைசாற்றி, மேலே குறிப்பிட்ட நாடுகளை தங்கள் கூட்டான மாண்டேட் பிரதேசங்களாக (ஒரு எஜமானுக்கு பதில் அதிகமான எஜமான்களுக்கு வணங்கும் ஏற்பாடு) செய்துவிடக் கூடும் என்ற பீதி இந்த ஏற்பாட்டினால் தணியவில்லை.

(5, 6,7) மூன்றும் புது உலக ஆசையைக் காட்டி, பாட்டாளி மக்களின் முழு ஒத்துழைப்பையும் இப்பொழுது பெறுவதற்கான உபாயங்கள் தான். விஞ்ஞானம் விடுதலை பெறுமா என்று நிச்சயமாய் சொல்வதற்கில்லை.

ஆயுதப் பரிகாரணம் முதலில் ஆக்கிரமிப்புக்காரர்களுக்கு மட்டும் என்றிருப்பது பழைய வெர்ஸைல்ஸ் பாடந்தான். இது அபாயம் நிறைந்த யோசனை.

இவை தவிர பிரிட்டனையும் அமெரிக்காவையும் இப்பொழுது பிணைத்து வரும் சில சக்திகளின் தன்மையையும் அறிய வேண்டும். அப்பொழுதுதான் சரியான ஸந்நிவேசத்தில் இவற்றை விமர்சனம் செய்ய முடியும். சுய நல நோக்கம் இல்லாமல் அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்ய முன் வரவில்லை என்பதை ரூஸ்வெல்ட் பட்டவர்த்தனமாக பல வாரங்களுக்கு முன் கூறி யிருக்கிறார். பிரான்ஸின் வீழ்ச்சிக்குப் பின் அவ நம்பிக்கையில் மூழ்கியிருந்த அமெரிக்காவை பிரிட்டிஷ் தாப்பில் வசித்தது, அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானாதிபதியாயிருந்த லார்ட் லோதியன், தன் கடைசி பிரசங்கத்தில் (1940 கடைசியில்) கொடுத்த சில உறுதி மொழிகள் தாம்.

"நீங்கள் எங்களுக்கு உதவியளிப்பீர்களாகில் நாங்கள் கைவிடமாட்டோம். ஐரோப்பிய கண்டத்தினர் புரட்சிக் கருத்துக்களில் ஊறிப் போனவர்கள். வெற்றிக்குப் பிறகு அவர்களைக் கொண்டு ஒரு புதிய ஸர்வதேச சங்கத்தை ஏற்படுத்துவது அசாத்தியம். நம்மிரு நாடுகளுந்தான் உலகின் போக்கை நிர்ணயித்து, நிர்ப்பந்தமற்ற தொழில் முறையை நிலை நாட்ட முடியும்" என்று பொருள் படும்படி லார்ட் லோதியன் கூறினார். பச்சையாகச் சொன்னால், யுத்தத்துக்குப்

பிறகு பிரிட்டிஷ்-அமெரிக்க முதலாளித்துவமே கூட்டாக உலகை ஆளும் என்ற நம்பிக்கையை அவரது பிரசங்கம் உண்டு பண்ணுவதாக இருந்தது. இதற்குப் பிறகுதான் அமெரிக்கா அதிவேகமாக யுத்தத்தை நோக்கி விரைந்து வரத் தொடங்கியது என்பது குறிப்பிட வேண்டிய விஷயம். இந்த இரண்டையும் மனதில் வைத்துப் பார்த்தால் ரூஸ்வெல்ட்-சர்ச்சில் திட்டத்தை சற்று தெளிவாக மதிப்பிட முடியும். இதை அடியோடு மறந்துவிட்டு இந்த திட்டத்தை சுயம்புவான சரக்கு என்று ஏற்றுக் கொள்வது சற்று கடினமாகத்தான் இருக்கிறது.

கறுப்பர்களுக்கும் இந்த திட்டத்தின் கீழ் கதி மோட்சமுண்டு என்று பிரிட்டிஷ் தொழிற் கக்ஷி கருதுவதாக அதன் தலைவர் ஆட்லி கூறியிருப்பது அல்ப சந்தோஷிகளுக்கு ஆறுதலளிக்கலாம். சமாதானம் வருகையில் பிரிட்டிஷ் தொழிற் கக்ஷிக்கு எவ்வளவு தூரம் செல்வாக்கு இருக்கும்படியாக, கன்ஸர்வேடிவ்கள் விட்டு வைத்திருக்கப் போகிறார்கள்? அப்படியிருந்தாலுங்கூட இதுவரைபோல் இனியும், பிரிட்டனுக்கு வெளியே தொழிற்கக்ஷியினர் ஏகாதிபத்திய வாதிகளாகவே தரிசனமளிக்க மாட்டார்கள் என்பதற்கு அறிகுறிகள் காணோம்.

## ரஷ்யாவின் நிலைமை

ரஷ்யா இந்த பிரகடனத்தை வரவேற்றிருக்கிறது. ரஷ்ய பிரசாரகர்களும் தங்கள் லட்சியம் 'சுதந்திர மக்களடங்கிய உலக சம்மேளனம்' என்று சொல்லி வருகிறார்கள். ரஷ்யா இதற்கு ஆதரவு தருவது பிரத்தியட்ச ராணுவ நிலைமையின் தேவைகளை அனுசரித்ததாகவே இருக்குமெனத் தோன்றுகிறது. சமாதான மகாநாடுகளில் போதிய செல்வாக்குடன் கூட ரஷ்யா இடம் பெற்றிருக்குமாகில், இந்த பிரகடனக் கருத்துக்கள் விரிவான அடிப்படையில் உண்மையுணர்ச்சியுடன் நடத்தி வைக்கப்படுவதற்கு நிச்சயமாய் பாடுபடும் என்று நம்பலாம். ரஷ்யா செல்வாக்கு பெற்றிருப்பது அதன் ராணுவ நிலைமையையே பொறுத்ததாயிருக்கும். ராணுவ, பொருளாதார பலமே ராஜதந்திர பேரங்களில் நிர்ணயமான முடிவுகளைச் செய்ய திரைமறைவிலுள்ள சாதனமாயிருப்பது. சமாதானம் வரும் பொழுது ரஷ்யாவின் பலம் இப்பொழுது இருப்பதைவிட குறைவாக இருந்தால், அதன் சொல் அம்பலமேறப் போவதில்லை. அந்த நிலைமையில், சென்ற யுத்தத்துக்குப் பிறகு போல், உலகமெங்குமுள்ள முதலாளி சக்திகள், ஏதாவது ஒரு நிலைமையை வியாஜமாகக் கொண்டு ஸோவியத் முறையைக் கவிழ்க்க வேறு ஒரு 'குறுக்கிடும் போரை' மேற்கொண்டால் ஆச்சரியப் படவேண்டியதில்லை. ரஷ்யா மிகப் பெரிய வெற்றி பெறுவது பிரிட்டிஷ் பணக்கார கோஷ்டிகளால் பேராபத்தென கருதப் படலாகாது என்று பிரிட்டனில் பொறுப்புள்ள வட்டாரங்களில் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருப்பது எதிர்காலத்துக்கு அர்த்த புஷ்டியானது.

## பாமர மக்களின் தெளிவான கடமை

நல்ல எண்ணம் நிறைந்த இந்த 8-லட்சிய திட்டம் புது உலகை சிருஷ்டிக்க வேண்டுமானால், உலகமெங்கும் பெரும்பான்மையோராயுள்ள பாட்டாளி மக்களும் லட்சிய வாதிகளான அறிவாளிகளும் இப்பொழுதிருந்தே திடமான, உறுதியான புரட்சியை தம் மனோபாவத்தில் முதலிலும், நியாயம் வழங்காவிடில் அதை ஸ்வீகரித்துக் கொள்வதற்கு வேண்டிய ஸ்தாபன, இதர பலங்களையும் உடனடியாகப் பெறுவதற்கு வேண்டிய நிலைமைகளை சிருஷ்டிப்பதிலும் தாமதமின்றி கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில், 8-லட்சிய திட்டப்படி அமைக்கப்படும் உலகம் பெருமாள் பெரிய பெருமாள் ஆன கதையாகவே முடியலாம்.

# *தொலைகிழக்கு நாடுகளுக்கு வழி

[அ. முத்தையா. எம். ஏ., பொருளாதார உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி]

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகத்திலேயே மிகப்பெரியது. இச் சாம்ராஜ்ய நாடுகள் உலகிற் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. பல வகையான சீதோஷ்ணப் பரப்புகளில் அவை இருக்கின்றன. பல வகைப் பொருள்களை விளைவிக்கின்றன.

பல வேறு வீரதேசங்களிலும் இருக்கும் இப்பிரிட்டிஷ் நாடுகளின் முன்னேற்றமானது, அவைகளுக்கு இடையே இருக்கும் நெருக்கத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. இப்பல பாகங்களுக்கும் இடையே பல வகைத் தொடர்புகள் இருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று பொருளாதார வகையில் மிகவும் பயன் உடையனவாக இருக்கின்றன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஒரு பெரிய தனி உலகம் என்று கூறலாம். அந்த உலகின் எல்லா பகுதிகளுடையவும் திறம் பட்ட நிலையானது சிறந்த போக்கு வரவு சாதனங்களால் ஏற்படுகிறது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் போக்கு வரவு சாதனங்களில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. நீராவிக் கப்பல்களும் இரும்பு எஃகு முதலிய பொருள்களால் கட்டப்பட்ட பெரும் கப்பல்களும் நெடுந்தூரம் என்னும் பெருந்தடையை நாசஞ் செய்து விட்டன. அதற்கு முன் சிறிது தூரங்கூட கொண்டு செல்ல முடியாத பல பண்டங்களும் குறைந்த செலவில் பல்லாயிரக்கணக்கான மைல்கள் ஏற்றிக்கொண்டு போகப்பட்டன. கடலில் செல்லும் பொருள்களின் அளவு மதிப்பு என்னும் இரண்டும் மிகவும் அதிகமாயின.

பல நூற்றாண்டுகளாகவே கடலில் ஆட்சி செலுத்திய பிரிட்டிஷார் இம் மாறுதல்களையும் தங்கட்கு முழுப் பிரயோசனமாகும்படி செய்து கொண்டனர். இரும்பு அல்லது எஃகு நீராவிக் கப்பல்களைக் கொண்டு பெருவாரியான வியாபாரம் நடத்து வாராயினர்.

ஆங்கிலேயருக் குள்ள கடல் ஆதிக்கம் இருவகைப் பயனை அளிக்கிறது. (1) வியாபார ஆதிக்கம். (2) அரசாதிக்கம். ஆங்கிலேயரின் கடல் ஆதிக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளை ஒன்று படுத்துகிறது. அவைகளிடையே ஐக்கியத்தை உண்டாக்குகிறது. அவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்று அதிக தூரத்திலிருப்பினும் அவைஒன்றாக ஒரே இடத்தில் இருப்பது போல் நெருங்கி உள்ளன. அந்த தொடர்பு, நெருக்கம் எல்லாம் பிரிட்டிஷாரின் கடல் ஆதிக்கமாகிய அஸ்திவாரத் தின்மேல் கட்டப் பட்ட பெரும் கோட்டைகளாகும்.

“திரைகடலோடியும் திரவியம் தேடு” என்பது தமிழர் யாவரும் கேட்டறிந்த ஒரு பெருஞ் சொல். அதை அநுஷ்டானத்திற் கொண்டுவந்து அதனால் பெரும் பயனடைந்திருப்பவர்கள் ஆங்கிலேயர். திரை கடலோடி அவர்கள் திரவியத்தைத் தேடியதேயன்றி, பெரும் பெரும் நாடுகளையும் கைக்கொண்டு அவைகளால் பெரும் பயனையும் அடைகிறார்கள். இனியும் பெரும் பொருள் திரட்டுவதற்கும், தம் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடுகளைக் காப்பாற்றுவதற்கும் ஆங்கிலேயரின் கடல் ஆதிக்கம் இன்றியமையாத தொன்றாகும்.

கடல் ஆதிக்கம் என்றால் முக்கியமாகக் கடல் வழிகளில் ஆதிக்கம் என்பதுதான். கடல் வழிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமான ஒரு உடலுக்கு உயிர் நாடிகளாகும். அவ்வுயிர் நாடிகளுக்கு ஒரு ஊனமும் ஒரு கேடும் சேராதபடி காப்பது ஒரு பெரிய பொறுப்பு. ஒரு முக்கிய தேவையுங்கூட. இக் கடல் வழிகளில் கப்பற் போக்கு

* சமீபத்தில் சென்னை ரேடியோவில் பேசியது.

வரவுக்கு ஒரு இடைஞ்சலும் இருக்கக் கூடாது. ஓர் உடலுக்கு இரத்த ஓட்டம் எத்தனை அவசியமானதோ அத்தனை அவசியமானது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு கடல் வழிகளின் பெருக்கம்.

இங்கிலாந்திலிருந்து பல பாகங்கட்கும் கடல்வழிகள் செல்லுகின்றன. அவைகளில் பலவகையில் மிக முக்கியமான கடல்வழி கிழக்கு நாடுகட்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்கும் செல்லும் வழியாகும். இந்த தூரக் கிழக்கு நாட்டு வழியானது வியாபார முறையில் நோக்கினும் மிக மதிப்புப் பெற்றது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கட்டுக் கோப்பிற்கும் பாதுகாப்புக்கும் மிகமிக அவசியமானது. சூயஸ் கால்வாய் தோண்டப்பட்டதன் முன்பு இது நீண்ட தூரமுடிய வழியாக இருந்தது. ஏனெனில் அப்போது நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கப்பல்கள் செல்லவேண்டி இருந்தது. இப்போதுள்ள வழியோ குறுக்கு வழி.

சூயஸ் கால்வாய் வழியாக தூரக் கிழக்கு நாடுகட்கு வரும் அந்த வழி கொழும்பு வழியாகப் போகிறது. கொழும்பிலே அது இரண்டு முக்கிய கிளைகளாகப் பிரிகின்றது. ஒன்று ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய இடங்கட்குப்போவது. மற்றொன்று மலாக்கா ஜலசந்தி வழியாக சிங்கப்பூர், ஹொங்காங், ஜப்பான் முதலிய இடங்கட்குப் போகிறது. இக் கடல்வழி இப்போதும், எப்போதும் முன் நிற்கும் முக்கிய வழியாகும். இக் கடல் வழி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தாருக்கு அச் சாணியாகத் திகழ்கின்றது. இந்த வழி தென்கிழக்கே பிரிட்டிஷ் நியூகனியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய இடங்கட்கும் போகிறது.

இப் பெருவழியிட் பல கிளை வழிகளும் வந்து சேருகின்றன. ஆப்பிரிக்காவிலிருந்து வரும்வழி ஒன்று இவ் வழியில் ஏடனிலும், கொழும்பிலும் சந்திக்கிறது. பம்பாயிலிருந்து ஒரு வழி இதை ஏடனில் சந்திக்கிறது. கல்கத்தாவிலிருந்து சென்னை வழியாகவோ அல்லது நேராகவோ வரும் வழியானது கொழும்பில் இந்தப் பெரும் வழியில் கலக்கிறது. இரங்கூனிலிருந்தும் ஒரு வழி கொழும்பில் வந்து சேருகிறது. இவைகளிலிருந்து இந்த "தூரக் கீழ் நாடுகளின்வழி" எத்தனை முக்கியமானதென்பது எளிதில் புலப்படும்.

இப் பெரும் கடல்பாதையின் வழியாக மிகப் பெரிய வாணிபம் நடைபெறுகிறது. மேல் நாடுகட்கு மிகவும் இன்றியமையாத பொருள்களான மூலப் பொருள்களும் தாதுப் பொருள்களும் இவ் வழியாகத்தான் கொண்டு செல்லப்படுகின்றன. மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன் தீவுகள், சைனு ஜப்பான் முதலிய பல இடங்களுடன் நடக்கும் மேல் நாடுகளின் வர்த்தகம் இவ் வழியேதான் நடைபெருகிறது.

பிரிட்டிஷ் மலேயாவானது அரசாட்சி வசதிக்காக ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்ட்ஸ், பிடரேட்ட்மலேயா ஸ்டேட்ஸ், நான்—பிடரேட்டெட் மலேயா ஸ்டேட்ஸ் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் வியாபாரம், பொருளாதாரம் இவைகளைப் பொறுத்த வரையில் ஒரே தேசப் பரப்பேயாகும். உலகத்திலே ஆண்டுதோரும் எடுக்கப்படும் தகரம் அதாவது "டின்"னில் பாதி மலேயாவில் கிடைக்கிறது. மலேயாவிலே ரப்பரும் மிகவும் விசேஷம். டச்சுக் கிழக்கிந்திய தீவுகளிலிருந்து காப்பி, டீ, கொக்கோ, சர்க்கரை, அவுரி, வாசனைச் சாமான்கள், புகையிலை, ரப்பர், கொப்பரை, தகரம் பெட்ரோலியம், நிலக்கரி முதலியவை ஏற்றுமதி ஆகின்றன. பிலிப்பைன் தீவுகளிலிருந்து மணிலாஹெம்ப்எனப்படும் சணல் வாழை, சர்க்கரை, புகையிலை, கொப்பரை முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிரிட்டிஷ் பொர்னியோவில் ரப்பர், பலவகை மரங்கள், கொப்பரை இவை மிகவும் அதிகம்.

இப் பல பாகங்களில் விளையும் பலவகை உணவுப் பொருள்களும் மூலப் பொருள்களும் இந்த தூரக்கிழக்கு நாடுகளின் கடல்வழியாகத்தான் மேல்நாடுகளில் போய்ச் சேருகின்றன.

# நிரந்தரமான வெற்றியின்

# அறி குறி

சென்ற 33 வருஷங்களில் சொஸைடிக்கு ஏற்பட்டுள்ள விசேஷ அபிவிருத்தியை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமுலிலுள்ள பாலிஸிகள் | ரூ. | 17 | கோடிக்கதிகம் | | |
| ஆயுள் நிதி — | ரூ. | 3 | கோடி | 10 | லக்ஷத்திற்கதிகம் |
| மொத்த ஐவேஜுகள் | ரூ. | 3 | ,, | 56 | ,, ,, |
| செலுத்தப்பட்ட உரிமைகள் (1907 - 39) | ரூ. | 1 | ,, | 97 | ,, ,, |

**நம்பிக்கையான ஊழியத்திற்கு புகழ்பெற்றது.**

## ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்".
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா.

சென்னை பிராஞ்சு:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
அரண்மனைக்கார தெரு, சென்னை.

இக்கடல் வழிக்கு நடு நாயகமாக இருப்பது சிங்கப்பூர். தூரக் கிழக்கு நாடுகள், இந்தியா, ஆஸ்திரேலியா, பசிபிக் பிரதேசங்கள் இவைகளைக் காப்பதற்கு சிங்கப்பூர் மிகவும் அவசியமானது. சாதாரண காலங்களிலேயே நாளொன்றுக்கு 20 கோடி பவுன் மதிப்புள்ள பிரிட்டிஷ் கப்பல்களும் சாமான்களும் சிங்கப்பூர் வழியாகச் செல்லுகின்றனவென்றால் இவ்வூரின் முக்கியம் இவ்வளவென்பதை ஒருவாறு அறியக்கூடும். உலகத்தில் கிடைக்கும் ரப்பரில் மூன்றில் இரண்டு பங்கும், உலகில் எடுக்கப்படும் தகரத்தில் நூற்றுக்கு அறுவது பங்கும், இத் துறைமுகத்தின் வழியாக உலகிற்கு அளிக்கப்படுகின்றன. மலேயாவிலிருந்து சாதாரண காலங்களில் ஏற்றுமதியாகும் ரப்பரின் மதிப்பு வருஷம் ஒன்றுக்கு 4 கோடி பவுனாகும்: தகரத்தின் மதிப்போ 2 கோடி பவுனாகும்.

சிங்கப்பூர் பெரிய "இறக்கேற்றுத் துறை"யாக அதாவது பெரிய பண்டசாலையாகவும் இருக்கிறது. பெட்ரோல், எண்ணை, கெரோஸின், அரிசி, டின், ரப்பர் முதலிய பண்டங்கள் சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப்பட்டு அங்கிருந்து பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. அப்படி ஏற்றுமதி செய்யப் படுகின்ற எண்ணையில் மதிப்பு மாத்திரம் சுமார் ஐம்பது லட்சம் பவுன்.

சமாதான காலத்திலும் சரி, யுத்தக் காலத்திலும் சரி கிழக்கு ஆர்ச்சி பிளாகோ கீழ் திசையில் சைனா, ஜப்பான், அமெரிக்கா; தென் திசையில் ஆஸ்திரேலியா, நியூசிலந்து: மேல் பக்கத்தில் இந்தியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா: இவைளிடையே நடைபெறும் வாணிபத்திற்கு மத்திய ஸ்தலமாக சிங்கப்பூர் இருக்கிறது.

வாணிபத்தில் மாத்திரமல்ல; சாம்ராஜ்ய பாதுகாப்புக்கு வஜ்ராயுதமாக சிங்கப்பூர் விளங்குகிறது. சிங்கப்பூர் பெரிய கப்பற் படையின் தலமாகும். சிங்கப்பூர் துறைமுகத்தில் பிரிட்டன் சாம்ராஜ்ய யுத்தக் கப்பல்களை அத்தனையையும் நிறுத்தி வைக்கலாம். அது சாமான்ய ஒரு துறைமுக மாத்திரமல்ல: பெரிய கப்பல் தொழிற்களம். கப்பற்படையின் நிலைக்களம். சுமார் 20-வது மைல் சதுர விஸ்தீரணமுள்ள இக்கப்பல் துறை முகத்தில் யுத்தக் கப்பல்களைக் கட்ட, பழுதுபார்க்க, யுத்த தளவாடங்களைத் தயாரிக்க, பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கப்பற் படை இதை நிலைக்களமாக வைத்துக்கொண்டு, சைனாவை அடுத்த கடல்கள், இந்து மகா சமுத்திரம், பசிபிக் மகா சமுத்திரம் இவைகளில் பல பெரிய காரியங்களைச் சாதிக்கலாம். ஆஸ்திரேலியா, நியூசிலந்து நாடுகள் தங்கள் பாதுகாப்புக்கு சிங்கப்பூரை முக்கிய அரணாக மதிக்கின்றன. இந்தியாவின் காப்புக்கு சிங்கப்பூர் மிக முக்கியமானது.

ஜப்பான் டச்சு நாடுகளுடைய வற்புறுத்தலின்பேரில் தென் பசிபிக் பக்கங்களில் ஏதாவது கலகம் விளைக்குமோ என ஒவ்வொரு நாளும் அஞ்சப்படுகிறது. அப்படி ஏதேனும் நேரிடுமானால் சிங்கப்பூரையும் தூரக் கீழ் நாட்டுவழியையும் விடச் சிறந்த பாது காப்புச் சாதனங்கள் வேறில்லை.

எனவே தூரக் கீழ் நாட்டுக் கடல் வழியும் அதற்கு அணிகலனாகத் திகழும் சிங்கப்பூரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு சாமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் பல வகையில் மிகவும் பயன் படுகின்றன என்பதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முறுக்கேறிய நரம்புகள் அவை என்பதும் விளங்கத் தெரிகின்றன.

## அறிக்கை

நமது காரியாலயம் "5, வெங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூ"ருக்கு மாறி இருப்பதை சந்தாதார்களும், நேயர்களும் கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்

# பரம்பரை ஆழ்வாரும் பாட்டாழ்வாரும்

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.]

எந்த தேசத்திலும் மஹான்களைச் சாதாரண ஜனங்கள் சும்மாய் விடுகிறதில்லை. அவர்களைச் சுற்றி அநேக கதைகளை எழுப்பி விடுகிறார்கள் நம்காலத்துப் பெரியவர்களைப்பற்றியே நமக்கு உண்மையான செய்திகள் கிடைக்கிறதில்லை. காலப் பனிமூட்டம் மறைத்த மஹான்களைப் பற்றி நமக்கு உண்மையான செய்திகள் கிடைக்குமோ?

அச்சான்றோர்களை நாம் சாதாரண மனிதர்களாகக் கருதுகிறதில்லை. நம்மைப் போலச் சுகதுக்கங்களை உடையவர்கள்; நம்மைப்போல வாழ்வுப் புயல்களில் அடிபட்டவர்கள். ஆனால் முள்ளுங்கல்லும், புதரும் அடர்ந்த அடிப்பள்ளத்தில் திகைத்து நாம் நிற்கிற சமயத்தில், தங்கள் பெரும் முயற்சிகளால், வெய்யோன் விரிகதிர் சதா தோய்ந்த ஆத்ம சிகரங்களை அவர்கள் அடைந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

மஹான்கள் நூல்களிலிருந்தே நமக்குச் சரியானபடி அவர்கள் சரித்திரம் கிடைக்கிறதில்லை. தங்களைக்குறைத்துக் கொள்ளுகிறார்கள் அவர்கள். உயர்ந்த லட்சியங்களிலிருந்து தங்கள் வாழ்வைப் பார்க்கிறபொழுது வாழ்வெல்லாம் அவர்களுக்கு ஒருநரகமாய்ப் படும். சிறிய குற்றங்களைப் பெரிதுபடுத்தி பாடியிருப்பார்கள். அல்லது ஆத்ம பெரும்வெற்றியில் மரணத்திற்குத்தான் மரணம் என்று தோள் கொட்டி ஆரவாரம் செய்திருக்கலாம். உதாரணமாக:

'கள்வனேனானேன்' 'கொன்றேன்பல் லுயிரை'' 'மானேய் கண்மடவார் மயக்கிற் பட்டு' முதலிய தொடர்களைவைத்துக் கொண்டு, திருமங்கை ஆழ்வாரைப் பற்றி அவர் கள்வரென்றும், காமத்திலே பொழுதை வாளப் போக்கினரென்றும், பேசதொடங்கிவிட்டார்கள்.

தொண்டர் அடிப்பொடி ஆழ்வாரைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. "மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு" என்ற தொடரை அவர் "திருமாலையில்" பார்க்கிறோம். இதைக் கொண்டு அவர் பாலியம் சிற்றின்பத்தில் கழிந்திருக்க வேண்டும் யென்று ஊகிக்கிறார்கள் சரித்திரக்காரர்கள்.

நம்மவர்கள் சரித்திரம் எழுதுவதாயிருந்தால், மஹான்களைப்பகவானுடைய அம்சங்கள் என்று கூறுவார்கள்: அல்லது பகவானுடைய அருட்பிரகாசத்தின் மேம்பாட்டைக்காண்பிக்க அவர்கள் விரும்பினால் அடியார்களின் பாலிய வாழ்வை நன்றாய்க்கறியை அரைத்துப் பூசி விடுகிறார்கள். பிறகு அவர்களுடைய வாழ்வு அளவுகடந்த சோபையோடு விளங்க வேண்டு மல்லவா?

நம்மாழ்வாரைப் பற்றியகர்ண பரம்பரையை நோக்குவோம்.

தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் தாம்ரபரணி ஆற்றங்கரை மீது திருநகரி யென்ற ஊர் விளங்குகின்றது, நம்மாழ்வார் அவதார ஸ்தலம்: ஆழ்வார்திவ்விய சரித்திரத்தில் தாலாட்டப்பட்டது. அவ்வூரில் திருமாலுக்குப் பரம்பரையாய் அடிமை பூண்டு வந்த வேளாள வருணத்தில் காரியார் அவதரித்தார். அவருக்கு மனைவியாக வாய்த்தவள் உடைய நங்கை என்பவள். இந்தப் பெண்ணும் திருமால் அடியார் குலத்தில் பிறந்தவள்.

திருக்குருகூரில் இவர்கள் இல்லறம் நடத்தி வந்தார்கள். சில ஆண்டு இல்லறம் நடத்து நாளையில், மாமனார் வேண்டுகோளின் படி இவர் திருவண் பரிசாரத்தை அடைந்து அங்குச் சிலகாலம் தங்கினர். ஊருக்குத் திரும்புங்கால் திருக்குறுங்குடிக்கு இவர்கள் போனார்கள். தங்களுக்கு மக்கள் பேறு உண்டாவதற்காக அங்கே திருக்கோயில் கொண்ட பகவானைப் பிரார்த்தித்தார்கள். பகவான் தானே

அவதரிப்பதாக அர்ச்சகர் மூலம் தெரிவித்தார்.

திருக்குருகூரில் (திருநகரியில்) உடைய நங்கை கர்ப்பந்தரித்தாள். பிறகு பகவானுடைய அம்சமாகக்கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றும் நாள் அவதரித்தது ஒரு குழந்தை. இக்குழந்தைதான் பிறகு நம்மாழ்வாராக விளங்கிப்பக்தர் உள்ளத்தை ஆட்சி புரிய ஆரம்பித்தது.

பழை, வெயில் முதலியன விழாமல் ஆதிசேஷனே புளியமரமாக தோன்றினார்திருக்குருகூர் கோயிலில்.குழந்தையோ அழவில்லை. பாலுண்ணவில்லை இதை கண்ட பெற்றோர்கள் பகவானின் மீது பாரத்தைப் போட்டு அப்புளியமரத்தில் தொட்டிலைக்கட்டி அதில் குழந்தையை விட்டனர். உலகத்துக்கு மாறுபாடாயிருந்த படியால் அவருக்குமாறன் என்ற பெயர் வந்தது. அஞ்ஞானத்துக்கு இழுத்துச்செல்லும் சடமென்னும் வாயுவை இவர் கோபித்த படியால். இவருக்குச் சடகோபர் என்ற மற்றொரு பெயரும் இட்டார்கள்.

இவர் பதினாறு பிராயமளவும் கண் விழிக்கவில்லை. மௌனத்தோடு இருந்தார். “இப்படியிருக்கும் காலையில் மதுரகவி ஆழ்வார் தேசயாத்திரை செய்து கொண்டிருக்கிற பொழுது ஓர் ஒளி அவர் முன் நடனமாடிற்று. அதை அவர் பின் தொடர்ந்து சென்றார். மலைகள், வனங்கள் வனாந்தரங்கள் இவைகளைக் கடந்து தெற்கே சென்றார் அந்த வெளிச்சம் புளிய மரத்திற்கு வந்ததும் மறைந்து விட்டது. அங்கே மௌனக்கடலில் ஆழ்ந்த ஆழ்வாருக்கு உணர்ச்சியிருக்கிறதோ என்று ஒரு கல்லை யெடுத்தெறிந்தார் மதுரகவி ஆழ்வார்.

ஆழ்வாரும் கண் விழித்தார். ஆழ்வாருக்குப் பேசுந் திறமை இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க, “அசித்திலேயிருக்கிற ஆத்மா எதைக்கொண்டு ஜீவிக்கும் ?” என்ற கேள்வியைக் கேட்டார் மதுரகவி. சரீரத்தின் சுக துக்கங்களை அனுபவித்து அங்கேயே கிடக்கும் என்ற பொருளை மனத்தில் வைத்து “அத்தைத் தின்று அங்கே கிடக்கும்” என்று பதில் சொன்னார் ஆழ்வார்.

இவருடைய ஞான சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவர் அடி பணிந்துவிட்டார் மதுரகவி. தான் ஒரு பிராமணனாயிருந்தாலும் மதுரகவியார், உண்மைக்கு உறைவிடமான நம்மாழ்வாரிடத்தில்தான் தனக்குப் புகலிடமென்று கருதினார். வேதத்தின் உட்பொருளுக்கு உயர்தரமான வியாக்கியானமாய் அமைந்தன நம்மாழ்வாரின் தூயதெய்வ வாழ்வும் அனுபவங்களும் என்ற பெரும் உண்மையைத் தேர்ந்தார் அவர்

“நன்மையால் மிக்கநான் மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலின்
அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையாக சடகோபன் என் நம்பியே.”

“மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள்
நிற்கப்பாடி என்நெஞ்சுள் நிறுத்தினான்.”

என்று உருக்கமாய்ப் பாடுகிறார் மதுரகவி ஆழ்வார்.

மதுரகவி ஆழ்வார் வியந்து பாடுகிற நம்மாழ்வாரின் ஞானக்கண்ணிற்கு முன் எல்லாத் திருப்பதிகளிலும் வீற்றிருக்கும் தெய்வங்கள் தோன்றின. காட்சிகளைக் கண்ட ஆழ்வார் உள்ளத்தில் பக்தி வெள்ளம் கடல்போல் பொங்கி யெழுந்தது. அக்கடல் ஒலியைத்தான் ‘திருவிருத்தம்’ ‘திருவாசிரியம்’ பெரிய ‘திருவந்தாதி’ ‘திருவாய்மொழி’ முதலிய நூல்களில் நாம் கேட்கிறோம்.

கடைசியில் இவர் திருநாடு அலங்கரிக்கிறபொழுது இயற்கை முழுவதிலும் ஒரு குதூகலந் தோன்றிற்று. மேகங்கள் மங்கள கீதங்கள் முழக்கின. கடல் தன் அலைக் கைகளை யெடுத்தாடிற்று. வானத்தில் இம்மணப் பெண்ணை அழைக்க மாலைகளுடன் அடியார்கள் நின்றனர்.

சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ்கடலலை திரைக்கை யெடுத்தாடின
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக் கண்டுகந்தே.

(தொடரும்)

# ஸி. ஒய். சிந்தாமணி

[கே. ஏ. சிதம்பரம், உதவி ஆசிரியர் : 'பாம்பே க்ரானிகில்']

1918, ஆகஸ்டுமீ இங்கிலாந்திலிருந்து எட்வின் ஸாம்யூல் மாண்டகு இந்தியாவுக்கு வந்தார். பார்த்தார் ; மித வாதிகளை அரசாங்கத்துக்கு ஓர் பெரிய பக்கபலமாக்கி விட்டுக் கவலையின்றிச் சென்றார். மித வாதிகள் பிரிட்டனை எவ்விதத்திலும் கை விடுவதில்லை என்று வாக்குத் தத்தம் கொடுத்தார்கள். அச்சமயத்தில்தான் காங்கிரஸ் பம்பாயில் ஒரு தனிக்கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. அதே சமயம் மித வாதிகளுக்குள் பிளவு ஏற்படலாம் என்ற வதந்தியும் பரவிக்கொண்டு வந்தது. லோகமான்ய திலகர் ஒவ்வொரு மித வாதிகளிடமும் சென்று கக்ஷிக்குள் எவ்வித பிளவும் ஏற்படுத்தலாகாது என்று கேட்டுக் கொண்டார். பண்டித மாளவியா கக்ஷிகளுக்குள் சமாதானத்தை நிலைநிறுத்த பெரிதும் பாடுபட்டு வந்தார். இதை உத்தேசித்து காங்கிரஸ் கூடும் நேரம் 24 மணி நேரம் ஒத்திப்போடப்பட்டது. ஆனால் சமாதானத்தை நிலைநிறுத்தச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின. ஸர் தின்ஷா வாச்சா காங்கிரஸுடன் மித வாதிகள் ஒத்துழைக்கப் போவதில்லை யெனக் கூறிவிட்டார்.

இப்பிளவை மனப்பூர்வமாக நிராகரிக்கும் ஸி. ஒய். சிந்தாமணி அலகாபாத்தை விட்டு நகரவில்லை. பம்பாயில் அவர் இருந்திருந்தால் இப்பிளவு ஏற்பட்டிருக்காது என்பது பலருடைய அபிப்பிராயம். பி. எஸ். காமத், எச். என். ஆப்தே முதலிய பெரிய மித வாதிகளும், லல்லு பாய் ஸாமல் தாஸ், சுனிலால் வி. மேதா முதலிய சுயேச்சைக் கக்ஷியினரும் காங்கிரஸ் கூட்டத்தில் காணப்பட்டனர். பம்பாய் காங்கிரஸ் கூட்டத்திற்கு வர மறுத்த வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் டில்லியில் நடந்த காங்கிரஸுக்கு வந்திருந்தார்.

காங்கிரஸ் கக்ஷிக்கும் மிதவாதக் கக்ஷிக்கும் பிளவு ஏற்படாமல் சிந்தாமணியும், மற்ற புதிய மிதவாதிகளும் செய்திருப்பார்களானால், காங்கிரஸின் போக்கே இப்பொழுது வேறுவிதமாக இருந்திருக்கலாம். காங்கிரஸில் அவருக்கு அதிகப் பற்றும், மதிப்பும் இருந்தும், அதைவிட்டு மிதவாதக் கக்ஷியை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தார். இச்செயல் அவருடைய பிற்கால வாழ்வை வேறுவிதத்தில் கொண்டு சென்றது.

சிந்தாமணி ஓர் பெரிய தேசிய வாதி. அத்துடன் அவர் ஓர் பத்திரிகையாசிரியருங்கூட. பல்லால் பேனாவைக் கடித்துக் கொண்டு பிறந்தார் என்று ஹாஸ்யமாகவும் கூறுவது உண்டு. தேசியத்தில் உயர்ந்த ஸ்தானம் அடையாவிட்டாலும்,பத்திரிகையுலகில் ஓர் உன்னதமான பதவியை அடைந்தார். கோகேல், சுரேந்திரநாத் முதலிய பேரறிவாளர்களின் அரிய பெரிய சொற்பொழிவுகளைக் கவனத்துடன் கேட்டுக்கேட்டுப் பழகியதனால், மாணக்கராய் இருக்கும்பொழுதே சமத்காரமாய்ப் பேசவும், உயர்நடையில் எழுதவும் அவரால் முடிந்தது.

தேசியத் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கத் தூண்டிய ஆசை அவரைக் கல்லூரிப் பாடத்தை நிராகரிக்கத் தூண்டியது. அத்துடன் தேக அசௌக்கியமும் சேர்ந்துகொண்டது. இதனால் அவர் கல்லூரிப் பரீட்சையில் அநேகந் தடவைகள் பல்டியும் அடித்தார்.

சிந்தாமணி தன்னுடைய பதினெட்டாவது வயதில் "விசாக் ஸ்பெக்டேடர்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக அமரும் பாக்கியத்தை அடைந்தார். அதே வருஷம் சென்னையில் நடந்த காங்கிரஸுக்குப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். பத்தொன்பதாவது வயதில் லக்னௌ காங்கிரஸ் மேடையில் தன் சொற்பொழிவை அரங்கேற்றினர். 1899ல் "இந்தியன்

ஹெரால்டு" என்ற பத்திரிகையைச் சொந்தமாக நடத்த ஆரம்பித்தார். அதில் வரும் அவருடைய கட்டுரைகளில் சக்தியும், ஜீவனும், கலந்திருக்கும். வீரமும், ரஸமும் தெளிவும் அவைகளில் தோன்றும். இதனால் இவருடைய சக்தி, தாதாபாய் நௌரோஜி, ரானடே, ஸ்ரீ. சுப்ரமண்ய அய்யர் முதலிய பல பெரியோர்களுக்குத் தெரியவந்தது. இதற்குப் பிறகு இவர் "மெட்ராஸ் ஸ்டாண்டர்டு" "இந்தியன் பீபிள்" முதலிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து கடைசியில் "லீடர்" என்ற பத்திரிகையை தன் முயற்சியில் ஆரம்பித்தார்.

வெறும் பிழைப்புக்கு மட்டும் அவர் பத்திரிகையுலகில் நுழையவில்லை. அவரால் நம் நாடு அதிக மதிப்பை அடைந்திருக்கிறது என்றே கூறவேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனிதர் அவரல்ல. மேடையில் ஒன்று கூறிவிட்டு நடையில் ஒன்று காட்டும் மனிதர் அவரல்லர். வாயளவில் பேசிவிட்டுக் காரியாம்சையில்வந்தால் கைசுருக்கும்பேர்வழி அவரல்ல. பொது வேலையிலும் சரி, அல்லது சொந்த வேலையும் சரி, நேர்மையையும், உண்மையையும், நல்லொழுக்கத்தையும் நாம் அவரிடம் காணலாம். இக்குணங்களாலேயே இவருடைய பத்திரிகை நாட்டில் அதிகமதிப்பை அடைந்தது. "லீடர்" பத்திரிகையை நாம் நினைத்தோமானால் அதே சமயம் நாம் சிந்தாமணியை நம் மனத்தில் உருவகப்படுத்திக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

தற்காலத்தில் எல்லோருந்தான் பத்திரிகையாளர் என்று பேனாவைக் காதில் சொருகிக் கொண்டு கூத்தாடுகிறார்கள். ஆனால் எல்லோருமா உண்மையாக உழைக்கின்றனர்? ஆனால் சிந்தாமணி விஷயத்தில் அப்படியல்ல. ஒருசமயம் அவர் பலருடைய வேண்டுகோளின்படி "இந்தியன் டெய்லி மெயில்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக அமர்ந்தார். ஏகப்பட்ட சம்பளம்! அச்சமயம் பம்பாயில் மில்களில் வேலை நிறுத்தம் உண்டாயிற்று. மில் முதலாளிகள் அட்டகாசம் பண்ணினார்கள். இதைக் கண்டித்து சிந்தாமணி காரசாரமாக ஓர் தலையங்கம் எழுதினார். மில் முதலாளிகளிடம் திரவிய சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்த பத்திரிகை நிர்வாகஸ்தர்களுக்கு இது பொறுக்கவில்லை. ஆசிரியரைக் கண்டித்தனர். உடனே சிந்தாமணி அந்த ஆபீஸ் பேனாக்கட்டையை அங்கேயே வைத்துவிட்டு,அங்கவஸ்திரத்தை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு நடையைக் கட்டிவிட்டார்!

சிந்தாமணியின் ஆஹ்னிகத்தை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். காலை—பூஜை, பகல்—பத்திரிகை, மாலை—படம். சினிமாப்படம் பார்ப்பது அவருடைய தினசரி வேலைகளில் ஒன்றும். அசம்பிளியிலும், கௌன்ஸிலிலும் தன்னுடைய எதிரிகளை (தேசியத்தில்) அவரவர்களுடைய நடத்தைக்கேற்றவாறு 'கிரேடா கார்போ' என்றும், 'நார்மாஷீர்' என்றும் பெயரிட்டு ஹாஸ்யமாகக் கூப்பிடுவாராம்! பம்பாய்க்கு வந்தாரானால் அவர் ஒரு சினிமாக் கொட்டகையையாவது பார்க்காமல் விடார்.

நம்நாட்டில் சொற்பொழிவில் முதன்மை ஸ்தானம் பெற்ற தலைவர்களில் சிந்தாமணியும் ஒருவர். வங்காளச்சட்டத்தைக் கண்டிக்க கூடிய கூட்டத்தில் இவர் தீவிரமாக ஒருமணி நேரம் பேசினார். லார்டு கர்ஸன் காலத்திலிருந்து ஆரம்பித்து, லார்டு ரீடிங்காலம் வரை நடந்த அடக்கு முறைகளை ஒன்றுவிடாமல் கூறி அரசாங்கத்தைக் கண்டித்தார். இதனால் ஸி. ஆர். தாஸ், மோதிலால் நேரு, சரோஜினி தேவி முதலியவர்கள் இவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். மஹாத்மா காந்திக்கு இவரிடம் ஓர் தனிமதிப்பு உண்டு. எதற்கும் மஹாத்மா இவரிடம் அளவளாவுவது வழக்கம்.

தேசமும் தேசத்திலுள்ளோர்களும் போற்றப்பட்டு வந்த இவர் சின்னாட்களுக்கு முன்பு பூவுலகிலிருந்து மறைந்தார். இவர் மறைவினால், நம்நாடு, அதிலும் பத்திரிகை உலகம் ஓர் மாபெரும் மனிதரை இழந்து விட்டதென்று கூறவேண்டும்.

# காதலி, தந்தை, மரணம்

[ஏ. எம். ரஷீத்]

"இந்தச் சமயத்தில் இங்குவர என்ன அவசியமேற்பட்டது?"

ரஸியா மிகவும் வெறுப்புடன் வார்த்தைகளை கனமாக உதிர்த்தாள். தன் குதிரையை கொஞ்சம் வேகமாகவும் தட்டிவிட்டாள்.

பிரோஜிற்கு எல்லையற்ற வியப்பாகிவிட்டது. அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை. தன் குதிரையை முழு வேகத்துடன் கிளப்பி ரஸியாவின் குதிரைக் கருகில் கொண்டுபோய் நிறுத்தினன்.

"நான் தனிமையாக இருக்கும்பொழுது வர உனக்கு எப்படித் தைரியமேற்பட்டது?"

அவள் குரல் சினத்தால் நடுங்கிற்று.

பிரோஜினல் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ரஸியா இப்படிப் பேசுவாள் என்று அவனல் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை. அவன் என்ன செய்வது என்பதைக்கூட அறியாமல்திகைத்து நின்றான்.

ரஸியா பேசாமல் குதிரையைவிட்டு இறங்கினள்; பிரோஜும் கீழே இறங்கினன்.

"வீணுக பைத்தியமடையாதே......! நான் உன்னை மணக்க முடியாது. இது வரையிலிருந்தது போல நண்பர்களாக இருக்கலாம்......"

ரஸியாவின் வார்த்தைகளை அர்த்தம் செய்து கொள்ளாதவனைப்போல் பிரோஜ் தலைநிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். அந்தப் பெண்ணின் முகத்தில் கொஞ்சமாவது சலனமிருந்ததாகத் தெரியவில்லை.

"சரி...நான் வருகின்றேன், பிரோஜ்! என் பின்னல் இனிமேல் இப்படி அலையாதே. தர்பாருக்குக்கூட வர யோக்கியதை இல்லாமல் போய்விடும்..."

இந்தக் கடுமையான வார்த்தைகளுடன் குதிரையைத் தட்டிவிட்டாள்.

பிரோஜ் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். ரஸியா கண்களுக்கு மறையும்வரையில் அவன் இவ்வுலகிலேயே இல்லை. பிறகுதான் பழைய விஷயங்கள் ஒன்றன் பின் ஒன்ருகப் புரண்டு வந்தன.

## 2

அப்பொழுது ரஸியாவின் தந்தை உயிருடனிருந்தார்.

அன்று பிரோஜ் ரஸியாவுடன் விளையாடிக் கொண்டிருந்தான். சிறிது தூரத்தில் ஷா உட்கார்ந்து இருவரும் விளையாடுவதைக் கண்குளிரப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். பிரோஜும் தனக்குச் சொந்தமானபடியால் ரஸியாவை அவனுக்கே கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்பது அவராசை. சிறுவனக இருக்கும்பொழுது ரஸியாவைக் கடிக்க வந்த ஒரு சிறு புலிக்குட்டியை அனுவசியமாக அவன் விட்டெறிந்ததை ஷா அவனுடைய பிற்காலத்திய வீரத்திற்கு ஒரு 'மாதிரி'யாக எடுத்துக் கொண்டார்.

* * *

அன்று ரஸியா வேட்டையாடும்பொழுது காட்டில் தனியாக மாட்டிக்கொண்டாள்.........

பிரோஜியின் சிந்தனை தடைபட்டு நின்றது. உள்ளத்தில் பீறிட்டுக் கிளம்பிய சோகம் அவன் சிந்தனையையும் மொக்கையாக்கி நிறுத்திவிட்டது.

## 3

ரஸியா ராஜ்ய பரிபாலனத்தில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். அவள் சிம்மாஸனத்திலிருக்கும் நிலை ஊசிமுனையில் தத்தளித்துக் கொண்டிருந்ததை அவள் கொஞ்சமும் உணரவே இல்லை,

தர்பாரிலிருந்த சிலரே அவளைச் சிம்மாஸனத்திலிருந்து குப்புற உருட்டிவிட கண்ணுங் கருத்துமாக இருந்தனர். ராஜ்யத்திலும் மூலைக்கு மூலை கலகங்கள்.

* * *

அந்தத் துரோகிகளில் பிரோஜின் தந்தையும் ஒருவர். இதை பிரோஜ் மிகவும் தீவிரமாகக் கண்டித்தான். தந்தை சொன்ன பதில் பிரோஜை ஒரு தடவை உலுக்கி எடுத்தது.

"பிரோஜ்! உனக்கென்ன பைத்தியமா? ...காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். ரஸியா அல்தூனியாவின் கலகத்தை அடக்கச் சென்றிருக்கின்றாள். சிம்மாஸனம் காலியாக இருக்கின்றது. ஏதோ சிலரைத் தவிர எல்லோரும் நம் கட்சிதான். ரஸியாவை உயிருடன் திரும்ப விடுதல் பெரிய முட்டாள் தனமாகும். தேசம் ஒரு பெண் கையிலிருப்பதா? நம் போன்ற ஆண்களுக்கு இது அவமானமாக இல்லையா?........."

பிரோஜ் தன் தந்தையினிடம் எதிர்த்துப் பேசியதின் பலன் தனக்கும் அவனுக்குமுள்ள சம்பந்தம் முற்றிலும் விட்டது என்று அவன் தந்தை செய்த சபதந்தான்.

## 4

டில்லி நகரம் சேனைகளால் நிரம்பி இருந்தது. தனவந்தரும் பெரிய மனிதர்களும் வீட்டைவிட்டு வெளியே கிளம்ப பயந்தார்கள். ரஸியாவின் உத்திரவின்பேரில் அவள் தம்பி சிம்மாஸனத்திலிருந்தான்.

ராஜ்ய காரியங்களெல்லாம் தாறுமாறுகச் சிதறிக்கிடந்தன. நகரத்தின் எல்லையில் சண்டை நடந்து வந்தது. ரஸியா நகரத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். யுத்தத்தில் அவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

மனித சஞ்சாரமற்ற நிசப்தமான இடத்தில் ஒடிந்த உள்ளத்துடன் அவள் வந்து கொண்டிருக்கும்பொழுது எதிர்பாராது ஆயுதங்கள் உராசும் சப்தத்தைக்கேட்டு அவள் துள்ளி எழுந்து திரும்பினாள்.

பளபள வென்று மின்னியவாறு ஒரு கத்தி அவள் மேல் பாயவேண்டியது. எவனோ ஒருவன் திடீரென்று நடுவில் குறுக்கிட்டான். "ஹா!" என்ற வேதனைக் குரலுடன், "யா அல்லா!" என்ற இன்னொரு தளர்ந்த குரலும் சேர்ந்து எழுந்தது.

ரஸியா கவனித்துப் பார்த்தாள். பிரோஜ் குற்றுயிராகக் கிடந்தான். அவன் பக்கத்தில் அவன் தந்தை இரண்டு துண்டமாக உருண்டிருந்தான்.

"பிரோஜ்! இதென்ன?" என்று ரஸியா அலறினாள்.

பிரோஜினால் பேசமுடியவில்லை. ஏதோ ஜாடை செய்தான்.

ரஸியா அவனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டாள். கண்ணீர் பீறிட்டுக் கிளம்ப, அவன் துடித்த அதரங்களோடு தன் மெல்லிய இதழ்களைப் பொறுத்தினாள்.

"பிரோஜ்! என்னினிய பிரோஜ்! பெண்களிடம் அமுங்கிக் கிடக்கும் வீண் மமதையினால் நான் உன்னை அனுவசியமாக நடத்தினேன். உன்மேலிருக்கும் பிரியம் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும் கர்வந்தான் உன்னைக் கேவலமாகவும் நடத்தச் செய்துவிட்டது. நீயோ இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. பாழான என்னுடைய இந்த உயிரைக் காப்பாற்ற நீ உன் தந்தையை உன் கையாலே கண்டதுண்டமாக மனமாற வெட்டியதுமின்றி உன்னினிய உயிரையும் அர்ப்பணம் செய்தாய்......"

உள்ளந் துடித்தெழுந்து அவள் கதறலானாள்.

பிரோஜ் பாதி திறந்த கண்களுடன் ரஸியாவின் வதங்கிய வதனத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இதயம் நிறைய உற்சாகம், சந்தோஷம், குதூகலம்—இதாவது தன் காதலிக்குச் செய்ய முடிந்ததே யென்று.

"ர......ஸி......யா!......"

அவன் கண்கள் மூடின. எங்கும் நிசப்தம். இயற்கைகூட மௌனம் சாதித்தது.

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED ASOKA

ரிஜிஸ்டர்.நெ.1506

# அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

## M. K. கிருஷ்ண செட்டி

கோயமுத்தூர்

---

மதராஸ் விற்பனையாளர் :—

## V. கனகய்ய செட்டி & Co.,

நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்

மதராஸ்.

# ஞானஸ்தன்

"கம்பதாஸன்"

செய்யூர் தூக்கத்தில் ஊறிக் கிடந்தது: அது ஒரு குக்கிராமம்; அதை முப்பது நாற்பது குடிசைகள் கொட்டைப்பாக்கு போல் அலங்கரித்தன. அந்த கிராமத்திலும் எத்தனையோ கல்யாணங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளில் சிகரமானது சந்திரசேகரனுடைய திருமணந்தான்.

அவன் நகரத்தில் மேல் படிப்பிற்காக படித்து 'பல்டி' அடித்தபிறகுகூட கிராமத்தை உதாசீனஞ்செய்தான். கிராமம் என்னும்போதே அவன் நாவில் அருவருப்பு வெடிக்கும். காலம் யாவற்றையும் மாற்றிவிடுகிறது.—கடல் அழுக் கேறிய நதி நீரைத் தூய்மையாக்குவதுபோல்.

சபேஸ ஐயருக்கு ஒரே மகள். அவருக்கு அந்த வட்டாரத்திலே நல்ல மதிப்பும் இருபதுகாணி நஞ்சை நிலமுமுண்டு. அவரது நெஞ்சைவிட்டு சற்றுந் தளராதக் கொள்கை:—"என் பெண்ணுக்கு வாய்க்கும் மாப்பிள்ளை வாலிபனாகவும் படித்தவனாகவும் அழகுள்ளவனாகவு மிருக்கவேண்டும். கலியாணமானதிலிருந்து எனது அகத்தோடேயே இருக்கவும் வேண்டும். அப்படிப்பட்டவன்தான் நல்லபிள்ளை" என்பது.

நகரத்தில் வீதிகளையும் கட்டிடங்களையும் 'நோ வேகன்ஸி' எச்சரிக்கைகளையும் எண்ணிக் களைத்துப்போன சந்திர சேகரன் கண்களுக்கு காமாக்ஷி பிடித்திருந்தாள். 'சம்மதம்' என்ற வார்த்தை அவன் அடிவயிற்றிலிருந்தே வந்தது. சபேஸ ஐயருக்கு வரனைப்பற்றி வெகு திருப்தி. காமாக்ஷியும் 'ததாஸ்து' கூறினாள். ஆடம்பரமாக திருமணம் நடந்தது. அந்த குக்கிராமத்தின் ஊர் வலத்திற்கும் ராஜரத்தினம் மேளமென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

ஊர்வலம் முடிந்தது. ராஜரத்தினம் தன் ஊருக்குப்போக புறப்பட்டான். அப்போது சபேஸ ஐயரைப் பார்த்து "உங்க மாப்பிள்ளைக்கும் எனக்கும் நெருங்கிய சினேகம். மாப்பிள்ளையுடைய ஞான மிருக்கே ரொம்ப ஒசத்தி" என்று புகழ்ச்சியாகச் சொன்னான்.

அதிலிருந்து அக் கிராமத்தில் சந்திர சேகரனுக்கு 'ஞானஸ்தன்' என்ற புனைப் பெயரும் வழங்கத் தலைப்பட்டது. அப்பொழுதே அவனுக்கு அந்தப் பட்டம் என்றால் ஏழுவருடங்கள் கரைந்து மறைந்த இப்போது, அவன் ஞான விருத்தியைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ?

காமாக்ஷி இப்போது வாலைப் பருவத்தை உதறிவிட்டு மடந்தைப் பருவத்திற் குடிபுகுந்து விட்டாள். வஸந்த காலம் சித்திரை மாதத்தை தொடுவதுபோல் அழகு அவளங்கங்களில் விழித்தெழுந்தது! அவளது உடலின் அசைவு ஒவ்வொன்றிலும் சௌந்தர்யரேகை குலுங்கி மின்னிக்கொண்டிருந்தது.

நகரத்தில் பட்டம் பதவிக்காக அலைந்த சந்திரசேகரனைப்போல் அவள் அலையவில்லை கிராமத்தைவிட்டு. ஏன்? அகத்தைவிட்டு வெளியே தலைகூட நீட்டிப்பார்த்ததில்லை. அப்படி இருந்தும் அழியாப் பட்டமடைந்துவிட்டாள்! ஆம்; 'தாய்' என்ற தெய்வீகப்பட்டந்தான். அந்த பட்டத்தை அளித்த தெய்வம்-குழந்தை-அவள் மடிமேல் படுத்திருந்தது; அதன் வண்டு விழிகள் தூக்கத்தில் ஊறிக்கொண்டிருந்தன.

அவள் முற்றத்தில் உட்கார்ந்தபடி இருள் மூட்டமிட்ட வானத்தையும் நட்சத்திரங்களின் சுடர் மழையையும் பார்த்துக்கொண்டிருந்தாள். இடையிடையே வாயிலை நோக்குவது எவர் வருகையையோ அவள் எதிர் பார்க்கிறாள் என ஏங்கிக் கருத்த அவள் விழிகள் சொல்லின.

"முன்னிருட்டா இருக்கே கோவிலிலிருந்து கொஞ்சம் சுருக்கா வரப்படாதா?"

என்று, பரிவும் கண்டிப்பும் கலந்தக் குர லில் கேட்டுக்கொண்டே எழுந்தாள்.

"சுருக்காக வந்து என்ன ஆகவேண்டி யிருக்கு?" என்று முனகிக்கொண்டே ஒருக்களித்திருந்த கதவைத் தாளிட்டு விட்டு வீட்டுள் புகுந்தான் சந்திரசேகரன்.

அவன் நெருங்கும்போது ஒருவித துர்நாற்றம் அவள் மூக்கை திண ரடித்தோடிற்று. பேய்க்காற்றில் சுழலும் கடற்கரை மணல்போல் அவளது பொன் னிற உடல் சுழன்றது. குழந்தையை வீண யில் போட்டாள். சொம்பில் சலமும் வாழை இலையும் மணையும் கொண்டுவந் தாள். அவன் அவளைப் பார்த்துக் கொண்டே நின்ருன். நடையில் ஒளி துப்பிக்கொண்டிருந்த ராந்தல் வெளிச்சத் தில் அவன் மேனி, ஆப்பில் பழம்போல் சிவந்து மினு மினுத்தது. அவன் பார்வை யின் கிரணம் கட்டின்றி அவள்மேல் பர விக்கொண்டிருந்தது. ரத்தவெறி கொண் ட புலிபோல் ஒரு பெருமூச்சுதிர்த்தான்.

"இலைபோட்டிருக்கே உட்காருங்கோ" என்ருள் காமாக்ஷி. 'சட்'டென்று உட் கார்ந்தான். அவள் சாதம் பரிமாறி வத் தக்குழம்பை வார்த்தாள். ஒரு அப்பள மும் கொண்டுவந்து போட்டாள். அப் பளம் வட்ட நிலவுபோல் இலையில் கிடந் தது. அன்னத்தைப் புரோட்சனம் செய் தான். முதலில் அப்பளத்தைத் தின்ன வேண்டும்போல் அவன் மனம் துடித்தது. நாவில் ஊறிய பழய ருசி தலை தூக்கிற்று. அப்பளத்திடம் கையைக் கொண்டு போனுன். கை கூசிற்று. வட்டமாயிருக் கும்அப்பளத்தை நொறுக்க-சந்திரவட்டம் போன்ற அதன் சோபையை சிதறடிக்க— அவனுக்கு மனமும் கையும் வரவில்லை. கோர வேட்கைமட்டும் நரம்பின் மூல மாகப் படபடத்தது. அவன் தயங்கு வதைக்கண்ட காமாக்ஷி:—"ஏன் சாப்பிடு வதுதானே. இன்னும் அப்பளமிருக்கு உங்களுக்கில்லாமலா; கொண்டுவரேன்" என்று தனக்காக வைத்திருந்த இன் னென்றையும் கொண்டுவந்து வைத்தாள்.

சந்திரசேகரன் காமாக்ஷியின் முகத்தை இமை கொட்டாமல் பார்த்தான். ஒரு கவி ஞனின் ஆழ்ந்த யோசனையை அவன் புருவங்கள் காண்பித்தன. என்றைக்கு மில்லாதபடி விருவிரு என்று சாப்பிட் டான். கை யலம்ப ஜலம் கொண்டு கொடுத் தாள் காமாக்ஷி. தங்கக்கம்பி காற்றில் அலைக்கப்படுவதுபோல் மெதுவான குர லில் "உங்க அப்பா படுத்தாச்சோ" என்று கேட்டான் சந்திரசேகரன்.

"அவரெப்பவோ சாப்பிட்டுவிட்டு படுத் துட்டாரே. நீங்க வரலையே என்றுதான் நான் காத்திண்டிருந்தேன். திண்ணையிலே தானே படுக்கப்போறீர்கள், கதவைச் சாத் தட்டுமா" என்ருள் காமாக்ஷி சுபாவமான தொனியில்.

"நான் கதவைச் சாத்திவிட்டேன்..."

"நீங்க உள்ளே படுக்கப் போறீர்களா? ......" அவள் ஏதோ சொல்ல வாயெடுத் தாள் வார்த்தை நெஞ்சில் சிக்கிக்கொண் டது. தலைகுனிந்தாள். திருப்பி வானத் தைப் பார்த்தாள் கண்களில் நீர் ததும்ப. இருட்டில் நட்சத்திரங்கள் வெடித்துக் கொண்டிருந்தன.

பிறைச் சந்திரன் ஒரு கருமேகத் துண்டை அலசிக்கொண்டு உதயமாயிற்று! ஒருதரம் அவன் எச்சைக்கூட்டி விழுங் கினுன். இல்லை. விம்மல் ஒன்று. உடல் சிலிர்த்தது. அவனது நடுங்கும் கை அவள் வளைந்த இடையைத் தழுவிற்று! விநாடி ஒன்று கண் மூடிற்று. 'ளொக் ளொக்' என இரும்பும் ஓசை வந்தது; இடையில் இமைப்போது மௌனம். மறு படி யாரோ காலைத் தேய்த்து தேய்த்து வரும் சந்தடி கேட்டது. அவன் கால்கள் தள்ளாடின. ஏனே கைமட்டும் தழுவலை விட்டுவர மறுத்தது. நெஞ்சில் தூண்டில் முள் தைத்ததுபோல் வேதனை. ஒருவித அதிர்ச்சி உச்சிமுதல் உள்ளங்கால்வரை.

"யாரங்கே! முட்டாள் முட்டாள்! படிச் சவனும் படிச்சவன், உனக்கு ஞானம் துளியானு இருக்காடா! குஷ்டம் பிடித் தும் கொழுப்படங்காப் பேயே........!" என்று ஓடிவந்தார் சபேச ஐயர்.

# மும்மனம்

[தி. ப. பத்மநாபன்]

சென்னையில் ஒரு பங்களாவின் பின்புறம். முழுவதும் தோட்டமென்று சொல்லவும் முடியாது. வெட்டவெளியென்றும் சொல்வதற்கில்லை—பேருக்குப் பூஞ்செடிகளுண்டு, கொஞ்சம் விளையாடுமிடமென்றும் சொல்லலாம். இந்த இடத்தில் ஐந்தாறு வயதுள்ள சம்பத்தும் அவனுடைய தமக்கை பத்மாவதியும் இரண்டு வயதுக் குழந்தையுடன் விளையாடி வருகிறார்கள். இந்தத் தோட்டத்துக்கும் அடுத்த பங்களாவின் தோட்டத்துக்கும் இடையே சுவர் எதுவுமில்லை. முள்கம்பி வேலி போட்டிருக்கிறது. குழந்தைகள் வேலியோரமாய் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுடைய சத்தம் கேட்டதும் அடுத்த பங்களாவின் பின்புறத்தில் மெதுவாக வருகிறார்கள் இரண்டு பெண்கள். இவர்களில் எழெட்டு வயதுள்ள லட்சுமி ஒட்டுப் போட்ட பாவாடை உடுத்தியிருக்கிறாள். நல்ல நகை ஒன்றுமில்லை. நாலைந்து பிராயமுள்ள சூடாமணி பட்டுப்பாவாடை, பட்டுச்சட்டை, உடம்பு நிறைய நகைகளுடன் ஜொலிக்கிறாள். அன்று அவளுக்குப் பிறந்த நாளாம். லட்சுமி சமையல்காரியின் பெண்—சூடாமணிக்குக் காவல். ஆனால் இரண்டுபேர் கையிலும் மாம்பழம் இருக்கிறது. முகத்தில் சொல்லமுடியாத மகிழ்ச்சி கொந்தளிக்கிறது. குழந்தைகள் சிரிப்பிலும் விளையாட்டிலும் ஏழை பணக்கார வித்தியாசங்கள் உண்டா?

பத்மாவதியும் சம்பத்தும் சூடாமணியைப் பார்த்து விட்டார்கள். உற்சாகத்துடன் சம்பத்து எழுந்து இரண்டு எட்டு எடுத்து வைக்கிறான். வேலி தடுக்கிவிட்டது. பல்லைக் கடிக்கிறான். பத்மாவதி திரும்பித் திரும்பிப் பார்த்துகொண்டே கையால் ஜாடை காட்டிச் சூடாமணியை அழைக்கிறாள். அவளும் சிரித்துக் கொண்டே வேலியோரமாக வருகிறாள். பக்கத்தில் வந்தவுடன் சூடாமணியைக் கண்ட குழந்தை சந்தோஷம் தாங்கமாட்டாமல் அவளிடம் பாய்வதுபோல் ஆரவாரம் செய்தது. உடனே பத்மாவதி அதன் வாயைப் பொத்திவிட்டு, தன் இடுப்பில் எடுத்துக்கொண்டு அதன் வேகத்தைத் தணித்துவிட்டாள்.

குழந்தையின் சத்தம் கேட்டதும் வீட்டுக்குள்ளிருந்து "பத்மாவதி!" என்ற அலறல் காதில் விழுந்ததோ இல்லையோ முள்தம்பியின் இருபுறத்திலும் எதிரெதிராய் வியூகம் வகுத்ததுபோல் குழந்தைகள் நின்றனர். அவர்கள் கண்களில் பயம், முகத்தில் துக்கம். ஒரு விநாடிக்குமுன் அங்கு வியாபித்திருந்த ஆனந்தம் மறைந்து விட்டது. ஆனால் அவர்கள் ஓடிவிடவில்லை. குழந்தை மனம் பிடிவாதம் செய்கிறது. தந்திரமும் அதற்குத் தெரியும். அதிகாரத்தை ஒருவிதமாக எதிர்க்கிறது.

"அம்மா காரியமா இருக்கா" என்று மெதுவாகச் சொன்னாள் பத்மாவதி.

"இருந்தாலும் சண்டை தானே ரெண்டு வீட்டுக்கும்?" என்று லட்சுமி ஒருகேள்வி போட்டாள்.

"ஒருநாள் சண்டை, மறுநாள் சமாதானம்—இதுதான் பெரியவாள் வேலை. சூடாமணியின் அக்கா கல்யாணத்துக்கு நாங்கள் வரவில்லையா? அப்போது சிநேகம், அதுக்கு முன்னால் சண்டை" என்று விஸ்தரித்தாள் பத்மாவதி.

"அப்படியானா அவாளுடைய சண்டையும் சிநேகமும் நம்மைக் கேட்டா நடக்கறது? ஒரு சங்கதி தெரியும். சிநேகமாயிருந்தா எங்க வீட்டிலே வந்து விளையாடச் சொல்றா ஒங்கம்மா ஒன்னை. சண்டையாயிருந்தா நாம் விளையாடறதைப் பாத்துட்டாளோ கடிச்சுமுழுங்கற மாதிரி கத்தறாள். எல்லாரும் நடுங்கிப் போறோம். இந்தப் பெரியவாளே இல்லையானா சண்டையே யில்லாமல் நாம் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கலா மில்லையா?" என்று பழங்கதை அவிழ்த்தாள் லட்சுமி.

இதற்கிடையில் சூடாமணியும் சம்பத்தும் சிரித்து விளையாடப் பார்க்கிருர்கள். ஆனுல் பத்மாவதியும் லட்சுமியும் சம்பாஷிப்பது அதற்கு இடையூருய் நிற்கவே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து திகைக்கிருர்கள். அவர்களுக்கு ஒன்றும் தெளிவாகவில்லை. சம்பாஷிப்பவர் முகத்தையும் பார்க்கிருர்கள். ஆனுல் தாங்கள் மாத்திரம் தனியாக விளையாடவும் மனம் வரவில்லை. இந்த நிலைமையில் சூடாமணி லட்சுமியின் கையைப் பிடித்துக்கொண்டாள். சம்பத்து அக்கா இடுப்பிலிருக்கும் குழந்தையின் காலைப் பிடித்துக் கொண்டான். இதுதான் அவர்களுக்கு ஆறுதலாயிருந்தது.

சம்பாஷணை வலுத்துவிட்டது. தன்னை மறந்து பேசுகிருள் பத்மாவதி. முகத்தைச் சுளிக்கிருள். ஒரு தரம் விசிக்கிருள். ஒரு சமயம் கேலியாகச் சிரிக்கிருள். கோபத்தை அடக்கியவளாய் மௌனம் சாதிக்கிருள் ஒரு முறை. அப்பொழுது லட்சுமி பெருமூச்சு விடுகிருள். கண்கள் கருத்தைக்காட்ட, கைகள் துரிதமாய்ப் பேசுகின்றன. சுயேச்சையாய் அவர்கள் அபிநயித்துப் பேசுங் காட்சியில் குழந்தையுள்ளம் நவரஸங்களையும் சித்தரிக்கிறது. அவர்களுடைய முகத்தில் அவ்வளவு வெறுப்பும் கசப்பும் வருவானேன்? பெரியோர்களைப்பற்றிப் பேசுகையில் கோபக் குறியும் இகழ்ச்சித் தொனியும் கலந்து வரக் காரணமென்ன?

ஏதோ ஒரு ஞாபகமாயிருந்த சம்பத்தின் பார்வை சூடாமணியின் கையிலுள்ள மாம்பழத்தின்மேல் விழுந்தது. அவனுடைய முகமலர்ந்தது. கையை நீட்டினுன். அவளும் கொடுக்க வந்தாள். அப்பொழுது "சம்பத்து!" என்று அவன் தாயார் கத்தினுள். அவனுடைய முகம் கறுத்தது. கொஞ்சம்பின் வாங்கி ஒரு செடி மறைவில் பதுங்கிக்கொண்டு, வீட்டின் பக்கம் கவனம் செலுத்தினுன். தாயார் வராததுகண்டு மெதுவாக வேலிக்குள் நுழைந்தான். அந்த வேளையில் அம்மா பின் வாசலுக்கு வரவே அவனைப் பார்த்துவிட்டாள். "சனியன்களா! ஒங்களை அந்தப் பக்கம் போகாதேங்கோன்னு எத்தனை தரம் சொல்றது?" என்று அடிவயிற்றிலிருந்த ஆங்காரத்தையெல்லாம் கொட்டினுள். திகிலடைந்த குழந்தைகள் மூலைக்கொன்ருக ஓட்டம் பிடித்தன. அந்த அவசரத்தில் சம்பத்தின் முதுகை முள்கம்பி கீறிவிட்டது. அதையும் லட்சியம் பண்ணுமல் பயந்துபின் வாங்கி நிற்கிருன். இறுத்த பார்வையுடன் அவனைக் கூப்பிடுகிருள் தாயார். வெருகு பார்த்த கோழிபோலக் கிலிபிடித்து, அவளையே நோக்கி நடந்துகொண்டிருக்கிருன் சம்பத்து.

"இனிமேல் அந்தப்பக்கம் போகாதேடா" என்ற தணிந்த குரல் கேட்டதும் தன் நினைவு வந்ததுபோல் "இல்லை, அம்மா!" என்று பதில் சொல்லி, ஏங்கியேங்கிப் பொருமுவதை நிறுத்திக்கொண்டு அம்மாவுடன் உள்ளே போகிறவன் ஒரு தரம் வேலிப் பக்கம் திரும்பிப் பார்த்தான். அங்கே மாம்பழம் ஒன்று உருண்டு கிடக்கிறது.

பெரியவர்களுக்கிடையே தாண்டமுடியாத பெரிய சமுத்திரம் ஒன்று இருப்பதைக் குழந்தை மனம் உணர்ந்து விட்டது. இதைப் பெரியோர்கள் உணர்கிருர்களா? இவர்கள் தனித்தனிச் சமூகமாயிருப்பதைக் குழந்தை மனம் கண்டு கண்ணீர் வடிக்கிறது. பெரியோர்கள் அதை லட்சியம் பண்ணுகிருர்களா?

* * *

சென்னப்பட்டணத்தில் வீடுகளும் பங்களாக்களும் புதிதாகக்கட்டும்முறையே ஒரு அற்புதம். எட்டுத் திசைகளிலும் கழுத்தை நீட்டிக்கொண்டு எட்டுவிதக் கோணல்கள் காட்டும் அந்தக் கட்டிடங்கள். அங்கே போய்விட்டால் கிழக்கு மேற்கு கண்டுபிடிப்பது கஷ்டம். கட்டிட அமைப்பினுல் திசையறி கருவியும் கோணிவிடுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது. இந்தமாதிரி அமைப்பினுல் ஏற்பட்ட பங்களாச் சண்டைதான் பத்மாவதி வீட்டாரையும் சூடாமணி வீட்டாரையும் பிரித்துவிட்டது. முள்கம்பி வேலிபோடுவதற்குமுன் அங்கே சுவர் எழுப்பியிருந்தார்கள். இட ஆக்கிரமிப்பு காரணமாக நேர்ந்த சச்சரவில் சுவர் மறைந்துவிட்

டது. தற்கால சாக்கியாக முள்கம்பி வந்தது.

பல வருஷங்கள் கழிந்தன. சம்பத்து தன் வீட்டுக்கு எஜமானனாகிவிட்டான். சூடாமணியின் புருஷன் அடுத்த பங்களாவை ஆட்சி செய்கிறான். பழைய மனஸ்தாபம் வார்சுக்கிரமமாக வருகிறது. குழந்தை மனத்தைக் கெடுத்துவிட்டது வயது. கம்பிவேலி கொஞ்சமேனும் ஆட்டங்கொண்டால், தன் ஆஸ்தியெல்லாம் தோற்பதற்குத் தயாரென்று மீசையை முறுக்குகிறான் சம்பத்து. அதே இடத்தில் தன் இஷ்டப்படி சுவர் கட்டப்போவதாக மார் தட்டுகிறான் சூடாமணியின் புருஷன். அதற்காகத் தன் நகைகளையும் கழற்றிக்கொடுக்கத் தயாரென்று சூடாமணி சபதம் செய்கிறாள். பழைய சம்பத்தும் பழைய சூடாமணியும் எங்கே?

தோட்ட விவகாரம் முற்றிவிட்டது. ஹைகோர்ட்டையும் எட்டிப்பார்த்தது. பெரியோர்களுடைய வைராக்கியம் போகிறபோக்குத்தான் என்ன விந்தை! இடம்மாறின மன உறுதி அவர்களுடைய சொத்தைக் கரைத்துவிட்டது. ஆனால் செலவில்லாமல் சப்தமும் ஆர்பாட்டமும் நித்தியப்படி நடந்துவருகின்றன. வயதானதும் இதைப் பிறவிக் குணமென்று பெரியோர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். எப்படியிருந்தாலும் பெரியோர்கள் புத்திசாலிகள் தானே!

ஊழிக்காலத்தில் எங்கும் அழிவே காணப்பட்டாலும் அழியாத உண்மை ஒருபுறம் ஒடுங்கிக் கிடப்பதுபோல் மனிதருடைய சண்டைப் பிரளயத்திலும் நம்பிக்கைச் சுடர் ஒன்று மினுக்குகிறது. முள்கம்பி யோரமாகச் சம்பத்தின் குழந்தைகளும் சூடாமணியின் குழந்தைகளும் விளையாடுகிறார்கள். பழைய சரித்திரம் திரும்புகிறது. சிலசமயம் தங்களை மறந்து அவர்கள் வானையும் மண்ணையும் அளக்


★ உங்கள் ஆயுள்
★ உங்கள் வீடு
★ உங்கள் மோட்டார்

இவைகளுக்கு இன்ஷூரன்ஸ் பாதுகாப் பிருக்கிறதா?

இல்லையேல்

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(ஸ்தாபிதம் 1906)

**நேஷனல் பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

(தலைமை ஆபீஸ்:—கல்கத்தா)

**இவைகளைக் கலந்து ஆலோசியுங்கள்!**

பிராஞ்சு ஆபீஸ்

**நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்**

**362, சைனா பஜார் தெரு, சென்னை.**

கிறார்கள். அலங்கரிக்கிறார்கள். வசமாக்கவும் செய்கிறார்கள். அவர்கள் செய்வது பொய்யென்றும், அறியாமையென்றும் வாதிக்கிறது பெரியோர் உலகம். ஆனால் குழந்தைப் பாவனையில் எல்லாம் சித்தியாகி விடுகிறது. சித்தியில் ஏற்பட்ட சாந்தியும் ஆனந்தமும் அவர்கள் மனத்தைக் கொள்ளைகொண்டு விடுகின்றன. எது பெரிது—பெரியோரது தர்க்கமா, குழந்தையின் பாவனை முதிர்ச்சியா?

ஒருசமயம் சம்பத்தின் பெண்ணும் சூடாமணியின் பெண்ணும் தோட்டத்தில் மத்தாடுகிறார்கள். இருவருடைய பாவாடைகளும் குடை விரித்ததுபோல் வட்டமிட்டுச் சுழல்கின்றன. கைகள் மாறி இறுகப் பின்னிக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய தேகம் நிமிர்ந்து பின்னால் சாய்கிறது. அவர்கள் பின்னலுக்கும் முதுகுக்கும் ஒரு முழதூரமிருக்கும். பாதம்மேல் நோக்க, பிறவியிலேற்பட்டதுபோல் குதியோடு குதி ஒட்டிக் கொண்டிருக்கிறது. முகச்சாயல் காணமுடியாத வேகத்தில் சுற்றி வருகிறார்கள். கண்களைப் பாருங்கள்! மலரவில்லை, முகிழ்த்துள்ளன. உதடுகள்சேரப் பல்லும் இறுகக் கடிக்கவே அவர்கள் முகவிலாஸத்தில் ஒரு கோணலுமில்லை. இயற்கை அழகு தான். அங்கே தவழும் நிம்மதியும் உறுதியும் அப்பெண்களுக்கு ஒரு திடசௌந்தர்யம் அளிக்கின்றன. இந்த அற்புத சாந்தியிலே என்ன வேகம்! என்ன அழுத்தம்! அவர்களுடைய ஏகாக்கிரசித்தமே ஒரு அதிசய உண்மை. ஆனந்தம் அளவுகடந்த நிலைதான் இது. கடைசியில் யோகியின் உள்ளமும், குழந்தை மனமும் ஒன்றுதானோ?

முன்பின் அறியாத சூடாமணி புருஷனும் சம்பத்தும் பரமவைரிகளாய்விட்டார்கள். ஒரு பாவமும் அறியாத சம்பத்தின் மனைவியும் சூடாமணியும் சத்துருக்கள்போல் நடிக்கிறார்கள். சகவாச தோஷமா?

அதோ, சூடாமணியின் குழந்தை வேலியைத் தாண்டிவிட்டான். சம்பத்தின் பெண் ஓடிவந்து குழந்தையை வாரியெடுத்து முத்தமிடுகிறாள். மகனைத் தேடிவரும் சூடாமணி இதைப்பார்த்ததும் எரிச்சலுடன் வெடுக்கென்று குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு போகிறாள். தனது சுதந்திரத்தில் பெரியோர் தலையிடும்போது குழந்தை கலகக்கொடி நாட்டுகிறது. அவர்களிடம் அது நம்பிக்கை இழந்துவிட்டது. அவர்களுடைய அறிவைக் குழந்தை மனம் மதிக்கவில்லை. தன்னை முற்றிலும் உணரும் சக்தி அவர்களுக்கில்லையென்று சாதிக்கிறது. சம்பத்தின் பெண் இதைத்தான் தன்கோபக் குறியால் காட்டினாள். விளையாடும் உரிமை குழந்தைக்குக் கிடையாதா? அன்பும் அழகும் நிறைந்த தேவலோகத்தை இங்கேயே குழந்தை மனம் சிருஷ்டிக்கிறது. பெரியோரது அறியாமையால் விளையும் பூசல் அதை நொடிப்பொழுதில் பாழ்படுத்தி விடுகிறது.

* * *

சம்பத்துப் பெரியவர் கோலூன்றி நடக்கிறார். சூடாமணியின் புருஷனுக்குத் 'தாத்தா' என்ற பெயர் நிலைத்து விட்டது. இரண்டு வீட்டுப் பெண்கள்உலகத்தில் நடக்கும் வாக்குவாதம் இவர்கள் காதில் விழுவதில்லை. விழுந்தாலும் இவர்கள் அதில் சிரத்தை கொள்வதில்லை.

ஸ்ரீஜயந்தி தினம் இராத்திரி பத்தரை மணிக்குமேல் கண்ணன் பிறக்கப்போகிறான். இவர்கள் பங்களாவுக்கருகில் ஒரு விஷ்ணுகோவில். அங்கே பகவானுடைய அவதார கட்டம் வாசிக்கப்போகிறார்கள். இன்னும் நேரமாகவில்லை. சம்பத்துக் கிழவர் கோவிலில் ஒரு புறம் ஒதுங்கியிருந்து சுலோகங்களை முனகிக்கொண்டிருக்கிறார். அங்கே கொஞ்சம் இருட்டு. அந்த வழியாய் வந்த தாத்தா அடையாளம் தெரிந்துகொள்ளாமல் கிழவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பக்திரஸமான பாசுரங்களை மெதுவாகப் பாடுகிறார். இரண்டு பேரும் கொஞ்சம் மௌனமாயிருந்து ஒருவரையொருவர் உற்றுக்கவனிக்கிறார்கள். அடையாளந்தான் கண்டுபிடிக்க முடியவில்லை. கவனம் பெருமாளிடத்திலிருப்பதால் இவர்களுடைய சம்பாஷணை பாகவதத்தில் ஆழ்ந்துவிட்டது. இடையில் சம்பத்துப் பெரியவருக்குச் சந்தேகம் ஏற்படவே தாத்தாவின் முகத்தை உற்று

நோக்கினர். தாத்தாவும் அவ்விதமே செய்ய, கிழவர் பெருமூச்சுவிடுகிறார்.

"லோகமே கெட்டுப்போச்சு" என்று வருந்தினர் சம்பத்து.

"என்ன வேண்டியிருக்கு? அடுத்த வினடி என்ன நடக்கப்போறதென்னு யாருக்குத் தெரியும்? அதுக்குள்ளே எவ்வளவு கோபம்! என்ன வைராக்கியம்!"

"கோபத்தாலும் பயத்தாலும் என்ன கண்டோம்? எல்லாம் கதைபோலாய்விட்டது."

"அந்தக் கதையும் எனக்கும் ஞாபகமில்லே" என்று அசிரத்தைகொண்டார் தாத்தா.

"இவர்களுக்கு உழைச்சு உழைச்சு என்ன பலன்? மண்டையும் வழுக்கையாய்ப் போச்சு, தலேயும் நரையாச்சு. இது தான் கண்டபலன்."

"சத்தம் போட்டுப் போட்டுத் தொண்டையும் அடைச்சுப் போச்சு. பெருமாள் போரவது சொல்லியிருந்தா போற இடத்துக்குப் புண்ணியமுண்டு."

"என்ன செய்தாலும் நன்றிகெட்ட ஜனங்கள், மூடப் பிறவிகள். வேண்டாம் வேண்டாமென்னு மண்டையை உடைச்சுக்கறேன். கேட்டால் தானே? பழைய மனஸ்தாபமெல்லாம் நம்மோடே போகட்டுமே. இருக்கறதை வச்சுக்கொண்டு கிருஷ்ணு ராமான்னு சுகமாயிருக்கக் கூடாதா?"

"கேளுங்கோ, பையனும் நாட்டுப் பொண்ணும் ஒரே பிடிவாதமாயிருக்கா. விஷயமோ அல்பம். பேச்சோ பிரமாதம். வாசல் தொட்டியிலே குப்பை கொட்டினதுதான் காரணம். ஒங்க வேலேக்காரி கொஞ்சம் எட்டி வீசியிருக்கலாம். எங்க வாசல்பக்கம் வந்துடுத்து. காத்தும் அடிச்சிருக்கலாம். இதுக்காக என்ன அமக்களம்!"

"எங்க வீட்டிலும் ஸ்ரீஜயந்திப் பாராயணம் இதுதான். யார் தலேயிலே யார் கட்டிண்டு போகப்போறு?" என்று வெறுப்படைந்தார் தாத்தா.

"செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கு. வீட்டு வேலேதான் அவாளுக்கு இல்லேயே. குழந்தைகளுக்கு நல்ல வார்த்தை, அவாளுடைய படிப்பு, ஸ்தோத்திரம், பாராயணமெல்லாம் இருக்க; வீண் விவகாரமே பொழுதுபோக்கா யிருக்கு எங்க வீட்டிலே. எனக்கொன்னும் பிடிக்கவேயில்லே, மாப்பிள்ளே! உண்மையாச் சொல்லறேன்."

"எனக்கு மட்டுமென்ன? நாள் எண்ணிக்கொண்டிருக்கேன். பெரியவன் சொல்றனே, கேப்போன்னு அறிவு இருந்தாத் தானே."

இதற்குள் பாகவதம் வாசிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் பெரியவர்கள் இருவரும் வீட்டை மறந்து புராணங்கேட்பதில் லயித்து விட்டார்கள். இவர்களுடைய மனம் கோகுலத்தில்சஞ்சரிக்கிறது. கண்ணன் பிறந்து விட்டான். புது மனிதர்களாய் வீடுபோய்ச் சேர்கிறார்கள்.

மறுநாட் காலேயில் உலகம் பழைய உலகமாய்த்தான் இருக்கிறது. பெண்கள் சுறுசுறுப்பாக வேலே செய்து கொண்டிருந்தாலும் ஊடே ஊடே முந்தினநாள் சண்டைக்கு வியாக்கியானம் செய்கிருர்கள்.

தோட்டத்தில் சம்பத்துக்கிழவர், தாத்தா, இவர்களது பேரன் பேத்திகள் முள்கம்பியோரமாய்க் குலாவி விளையாடுகிறார்கள். நிஷ்களங்கமான இவர்களுடைய மனம் ஆனந்தத்தில் மிதக்கிறது. முள்கம்பி என்ன செய்யும், சந்தோஷ ஆரவாரம் உலகத்தை விழுங்கும்போது?

ஒரு பங்களாவிலிருந்து சுந்தரகாண்ட சுலோகங்கள் கம்பீரமாகக் கிளம்புகின்றன. அடுத்த பங்களாவிலிருந்து முகுந்தமாலேப் பாடல்கள் அன்புகனிந்து வானத்தை ஊடுருவிப் பாய்கின்றன. இந்த கர்நாடக சங்கீதம் மனத்தை உருக்கி ஆத்மாவை ஈசனிடம் அர்ப்பணம் செய்கிறது.

இதன் மத்தியில் வீட்டுக்குள்ளிருந்து கேட்கும் ஆச்சரியமான குரல்கள் அபஸ்வரம் பேசுகின்றன.

இந்த மூன்றுவித ஒலிகளும் ஏககாலத்தில் வெள்ளமிட்டுக் கலந்து விடுகின்றன.

இதுதான் உலகமோ!

# புண்பட்ட உள்ளம்

"கார்த்திகை"

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமம். கிராமம் என்றால் குக் கிராமமல்ல. அந்த ஊருக்கு ஒரு பஞ்சாயத்து போர்டு உண்டு. வருட வருமானம் ஆறாயிரம் ரூபாய்க் குள்ளாகவே இருக்கும். பஞ்சாயத்து போர்டில் தலைவர், அதாவது "பெரிய எசமான்" மற்றும் 'மெம்பர் ஐயா'க்கள் எல்லோரும் அங்கம் வஹித்தார்கள்,

படிப்பை விட்டதும் வேலை கிடைக்கவில்லை. பட்டதாரிகளே வேலையில்லாமல் திண்டாடும்பொழுது சாதாரண எஸ். எஸ். எல். ஸி. படித்தவனுக்கு இலகுவில் வேலையகப்படுமா? நானும் கொஞ்சநாள் 'ஊர் சுற்றல்' நடத்தினேன். என் தந்தையின் அத்தியந்த நண்பரொருவர் திடீரென்று ஜில்லா போர்டு தலைவராகி விட்டார். உடனே அவர் தம் அன்பைக் காட்டும் வழியில் எனக்கு அந்தக் கிராமத்திற்குப் போகும் வழியைக் காண்பித்தார்.

இரண்டு மாத 'ஆக்டிங்' குமாஸ்தாவாக பஞ்சாயத்து போர்டில் வேலை பார்க்கப்போனேன். இந்த 'ஆக்டிங்' பூச்சாண்டி என் வாழ்க்கையில் பாதிப்பாகத்தை ரொம்ப பயமுறுத்தி விட்டது. அப்பொழுது எல்லாம் மனசைத் தேற்றிக்கொள்வேன். 'அடேயப்பா! வாழ்க்கையே ஒரு 'ஆக்டிங்' நாடகம் தானே! அதில் இது ஒரு துளி கூட இல்லையே' என்று.

ஊர் நல்ல அழகான......ஊர்தான். ஆனால், பாவம், நீர் வளம் மட்டும் இல்லை. அந்த ஊருக்கப்பால் பதினான்கு மைல் துலைவில் தாமிர வருணி ஓடுகிறது. ஐந்து மைல் சுற்றளவில் 'மாணா மாரிக்' குளம் ஒன்று கூட இல்லை. அப்படியென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். கிணற்று ஜலம் அதை மொள்ள நாலு சொச்சம் கயிறு வேண்டும்.

நான் அங்கு இரண்டு மாதம் கழித்தேன். அந்த நாட்கள் என் வாழ்க்கையிலே அதிக முக்கியமானநாட்கள். வெளியுலகை அறியாத எனக்கு அனுபவ அறிவூட்டிய நாட்கள். ஆபீசிலேயே ஜாகை வைத்துக் கொண்டேன். என்னுடன் துணைக்காக இரவில் தினசரி ஒரு வேலைக்காரனை வரச்சொல்லி யிருந்தேன். பஞ்சாயத்து போர்டு எல்லையில் மொத்தம் இருநூற்றிப் பதினாலு லாந்தர்கள் உண்டு. இவற்றை ஏற்றுவதற்கு நான்கு பேர் வேலைபார்த்தனர். அவர்களை 'லைட்டர்கள்' என்பார்கள்.

அன்று புதன் கிழமை அமாவாசைக்கு அடுத்த நாள். இரவு வெகுநேரமாகியும் படுக்கை முறைக்கு ஆள் வரவில்லை. பக்கத்திலுள்ள அடர்ந்த விருக்ஷங்களிலிருந்து ஆந்தையும் கோட்டானும் கூவின. இடையிடையே பயங்கரமான நிசப்தம். ஆபீஸ் அறையில் எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு கறிபிடித்து மங்கலான ஒளியைத்தந்தது. என் நெஞ்சு 'திக், திக்'கென்றது.

"சாமீ, சாமீ" என்றகுரல் நிசப்தத்தைப் பீறிக்கொண்டு வந்தது. என் மனசில் தைர்யம் பிறந்தது. கதவைத் திறந்தேன். வாசலில் குமாரசாமித் தேவன் கைகால் வெட வெடக்க நின்றான். அவனுடைய முகம் அந்த மங்கிய ஒளியில் கவலை தோய்ந்து காணப்பட்டது.

"என்ன குமாரசாமி, இவ்வளவு நேரம்" எனக்கேட்டேன்.

அவன் பதில் சொல்ல முடியாமல் வார்த்தைகளை விழுங்கினான். "ஐயா, எல்லாம் என் தலையெழுத்து" என்று முணுமுணுத்தான்.

"என்னடா, தலையெழுத்து? உளறாதே" என்றேன் கொஞ்சம் அதட்டலாக.

சிறிது நேரம் கழித்து குமாரசாமி விஷயத்தைச் சொன்னான். அதற்கப்புறம் அதை ஏன் கேட்டோமென்றாகி விட்டது.

அத்தனை துன்பமயமான வாழ்க்கையை நடத்தினன் குமாரசாமி. வாழ்வு, சீ! அது ஒரு பெரும் சூழ்ச்சியே!

குமாரசாமித் தேவன் இருபது வயதில் பஞ்சாயத்து போர்டில் வேலைக்குச் சேர்ந்தான். பதிமூன்று ரூபாய் சம்பளம் வாங்கினவன் படிப்படியாக, 'முன்னேறி' தற்சமயம் ஏழு ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிறான். வயது நாற்பத்தி ஒன்று ஆகிறது. உழைத்து உழைத்து உடல் ஆடிப்போய் விட்டது. என்றாலும் அவனுடைய பேச்சில் கிழடு தட்டவில்லை. என்ன இருந்தாலும் வீரமறவர் வமிசமல்லவா?

குமாரசாமியின் மனைவி முதல் பிரசவத்தில் ரொம்ப வேதனைப்பட்டாள். அதனைப் பொறுத்த உள்ளம், பிறந்தது பெண் என்றதும் அடிசாய்ந்து போயிற்று. குமாரசாமி கூட 'ஊச்' கொட்டிக் கொண்டான். அப்பொழுது அவனுக்கு பிரமாதமாகத் தோன்றவில்லை. ஆனால் அவன், தன் மனைவி இறந்து விடுவாளென்று நினைக்கவேயில்லை. அந்தோ, பெரும் பாரம் அவன் மீது விழுந்தது.

குமாரசாமி இரண்டாம் விவாகம் செய்து கொள்வானென்று, எல்லோரும் நினைத்தார்கள்; அவனிடம் கூட சிலர் வாய்விட்டுச் சொன்னார்கள். "என்ன குமாரசாமி, பொண்ணு, கிண்ணு பார்த்திருக்கா" எனக் கேட்பார்கள். "பெண்ணு, பேயா, எனக்கு இனி ஒரே கல்யாணந்தான்" என்று வெறுப்புடன் பதில் கூறுவான். ஆனால் இந்த ஜனங்கள் தான் லேசில் விடுவதில்லையே. பின் மெள்ள, "சிறுசு வேறு இருக்கே, அதைப் பார்த்துக்க" என ஞாபகப் படுத்துவார்கள்.

ஆம்; சிறுசு! அதை நினைக்கும் போது அவன் மனதில் ஏதோ பாரம் ஏற்றிவைக்கப் பட்டது போலிருந்தது. ஆனால் இரண்டாம் மனைவி! அதை ஒரு கொடிய தண்டனை என்று எண்ணினன். குமாரசாமி அதிகம் படிக்கவில்லை. என்றாலும் தன் குழந்தையை மாற்றாந் தாயின் பராமரிப்பில் விட அவன் மனம் ஒப்பவில்லை.

கால தேவனின் ரதம் வேகமாக ஓடியது. குமாரசாமியின் வாழ்க்கையில் மட்டும் வேகமில்லை. ஆனால் அந்த 'சிறுசு' 'பெரிசா'கி விட்டது. அவன் தன் முழுப் பிரியத்தையும் மகள் மீது வைத்திருந்தான்.

அவள் ரொம்ப துடிப்பான பெண். மாநிறம். ஆனால் வாய், வாய், அதைச் சொல்லி முடியாது. அவளிடம் பேச்சுக் கொடுத்து மீறுவது சுலபமன்று. வாயாடிப் பெண்!

குமாரசாமி அவளைக் கண்டிப்பதே கிடையாது. இறந்துபோன தன் மனைவியின் சாயலை அவளிடத்தில் கண்டான். எனவே மட்டில்லாத திருப்தி. என்ன பாடு பட்டாலும் அவளை ஒரு குறைவுமில்லாமல் நடத்தினன்.

மரகதத்திற்குப் பருவம் வந்தது. குமாரசாமிக்குப்பொறுப்புபிறந்தது. மாப்பிள்ளை தேடவேண்டுமே. குமாரசாமி பிள்ளை வேட்டையில் தன்கவனத்தைச் செலுத்தினன். ஆனால் எதிர்பார்த்ததிற்கு மாறாக ஊர் வம்பு அதிகமாயிற்று. "அது தலை கொழுத்த பொண்ணு—தகப்பன் கொடுக்கிற செல்லம் தலைகால்தெரியாமல் குதிக்கிறது. இதை யார் கட்டி மாரடிப்பான்?" இதுதான் ஊர் வம்பர் மகாசபையின் முடிவு. இச்செய்தி ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் பரவிற்று.

குமாரசாமிக்குப் பொறுக்கமுடியவில்லை. வெளியே ஒருமாதிரி பேச்சு பரவினாலும் அதன் உட்கருத்தை அவன் அறிந்தான். "என்ன, தகப்பன் கூட மகள்வாழ்ந்தால்—அது தப்பு!" இதைக் குமாரசாமி எண்ணி எண்ணிப்பார்த்தான். அவனுக்குப்புரியவில்லை. பாவம், வெள்ளை மனசு!

ஒருநாள் குமாரசாமி பக்கத்து ஊருக்குப் போயிருந்தான். எல்லாம் மாப்பிள்ளை வேட்டைக்காகத்தான். அங்கு மணியக் காரத்தேவர் மகனுக்கு முடிவு செய்வதாக இருந்தது. நெருங்கும் பருவம். அதை முடிவு செய்யவே குமாரசாமி போனன். அதுதான் அவனுடைய கடைசிமுயற்சி. அதுவும் முறிந்தால் இனி

கல்யாண முயற்சியில் இறங்குவதில்லை என்று சங்கல்பம். மணமுயற்சியில் மன முடைந்துபோய்விட்டான். அவன் போன இடமெல்லாம் அபவாதத்தின் எதிரொலி.

மணியக்காரர் வீட்டிற்குச்சென்றதும் அவனை ஆச்சர்யம் தூக்கிவாரிப்போட்டது. அவர் அன்று முகம் கொடுத்துப் பேசவில்லை. குமாரசாமியின் மனத்தில் என்னென்லாமோ தோன்றி மறைந்தன. இறுதியில் அவர்தன் முடிவைத் தெரிவித்தார். முடிவு தெரிந்ததுதானே! குமார சாமிக்கு ஆவேசம் பொங்கிவிட்டது. அவன் கண்களில் தீப்பொறி பறந்தன.

"என்ன, இந்த அபவாதத்தைச் சொல்லியது யார்" என்று கோபத்துடன் கேட்டான். அவன் மீசை துடித்தது. அவனுடைய கோபத்தைக்கண்டு மணியக்காரர் கதிகலங்கிப்போனூர்.

"என் முத்தையா கூடச் சொன்னுன்" என்றூர் மெதுவாக.

அவ்வளவுதான் குமாரசாமி தலைகால் தெரியாமல் குதித்தான்.

"என்ன, அந்தப்பயல் இத்தனைக்கு ஆளாய்விட்டானு, பார்க்கிறேன் ஒருகை" எனக்கூறிவிட்டு வேகமாய் நடந்தான்.

காட்டுப்பாதை. இரவு நேரம். ஓட்டமாக நடந்து கொண்டிருந்தான் குமார சாமி. போகும் போது அவன் மனதில் எண்ணங்கள் அலைகள்போல் மோதின். திடீரென்று மடியைத் தொட்டுப் பார்த்தான். தோல் உறை சொருகியிருந்தது. அதனுள் பளப்பளப்பான மலையாளத்துச் சூரிக்கத்தி மின்னியது.

நடு நிசி. தெற்குத்தெருவில் ஒரே களேபரம். ஊரே திரண்டுவிட்டது. எங்கும் 'கூ, கூ' வென்ற சப்தம். முத்தையத் தேவன் வீட்டு முன்பு எள்ளுப் போட்டால் எள்ளு எடுக்கமுடியாது. அத்தனை கூட்டம். கூட்டத்தின் மத்தியில் முத்தையா ரத்தவெள்ளத்தில் கிடந்தான். ஆம்; பக்கத்தில் அதுயார்? குமாரசாமி!


## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

### தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை

போன் : 8558 — தந்திவிலாசம் :— "வான்கார்ட்"

சந்தேகமில்லை அவன்தான். அவன் கையில் அதோ சூரிகத்தி!

குமாரசாமியின் கோபம் முத்தையா மீது பாய்ந்தது. பாவம் கோபத்தில் அவனைக் கத்தியால் குத்திவிட்டான். ஆனால் அவன் நினைத்தது நடக்கவில்லை. முத்தையாவைத்தாக்கிவிட்டால் கிராமமே தன்னைக்கண்டு நடுங்கும் என நினைத்தான். அதற்குப்பதில் அந்த மகா ஜனக்கூட்டம் குமாரசாமியைக் குண்டுக்கட்டாகக் கட்டி 'பெரிய எசமான்' வீட்டிற்குக் கொண்டு போயிற்று.

அந்த ஊரில் எது நடந்தாலும் அது 'பெரிய எசமானி'ன் விசாரணைக்கு வந்து தானகவேண்டும். அவருக்கு அவ்வளவு மதிப்பு கொடுத்தனர். போலீஸ்காரர்களுக்குக் கூட கிராமத்தார் பயப்படுவதில்லை. 'பெரியஎசமான்' கிழித்தகோட்டைத்தாண்ட ஒருவருக்கும் திராணி கிடையாது. அவருக்கு குமாரசாமியை நன்கு தெரியும். அவருடைய இரக்கத்தை அவன் பெற்றிருந்தான். கடவுள் புண்ணியம் முத்தையாவுக்கு பெரிய காயமாக இல்லை. அவனை பக்கத்து கிராம ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, தான் குமாரசாமியைக் கவனித்துக் கொள்ளுவதாகக் கூறிவிட்டார். (அவர்தான் பஞ்சாயத்து போர்டுக்கும் பிரஸிடெண்டு) இதில் கிராமத்தாருக்கு கொஞ்சம் மனத்தாங்கல் தான். என்ன செய்வது பெரிய இடத்து உத்திரவு.

குமாரசாமி மன்னிக்கப்பட்டான். அது அவன் மனதில் பெரிய புரட்சியை உண்டு பண்ணிவிட்டது. தன் தவறை உணர்ந்து வருந்தினன். வீட்டுக்குப்போகும்வழியில் அந்த பாழும் சூரிக்கத்தியை கிணற்றில் எறிந்து விட்டுச்சென்றுன்.

சந்திரனை மேகங்கள் மறைத்துச் சற்றே இருள் ஏற்பட்டது. குமாரசாமி ஏகாங்கியாய் வீட்டையடைந்தான். கதவு சாத்தியிருந்தது. "மரகதம்! மரகதம்!" என மெதுவாகக் கூப்பிட்டான். இரைந்து கூப்பிட சக்தியில்லை. பதில் வரவில்லை. எப்பொழுதும் 'சட்'டென்று வந்து கதவைத்திறப்பவள், பலதரம் கத்தியும் வராதது அவனுக்கு ஆச்சர்யத்தைத்தந்தது. கோபத்துடன் கதவை எட்டி மிதித்தான். அது 'புல, புல' வென்று நொருங்கிவிழுந்தது. என்ன? வீட்டில் யாருமில்லையா! மரகதம்——ஆம்; அவள் எங்கே?

அவனுக்கு தலையே சுழல்வதுபோலிருந்தது. அக்கம்பக்கம் விசாரித்ததில் 'இல்லை' என்ற பதில் சீக்கிரமாக வந்தது. மண்டையில் முண்டாசுக் கட்டை வரிந்து இறுகக் கட்டினன். ஒரு வேளை தலை வெடித்து விடும் என்ற பயமோ!

அதே கோலத்துடன்தான் பஞ்சாயத்து போர்டு ஆபீஸிற்கு வந்தான்.

எனக்கு ஒன்றும் ஓடவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"சாமி, அவள் உயிரோடிருப்பாளா? நம்ப முடியவில்லையே" என்று கூறினன். அவன் குரல் கம்மிப்போயிருந்தது. "பயப்படாதே, குமாரசாமி! அப்படியெல்லாம் ஒன்றும் நேரிடாது" என்று தைர்யம் கூறினேன்.

அன்றிரவு அங்கேயே படுத்திருந்தான். அவன் முகம் வெறித்துக் காணப்பட்டது.

மறு நாள், நான் எதிர்பார்த்தபடியே விஷயம் என் காதில் விழுந்தது. குமாரசாமியின் மகள் பாதாள கங்கையுடன் ஐக்யமாகி விட்டாள். அவன் வாழ்க்கையின் முற்றுப் புள்ளி தானே இது என எண்ணினேன். அது போலவே அவன் வேலைக்கு வரவில்லை. ஒரு வாரம் கழித்து குமாரசாமியை பிரசிடெண்டு கூப்பிட்டனுப்பி வேலையைப் பார்க்கும்படி உத்தரவு போட்டார். வேண்டா வெறுப்பாக அவனும் ஒப்புக்கொண்டான்.

சாயங்காலம் தோளில் ஏணியையும் கையில் மண்ணெண்ணெய்க் குடுக்கையையும் தூக்கிக்கொண்டு ஆபீசை விட்டு கிளம்பினன். இருள் படர்ந்திருந்தது. ஒவ்வொரு லாந்தராக தீபம் ஏற்றிக்கொண்டே சென்றுன் குமாரசாமி. பாவம்! இருள் சூழ்ந்த அவன் மனதில் ஒளி கொடுக்க மரகதம் இல்லை!

# விவாக தந்திரம்

[வி. சத்தியமூர்த்தி பி.ஏ. பி.எல்.]

நாடக பாத்திரங்கள்

மாத்ருபூதம் ஐயர்: தியாகனூர் கிராமஸ்தர்.
சாவித்ரி: மாத்ருபூதமய்யர் தர்மபத்னி.
ருக்மணி: சாவித்ரி வீட்டுக்கு எதிர்வீட்டுக் காரி.
அம்புலு: சாவித்ரியின் ஓர்ப்படி பெண்.
ஜம்பு: ருக்மணிக்கு உடப்பிறந்தான்.

## காட்சி—1

[இடம்—தியாகனூர் காவேரித்துறை: காலம்—காலே 8 மணி]

(ருக்மணியும் சாவித்ரியும் பாத்திரம் துலக்கிக்கொண்டிருக்கிறார்கள்.)

ருக்: சாவித்ரீ! உங்காத்திலே நேற்றைக்கு சுமங்கலிப் பிரார்த்தனை நடத்தியாச்சா? பிறந்தகத்துக்குப் போய்விட்டு இப்பத் தான் வந்தேன்.

சா: மத்யானம் 2 மணியோடு புருஷா சாப்பாடு முடிந்தது. என் ஓர்ப்படி பெண் அம்புலு வெகு ஒத்தாசை.

ருக்: பாவம்! அது தாயில்லாப் பெண்ணாச்சே, ஏதாவது கல்யாணம் நிச்சயமாச்சாடி அதுக்கு?

சா: அதன் காரியங்களைச் சொல்லி முடியாது! என்ன தருவிசு! நீகூட அவளைப் பார்த்திருக்கிறாயே. அவம்மா ஜாடை. ஆனால் என் கொழுந்தன் மாதிரி கொஞ்சம் கறுப்பு. எந்தப் பிள்ளை வந்து பார்த்தாலும் நிறமில்லையென்று நிராகரிக்கிறான்.

ருக்: பார்த்திருக்கேனே. ஒங்க ஓர்ப்படி செத்துப் போன வருஷத்திலே நீ கூட அவளைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருந்தாயே.

சா: ஆமா. என் ஓர்ப்படிக்கப்புறம் என் கொழுந்தன் குடும்பமே தத்தளிக்கிறது.

ருக்: ஒங்காத்திலேருந்து அவள் தாயாரைப் பெத்த பாட்டி கூட்டிக்கொண்டு போனாளே. பத்து வருஷம் இருக்கும் போலிருக்கே?

சா: ஆமா. அவள் பாட்டியாத்துலே தான் வளந்தாள். 'இன்னும் கல்யாணமாகல்லே. நீங்க தான் செய்து வைக்கணும்னு' என் கொழுந்தன் இங்கே கொண்டுவந்து விட்டிருக்கார். அம்புலுவுக்கு எப்படிக் கல்யாணம் ஆகப் போறதோ!

ருக்: கவலைப்படாதே. பெண்ணைக் காட்டும் விதத்திலேயே பிள்ளையை மயக்கிவிடலாம். மத்யானம் வந்து யுக்தி சொல்றேன்.

## காட்சி—2

[இடம்—மாத்ரு பூதமய்யர் வீட்டுக்கூடம்: காலம்—பகல் 1 மணி.]

(ஐயர் சாய் நாற்காலியில் படுத்துக் கொண்டிருக்கிறார். சாவித்ரி கூடத்துக் கம்பத்தில் சாய்ந்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.)

சா: நம்மாத்திலேயே அம்புலு இவ்வளவு காலம் வளர்ந்திருந்தாலும் கல்யாணம் செய்து வைத்திருக்கலாம். வயதோ பதினேழாகிவிட்டது. நமக்கு இந்தக் கவலை எப்போ நீங்குமோ!

மாது: இத்தனை சமத்துப் பெண் யாருக்கு வாய்க்குமோ! ஸ்கூல் பைனல் வரை படிச்சிருக்கு. கண் கண்டதெல்லாம் கை செய்கிறது. வீடு கொண்ட காரியத்தையும் செய்கிறாள். ஆனால் செய்தவள் மாதிரியே தெரியவில்லையே. எவ்வளவு நாஸூக்கு பார்! கலியாண விளம்பரமும் பேபரில் செய்திருக்கிறேன். தைக்குள் கலியாணம் நடத்திவிட வேணும்.

சா: அவா பாட்டியாத்துலேயும் சீர்வரிசை செய்வா. உங்கள் தம்பியும் சேமித்திருக்கும் பணத்தைக் கொடுப்பார். அந்தஸ்துக்குத் தகுந்தாப்போல் நாமும்

கல்யாணத்தை சிறப்பாய் நடத்திவிட லாம். மாப்பிள்ளே கிடைக்கணுமே! அவனுக்கும் பெண்ணைப் பிடிக்கணும்!

மாது: அம்புலுவுக்கு வியாழ பலன் வந்து விட்டது, தை மாதத்தில் முடிந்து விடும்.

காட்சி—3

[இடம்—மாத்ருபூதம் ஐயர் வீட்டுக்கூடம் காலம்—மாலே 4 மணி.]

(சாவித்ரி ஊஞ்ஜலில் படுத்துக்கொண் டிருக்கிறள். ருக்மணி. தரையில் உட் கார்ந்து கொண்டிருக்கிறள்.)

சா: என்ன, ருக்மணி சாப்பாடாச்சா?

ருக்: எல்லாம் ஒரு பாடா ஆச்சு. பாத்திரம் ஒழிச்சுப் பத்தும் தேய்த்துவிட்டேன். (அம்புலு வருகிறள்) இவதானே உன் ஓர்ப்படி பெண்! இவ்வளவு பெரிய பெண்ணு! நன்னருக்கு. தாயில்லாக் குழந்தேன்னு அவள் பாட்டி ஊட்டமா வளத்துருக்கா.

சா: குழந்தையே வளர்த்தி. அவம்மா இவள் வயதுக்குக் குழந்தை கூடப் பெற்றுவிட்டாள். உடம்புவாகு தான்.

ருக்: நம்ம பக்கத்திலே தான் நாடறிந்த பொய் ஒன்று தாண்டவமாடுகிறதே! பண்டைய காலத்து ஆசாரப்படிதான், வயதாகியும் கூட ப்ரௌடையாகாத பெண்ணென்று சொல்லித்தானே விவா கம் நடத்துகிறேம். அதற்காகத்தான் இந்தப் பேச்சு.

சா: ஆமா, என்னமோ நம்ம சமூகக் கட் டுப்பாடு! இவை எப்பொழுது சீராகு மோ! போகிறது. என்ன யுக்தி?

ருக்: அதைத்தான் சொல்லவந்தேன். எங்க நாத்தனர் பெண் கமலா நல்ல கறுப்பு. பரட்டைத் தலே, சப்பை மூக்கு, கூன் முதுகு, வரிச்சிக்கால், வரிச்சிக்கை, இருங்கக்கண்ணு, வயதோ பத்தொம் பது.

சா: அதுக்குக்கூட கல்யாணம் ஆயிடுத் தூன்னு சொல்றே?

ருக்: ஆகாமலென்ன? மாப்பிள்ளே ஒரு டாக்டர். என் நாத்தனர் பலே கெட் டிக்காரி. பெண்ணே போட்டோ எடுத்து கேக்கறவாளுக்கு அனுப்பினள்.

சா: போட்டோவில் அவலக்ஷணம் மாறி விடுமோ?

ருக்: அந்த போட்டோ எடுத்த கம்பெனிக் காரர்கள் கீர்த்தி எப்படித் தெரியுமோ? கண்ணேயும் மூக்கையும் தாராளமாய் வைத்துத்தான் இம்மாதிரி மணப்பெண் படங்களே "டச்" செய்து கொடுப் பார்கள்.

சா: பிள்ளே வீட்டார் பெண்ணே நேரில் பார்க்கவேணும்னு கூட்டி வரும்படி சொன்னல்—?

ருக்: அதுக்கா அவளுக்கு சாக்குப்போக் குத் தெரியாது? நம்ம குடும்பத்தி லேயே அந்த வழக்கம் கிடையாதென்று சொல்லிவிடுவாள்.

சா: பெண்ணைப் பார்க்கவே வந்து விட் டாலோ?

ருக்: அப்பொழுதுதான் அவள் தந்திரம் வெகு ஆச்சர்யம்! காபி, டிபன் சப்ளே, உலகப் பேச்சுகள்—பெண்ணைப் பார்க் கும் சந்தர்ப்பத்தை அந்திவேளேக்கு மெதுவாகக் கடத்தி விடுவாள். பெண் ணுக்கு ஏகப் பவுடரைப்போட்டு, சவுரி யால் பின்னலே நீட்டி முணுக்குமுணுக் கென்று ஏற்றிவைத்த குத்துவிளக்கு வெளிச்சத்தில் கட்டிய புதுப்புடவை யின் சலசலப்பு சப்தத்தில் பெண் சரேலென்று பிள்ளேமுன் வந்து நமஸ் கரித்துத் திரும்பும்படி பழக்கிவைத் திருந்தாள்.

சா: பெண்ணைப் பாடச் சொன்னலோ, படிக்கச்சொன்னலோ?

ருக்: கட்டைத்தொண்டைதான். மறைவில் அடுத்தாத்து அம்புஜத்தைப் பாடச் சொல்லி "குழந்தைக்கு வெட்கமா யிருக்கு முன்னல்வந்து படிக்கமாட் டாள்" என்று விடுவாள்.

சா: பேஷ்!

ருக்: அம்புலுவுக்கு என்ன பாடத்தெரி யாதா? படிப்புதான் என்ன? தருவிசு க்கு தான் என்ன குறைவு? கொஞ்சம் உயரம்—கறுப்புன்னு சொல்லலாமா?

என் நாத்தனார் தந்திரத்திலே பாதி கையாடினால்கூட இவளுக்கு லகுவாய் முடிந்துவிடும்.

சா: இப்படித் தந்திரம் செய்து மணமான பின்பு மணவாழ்க்கையில் கேடு ஏற்படாதா?

ருக்: எல்லாம் ஈசன்செயல். ஒத்த சதிபதிகளாய் தோற்றத்திலும் செல்வத்திலும் நாகரீகத்திலும் இருப்பவர்கள்கூட இல்வாழ்க்கையை ரசிக்காமல் பிரிகிறதில்லையா? நேர்மாறானதுகள் சௌஜன்யமாயிருப்பதை நாம் பார்க்கவில்லையா?

சா: வாஸ்தவந்தான். உன் உடப் பொறந்தான் ஜம்புவுக்கு கல்யாணம் ஆகல்லே போலிருக்கே?

ருக்: என் தம்பிக்கு வர பெண் நல்ல சேப்பாத்தான் இருக்கணும். எங்காத்துலேயே "மாநிறம் மாநிறம்" என்று சொல்லிக்கிண்டு கறுப்பைக் கலக்கவிடமாட்டேன்.

## காட்சி—4

[இடம்—வீட்டுக் கூடம்: காலம்—தை மாதம் ஒருநாள் மாலை 3-மணி]

(மாத்ருபூதமய்யர் கூடத்தில் உலாத்திக் கொண்டிருக்கிறார். சாவித்ரி கையில் காப்பி டம்ளருடன் ஊஞ்சலண்டை நிற்கிறாள்.)

மாது: நம்ப விளம்பரத்துக்கு ஜவாப் வந்திருக்கு. ஜம்பு பி.ஏ., மதராஸ் சென்னை கார்ப்பொரேஷன் குமாஸ்தா. இன்றே வருவதாக எழுதியிருக்கிறார்.

சா: ஜம்புவா! நம்ம எதிராளாத்து ருக்மணி தம்பியாயிருக்குமோ! அவள் கூட ஊரிலில்லையே. சங்கராந்தி ஸ்நானத்திற்கு வேதாரண்யம் போய்விட்டாள். (அம்புலு வருகிறாள்) அம்புலு! உன்னைப் பார்க்க ஒருவர் வருகிறார். நல்ல புடவை உடுத்திக்கொள். இதோ இந்த முகப்பவுடரைமட்டும் போட்டுவிடுகிறேன்.

மாது: சரிதான். ஏற்கனவே அம்புலு போட்டோவை நான் ஜம்புவுக்கு அனுப்பியிருந்தேன். அதில் நிறம் தெரியாது.



சா: பிள்ளை மட்டும் ருக்மணியின் தம்பியாயிருந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷம். நல்லவேளை, அவள் ஊரிலில்லை! பையனும் நல்ல பையன்.

அம்புலு: அப்படியே தன் பிறந்தகத்துக்குப் போய் விடுவேனென்று ருக்கு அம்மாமி என்னிடம் சொன்னாள்.

மாது: நல்லது. இன்றே விவாகத்தை நிச்சயம் செய்யவேணும்.

### காட்சி—5

[இடம்-மாத்ருபூதமையர் வீட்டுவரவேற்பு அறை: காலம்—மாலை 6 மணி.]

(ஜம்பு ஒரு நாற்காலியிலும், ஐயர் ஒரு நாற்காலியிலும் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். சாவித்ரி அறைக்கு வெளியில் வாசற்படியண்டை நின்றுக் கொண்டிருக்கிறாள்.)

மாது: ஜம்பு! இன்று உங்கள் தமக்கை இங்கு இல்லையே யென்ற ஒரு குறை தான். நிச்சயம் இன்றே பேச்சைமுடித்திருப்பாள்.

சா: இவள் தருவிசையும் காரியத்தையும் கண்டு அவள் மகிழ்வாளே!

ஜம்பு: என் தமக்கை சதா சர்வதா கறுப்புப் பெண்ணைக் கொள்ளக் கூடாதென்று சொல்வாளே தவிர குணத்தைக் கவனிக்கமாட்டாள்.

சா: எங்கள் அம்புலு மாநிறம் தான். இருந்தாலும் படிப்பிலும்,குணத்திலும் இவளை யாரும் மிஞ்சமுடியாது. என்னமோ, நாங்களே சொல்லிக்கொள்ளக் கூடாது.

ஜம்பு: ஓஹோ! என் தமக்கை வீட்டார் இந்தப் பெண்ணைப் பற்றித்தான் புகழ்ந்தார்களோ! சரி, லௌகிகம் உசிதம் போல். எனக்கு லீவு அதிகநாள் எடுக்க முடியாது. ஒருநாள் கலியாணமாக அடுத்த வாரத்தில் முடிக்கவேணும்.

மாது: உமது தாய், தமக்கையின் சம்மதம்?

ஜம்பு: போட்டோவைக் காட்டி என் தாயார் அனுமதியைப் பெற்றுவிட்டேன். மற்றவை என்னைப் பொறுத்ததுதான்.

### காட்சி—6

[இடம் — மதராஸில் ஜம்புவின் வீடு. காலம்—காலை 8 மணி.]

(ருக்மணி சுவற்றில் மாட்டி இருக்கும் போட்டோவைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.)

ருக்: (தனக்குள்) இதென்ன ஆச்சரியம்! நம்மூர் அம்புலு போட்டோ இங்கே மாட்டியிருக்கிறது! ஒரே நாள் கலியாணம்—புலிவலத்தில் என்று சொல்கிறார்களே! மணப்பெண் பெயர் அலமேலுவாமே! தம்பியும் போய்ப் பார்த்து வந்துவிட்டானும். அம்மாவும் பெண் மாநிறம் என்கிறாள். ஜம்பு பெண் பார்த்தபோது நான் ஊரிலில்லாமல் போய்விட்டேனே! நான் சொல்லிக் கொடுத்த தந்திரம் என் வீட்டிலேயே பலித்து விட்டதே! எல்லாம் ஈசன் செயல். (திரை)



# குடித்தனம்

"குகப்ரியை"

நமது தமிழ் நாட்டில் வேறு எதற்கேனும் பஞ்சம் வந்தாலும் வரலாம். பழமொழிகளுக்குப் பஞ்சமே கிடையாது. பேச்சுக்கு ஒரு பழமொழி வந்தே தீரும். அதிலும் சில காவியத்தைத் தன்னுள் கொண்டதாய் இருக்கும். சிற்சில ஒரு பெரிய நாடகத்தையே நம் எதிரில் கற்பனை செய்து காண்பிக்கும். வேறு சில வெறும் புரளியைக் குறிப்பதாய் "மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்" என்பதுபோல் ஒன்றுக்கொன்று விளங்காத விஷயத்தையும் ஒட்டவைத்து நமக்குக் காண்பிக்கும். ஆனால் வேறு சில, ஆழ்ந்த அனுபவத்தையும் சிறந்த போதனையையும் ஒரே வரியினால் நமது மனதிலே பதியவைத்து விடுகின்றன. ஒரு பழமொழி சொல்லுகின்ற கருத்தை வெறும் வசன ரூபமாக ஒரு பாராவில் எழுதினாலும், பழமொழியைப் போன்ற வேகமும், உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. வெறும் வார்த்தைப் பந்தலாக ஆகிவிடுகிறது.

"குடித்தனமோ? துரைத்தனமோ?" என்பது ஒரு சர்வ சாதாரணமான ஒரு பழமொழி. இதற்கு விரிவுரை எழுத வேண்டுமானால் எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதிக் குவித்து விடலாம். ஆனால் இந்தப் பழமொழியை அதிகாரத்துடனும் அனுபவத்துடனும் கலந்து பெரியோர்கள் கூறும்பொழுது, "ஆம்! குடித்தனமும், துரைத்தனமும் ஒன்றுதான் பல குடித்தனங்கள் சேர்ந்த ஒரு தொகுதிதானே அரசாங்கம்" என்று நமக்குத் தோன்றுகிறது.

ஆனால் அரசாங்கம் பல தனிப்பட்ட மனிதர்களின் சேர்க்கையால் பெரிய திட்டத்தில் நடைபெறுகிறது. குடித்தனம் அதேபோல ஒரு சிறிய திட்டத்தில் நடைபெறுகிறது. அரசியல் நடத்துவதற்கு எவ்வளவு பொறுப்பும் ஒழுங்கும் நேர்மையும் வேண்டுமோ, அவ்வளவு பொறுப்பும் குடும்ப நிர்வாகத்திற்கும் வேண்டியதுதான். இதில் எந்தச் சிறு பகுதி குறைந்தாலும் குடும்பங்களில் ஒற்றுமையும், மன அமைதியும், ஆனந்தமுமிருப்பதில்லை.

குடித்தனத்தின் மந்திரிப் பொறுப்பு பெண்களாகிய நம்முடைய கையிலேயே தானிருக்கிறது. அரசாங்கத்தின் எல்லாச் செயல்களும், எப்படி மந்திரிகளினாலேயே மேன்மையடைகிறதோ அதுபோல நம்முடைய திறமையினால்தான் குடும்பங்கள் ஒழுங்காய் நடைபெறுகின்றன. நம்முடைய ஆஸ்தான மண்டபம் சமையலறை தான். உணவுகளின் மூலமாகவும், உடற்பயிற்சி மூலமாகவும் மக்களை நல்ல உடலுறுதி பெற்றவர்களாகச் செய்ய முடியும் என்பதை நாம் அடிக்கடி படிக்கிறோம். கேட்கிறோம். செயலாகச் செய்தும் காண்பித்து விடுகிறோம்.

நமது குழந்தைகளின் முதற் பாடசாலை சமையலறைதான். பிறகுதான் மற்ற இடங்கள். இப்பொழுது குழந்தைகளாக இருக்கும் இவர்கள்தானே வருங்கால உலகில் வீரர்களாகவும், தியாக மூர்த்திகளாகவும் ஆகிறார்கள். ஆகவே இவர்களது முதற் கலாசாலையாகிய சமையலறையை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

"அடாடா! வேறு எதையோ சொல்லப் போகிறீர்கள் என்றல்லவா நினைத்தேன். கடைசியில் சமையலறையிலேயே புகுந்து விட்டீர்கள்" என்று எழுந்து ஓடிவிடாதீர்கள்.

"சாத்திரமும் சகல புராணங்களும் அம்மானாய்
சோத்துப் பானைக்குள்ளே சுருங்கியதே
[அம்மானாய்"

என்று பாடினார் ஒரு பெரியவர். அவரைவிடப் பெரிய கிழவி ஔவை "எல்லாம்பசி வந்திடப் பறந்துபோம்" என்று சொல்லி

விட்டார். ஆகவே முதலிலே வயிற்றுச் சாமியின் வழிபாட்டைப்பற்றிக் கூறுவது குறையா?

உயர்ந்த சங்கீதம், கம்பன் கவிதை, எதுவாய்த்தானிருக்கட்டும் பசியுடன் உட்கார்ந்து கேட்கச் சொன்னால் உங்களுக்கு எப்படி யிருக்கும். இந்த விஷயம் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் எழுந்து ஓடி விடலாம். புத்தகத்தைக் கீழே எறிந்து விடலாம். ஆனால் சமையலறைப் பக்கமே வராமல் எவ்வளவு நேரம் இருக்க முடியும்?

* * *

கமலா புதிதாய் தனிக் குடித்தனம் செய்யவந்த ஒரு சிறு பெண். "வீட்டை வெகு சுத்தமாய் ஒழுங்காய் வைத்துக் கொள்ள வேண்டும். என்னைக் கண்டு பிறர் மெச்சவேண்டும்" என்றெல்லாம் கற்பனைகள் செய்து கொள்ளுவாள். நல்ல படிப்பாளி. புத்திசாலி. ஆனால் என்ன? சோம்பல் ஒன்று வந்து குறுக்கே மறிக்கும். எல்லாவற்றையும் போட்டது போட்டபடி, கதவை மட்டும் தாளிட்டு விட்டு, படிக்கவோ, தையல் வேலை செய்யவோ உட்கார்ந்து விடுவாள்.

படிப்பும், தையலும், மிகவும் அவசியமானவைதான்; ஆனால் எதை எப்பொழுது செய்யவேண்டும், எதை முன் செய்யவேண்டும், எதை பின்செய்ய வேண்டும்என்கிற ஒழுங்கு வேண்டாமா? ஆனந்தமாய்ப் படிப்பதிலே ஈடுபட்டு மெய்ம்மறந்திருப்பாள். எதிர்பாராத சமயத்தில், மிகவும் அழகாய்க் குடித்தனம் செய்யும் ஒரு தோழி வந்து நிற்பாள்.

எதடா! இந்த மாதிரியான அசந்தர்ப்பத்தில் வந்து சேர்ந்தாளே என்று தோன்றும். உடனே முகம் அசடு தட்டும். இந்த மனமாறுதல்களினால் வந்தவர்களுடன் உற்சாகமாய்ப் பேச முடியாது. ஏதோ ஒருவிதமாய்ச் சமாளித்துக் கொண்டு பேசினாலும் "இங்கே வந்தேன். அங்கே போனேன்" என்று ஏதாவது உளறிவைப்பாள்.

கடைசியில் விஷயமென்ன? சோம்பேறித்தனத்துக்கு இடங்கொடுத்தது ஒரு குற்றம். அதை மறைப்பது மற்றொரு குற்றம். மறைப்பதற்காக உளறியதுதான் லாபம்.

இவ்வளவு கஷ்டங்கள் எதற்கு? எப்பொழுதும் வீட்டைச் சுத்தமாகவே வைத்திருக்கவேண்டும் என்கிற நியதி யிருந்தால் நமக்கு சுகம். வேலைகள் வளர்ந்து வளர்ந்து நமது அருமையான பொழுதைக் கொள்ளை கொள்ளாது. சமையலறையிலும் சரி, வீட்டின் மற்றெந்தப் பகுதிகளிலும், எல்லாச் சாமான்களுக்கும் ஒவ்வோரிடத்தைக் குறிப்பிட்டு அந்தந்த இடங்களிலேயே வைக்கப் பழக வேண்டும். குழந்தைகளுக்கும் பயிற்றுவிக்கவேண்டும்.

தவிர சமையலறையின் ஒழுங்கைப் பற்றி பழமையைப் பின் பற்றுகிறவர்களுக்கு நாம் ஒன்றும் சொல்லத் தேவையேயில்லை. ஆசாரம் என்கிற பெயரினால் அவர்கள் சில திட்டங்களை வகுத்து அதன்படி நடந்து பிறரையும் தம்மைப் பின்பற்றும்படி செய்து விடுகிறார்கள். புதுமையான முறைகளை அனுசரிப்பவர்களைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. புதுமைக்கும் பழமைக்கு இடையே அகப்பட்டுக்கொண்டு செய்வது இன்னதென்று தெரியாமல் விழிக்கும் சிறு பெண்களுக்கு என் வார்த்தைகள் உபயோகப்படக் கூடுமென்று நினைக்கிறேன்.

வீட்டை ஒழுங்காய் வைத்துக் கொள்ள வேண்டும். அதிலும் முக்கியமாய்ச் சமையலறையை ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுகிற வழக்கம் நமக்கு மட்டுமல்ல; நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் ஒரு சிறந்த பாடமாகிறது. குழந்தைகளும் நம்மைப் பின்பற்றி நடக்க முயலுவார்கள். சிதறியவைகளை ஒழுங்குபடுத்தும் நேரமும் மிகுதியாகும். அந்த நேரத்தில் வேறு உபயோகமுள்ள வேலைகளைச் செய்யலாம். ஓய்வு நேரத்தில் பலர் கூடி, ஒருவரிடமிருந்து ஒருவர் தெரியாத புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் எந்தெந்த வேலைகள் செய்யவேண்டு மென்பதைப் பற்றி ஒரு திட்டம் போட்டுக்

# நாரி கல்யாண்

அல்லது

## ஸ்திரீகள் சர்வ ரோக நிவாரண ஔஷதம்

மஹாத்மாக்களான நம் தேசத்து ரிஷிகள் நம்மிடம் கொண்ட கருணையினால் ஆயுர்வேதத்தை யருளிச்செய்தனர். ஆயுர்வேதம் பூர்வத்தில் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது புத்தக ரூபத்தில் நமக்குக் கிடைத்திருப்பவை மிகவும் சொற்பமாகும். ஆயுர்வேதம் அக்காலத்தில் எழுதப்படாமல் வாயினாலேயே பயிலப்பட்டு வந்தது. பண்டைக் காலத்து ஓலைச் சுவடிகளிலொன்று எங்களிடம் கிடைத்திருக்கிறது. அதுதான் **நாரி கல்யாண்** என்னும் மருந்து. **நாரி கல்யாண்** வியாதிகளை ஆச்சரியப்படும்படி சொஸ்தப்படுத்துகிறது. **நாரி கல்யாண்** வைத்ய உலகத்துக்கே இது வரையில் புலனாகாத அபூர்வ மருந்து. நாங்கள் இம் மருந்தை எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் குறைந்த விலையில் விற்கிறோம். ஆயுர்வேத வைத்யர்களும் ஆங்கில வைத்யர்களும் இந்த மருந்தைப் பரீக்ஷிக்க வேண்டுகிறோம்.

## நாரி கல்யாண்

மாதவிடாய்க் காலத்தில் அதிகத் தொந்தரவேற்படுதல் (Dysmenorrhoea) மாதவிடாய் நின்று போதல் (Amenorrhoea) வெள்ளை, மாதவிடாய்த் தவக்கம், ஸ்திரீகளின் மலட்டுத்தன்மை, முதலியவைகளுக்கு ஏற்றது என்று பரீக்ஷை செய்து உபயோகப்பட்டிருக்கிறது.

**நாரி கல்யாண்** Menorrohogia, Metrohogia, நரம்புத்தளர்ச்சி, மயக்கம், அடிவயிற்றிலும் அரையிலும் வலி காணுதல் முதலியவைகளுக்கு நிகரற்ற உத்தமமான மருந்து.

**நாரி கல்யாண்** ஆயுர்வேத மருந்துச் சாக்குகளையும் பச்சிலைகளையும் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பதனால் தொடர்ந்து அநேக நாட்கள் சாப்பிட்ட போதிலும் சரீரத்துக்குத் தீங்கு செய்யாது. உலோகப் பொருள்கள் இதில் சேர்க்கப்பட வில்லை.

**நாரி கல்யாண்** மாதவிடாய் சிரமமில்லாமல் ஏற்படச் செய்கிறது. ஆயாசமுண்டாதல், ஹிஸ்டீரியா, தூக்கமின்மை முதலியவைகளுக்கு இணையற்றது. ஒரு டானிக்கைப் போலவும் உபயோகிக்கலாம். இரத்த விருத்தி, சரியான பசி, சரியான மலப்பிரவிர்த்தி முதலியவைகளைக் கொடுத்து ஸ்திரீகளின் வாழ்க்கையை ஸந்தோஷமுள்ளதாகச் செய்கிறது.

விவரங்களுக்கு :

**பரசுராம் சித்த ஔஷதாச்ரமம்**

**59-A லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, மதராஸ்**

தலைமை ஆபீஸ் : திருவண்ணாமலை.

கொள்ள வேண்டும். அதோடுமட்டும் நின்றுவிட முடியாது. எந்த வேலையையும் குறித்த நேரத்தில் தொடங்கி குறித்த நேரத்தில் முடிக்கவும் பழக வேண்டும். இந்த வார்த்தைகளைப் பலர் ஏதோ மிகச் சாதாரணமான விஷயமென்று நினைக்கிறார்கள். உற்றுப் பார்த்தால் காலமே கருந்தனம். ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோகமுள்ளதாய், வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையிலே செலவுசெய்வதுதான் சாமர்த்தியம்.

இழந்துபோன பொருளைக்கூட யாராவது மீட்டுக் கொடுத்துவிடலாம். இழந்துபோன, நம் வாழ்நாளிலே வீணாய்க் கழிந்துபோன நேரத்தை நாம் மறுபடி காணவே முடியாது. இதனால்தான் பெரியவர்கள் "பொழுதைப் பொன்னாகச் செலவு செய்" என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே பொழுதின் அருமையை அறிந்து செலவு செய்யவேண்டும். இதனால் பொழுதை வீணாக்காமல் வேலை, வேலை என்று வேலைகளுக்கே அடிமையாகி விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வீண் பொழுது போக்கக்கூடாது, சோம்பலுக்கு இடங் கொடுக்கக்கூடாது, என்பதே இதன் கருத்து.

சிற்சில நாட்களைக் குறிப்பிட்டு, அந்த நாளை வீட்டை ஒட்டடை அடிக்க, அதிகப்படியான பாத்திரம் பாண்டங்களைத் தேய்க்க, மற்றொரு நாள் கண்ணாடி அலுமினிய சாமான்கள் இவற்றைச் சுத்தம் செய்ய, படங்களைத் துடைக்க, துணிமணிகளிலே, பொத்தான்கள் முதலியவற்றைப் பார்த்துவைக்க இதுபோன்ற முறை வைத்து வேலை செய்யப் பயின்றால் வீடு எப்பொழுதும் சுத்தமாக, அழகுத் தெய்வத்திற்கு ஆஸ்தானமாக விளங்குமென்பதில் சந்தேக மென்ன?

முதலில் அழகுத் தெய்வம் வருவாள். பிறகு அறிவுத் தெய்வமும் தானே வருவாள். அழகும் அறிவும் ஒன்று சேரும் பொழுது, கலைச் செல்வம், பொருட் செல்வம், அருட் செல்வம், ஞானச் செல்வம் இந்நான்கு செல்வங்களும் நமது வீட்டிலே நடனம் புரியும்.

நாவலாசிரியர் மாதவய்யாவைப் பற்றித் தமிழ் நாட்டில் எல்லோருக்குமே தெரிந்திருக்கும். அவருடைய பத்மாவதி சரித்திரம் என்னும் கற்பனை மிக அற்புதமானது. அதில் சாவித்திரி என்றொரு பெண். அவளுக்குப் படிக்கத் தெரியாது. தங்கமான குணம். பரம சாது. அதி அற்புதமாய்ப் பேசுவாள்.

ஒரு சமயம் அவள் தமையனுடன் பட்டணத்திலிருந்து ஒரு நண்பன் வந்திருந்தான். "சாவித்ரி எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தாள்" என்றான் அவன். தமையன் அவன் கைகளைப் பற்றித் தரதரவென்று இழுத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான். 'சமையலறையின் ஒழுங்கைக் கண்டு திகைத்துப்போனான் பட்டணத்தான். "பார்த்தாயா? இதுதான் சாவித்ரியின் பள்ளிக்கூடம். இந்தக் கற்சட்டி பானைகள்தான் அவளுடைய பாட புஸ்தகம். நாம் காலையில் சாப்பிட்டோமே, அதுதான் அவள் தேற்சி பெற்று கற்பனை செய்த கவி" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் தமையன்.

இது வெறும் கற்பனை யல்ல. உண்மையில் சமையலறை ஒரு சிறந்த கலாசாலை.

தமிழ்மொழிக்கே புதிய சுவையும் தமிழ் உலகிற்கே புதிய உணர்வும், தமிழ் மக்களுக்குப் புதிய உயிரும் தந்தவர் பாரதியார். அவர் ஓரிடத்தில் சொல்லுகிறார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
..........................................
சாதம் படைக்கவும் செய்திடுவோம்—தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.

"பட்டங்கள்பெறுவது சட்டங்கள் செய்வது இவைகள்தான் புதுமைப் பெண்ணின் நோக்கம் என்று நினைத்துவிடாதீர்கள். சாதம் படைக்கவும்—அதன் பயனாக, சத்வமயமான அன்புடன் கலந்து பரிமாறும் சாதத்தைப் படைத்து அதிவிருந்து தெய்வச் சாதியினரான மக்களையே படைத்துவிட எங்களால் முடியும் என்று கைகொட்டி மகிழுங்கள்" என்கிறார்.

# விஞ்ஞானமும் அறநெறியும்

[டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ.]

விஞ்ஞானிகள் தமது விளைவியல்களால் தற்கால சமூகத்தின் தோற்றத்தையே மாற்றியுள்ளனர். தொன்று தொட்டிருந்து வந்த பல கருத்துக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆதலின் விஞ்ஞானம் விரவிய வாழ்க்கைக் கேற்ற அறநெறி நிறுவப்பட்டாலன்றி விஞ்ஞானம் மேலும் மேலும் முன்னேற்ற மடைதல் இயலாத தொன்றாம். விஞ்ஞானம் அறநெறியுடன் எவ்வழிகளில் கலந்துள்ளது என்பதைப்பற்றி இப்பொழுது கருதலாம். அது அறநெறியை ஐவகையான வழிகளில் பாதித்துள்ளது.

முதலாவதாக, விஞ்ஞானம் பழங்காலத்தினின்று வழங்கிவரும் அறநெறிக் குட்படாத புதிய நிலைமைகளை யுண்டுபண்ணியுள்ளது. இருநூறு ஆண்டுகளுக்குமுன், ஒரு நாட்டில் பஞ்சம் உண்டாயின், அதனால் மற்ற நாட்டினர் கவலைப்படாதிருந்தனர். ஏனெனின், பல நாடுகளிடை போக்குவரத்து அதிகமாய் இல்லை. இன்றோ, போக்குவரத்து சாதனங்கள் பலவற்றால் பல நாடுகளும் பிணைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரு நாட்டில் பஞ்சம் தோன்றுமாயின், அப் பஞ்சத்தினின்று அதை விடுவிக்கும் வழிகளைத் தேடுதல் மற்ற நாட்டினர் கடமையா, அன்றா என்ற அறவியலான வினா எழுகின்றது. இருநூறு ஆண்டுகளுக்குமுன் தொழிலாளி ஒருவன் தன் வினையாற்றுதற்கான கருவிகளைத் தானே வைத்திருந்தான். இப்பொழுதோ, பெரும் இயந்திரங்களே எல்லா வேலைகளையும் செய்கின்றன. அவற்றில் வேலை செய்யும் தொழிலாளிகளின் உடைமையாய் இயந்திரங்கள் இருக்கவேண்டுமா, அன்றி ஒரு முதலாளி அல்லது பல பங்குதாரரின் உடைமையாய் இருத்தல் நன்றா, அன்றி குடிநலம் பேணும் அரசியலாரே அவ்வியந்திர நிலையங்களை நடத்தவேண்டுமா, யென்ற சிக்கலான வினா எழுகின்றது.

இரண்டாவதாக, நாம் முன்னறிந்துள்ள அறிவு வகைகள் எவற்றின் பாற்படாததுமான புது வகையான அறிவு விஞ்ஞானத்தினின்று பிறந்துள்ளது. உதாரணமாக, பொது மக்கள் உபயோகிக்கும் நீர் நிலையங்கள் அசுத்தப்படுத்தப்படுவதால் பல கொள்ளை நோய்கள் தோன்ற ஏதுவாகும் என விஞ்ஞான வாயிலாய் அறிகிறோம். அம்மை வைப்பதால் வைசூரி என்ற நோய் வாராது தடுக்கலாம் என உணர்கிறோம். இன்னும் பல நோய்கள் தலைமுறை தத்துவமாய்த் தோன்றுபவை யெனத் தெளிகிறோம். எனவே, அவ்வாறான அறிவை நடைமுறையில் பயன்படுத்துவதா—அதாவது, நீரை அசுத்தம் செய்வோரையும் அம்மை குத்திக் கொள்ளாதவரையும் தண்டித்தல், பரம்பரை நோயுள்ளவரை இனப்பெருக்கம் செய்யாது தடுத்தல்—எனும் வினா எழுகின்றது.

மூன்றாவதாக, இவ்வுலகத்தைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்துக்களில் விஞ்ஞானம் பலவகைகளிலும் முட்டுகின்றது. இவ்வுலகு தோன்றுதற்கும், மக்கள் உற்பத்திக்கும் காரணமென வழங்கிவரும் பல பழங்காலத்துக் கதைகள் சான்றுகளால் நிலைநாட்ட இயலாதவையென விஞ்ஞானம் காட்டியுள்ளது. மக்கள் விலங்கினமொன்றினின்று பரிணமித்தவரேயென்று விஞ்ஞானம் தக்க ஆதாரவுகளுடன் நிலைநாட்டியுள்ளது. எனவே, மக்கள் விலங்குகள்பால் மிக்க அன்புடன் இருத்தல் வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். மற்றவரோ, இவ்வுலக வாழ்க்கையே ஒரு பெரும் போர் என்றும், இடையறாது நடைபெறும் அப்போரில் வலிவற்றவை அழிதல் இயல்பேயென்று பரிணாமக்

கொள்கையினின்று நாம் கற்கவேண்டிய படிப்பினையென்று எடுத்துரைக்கின்றனர். இவ்வகையில் விஞ்ஞானம் பலவகையான கருத்து வேற்றுமைகளுக்கு மூலமாயுள்ளது. அவற்றில் எது சரியானது என்று முடிவாய்க் கூறும் இயல்பையும் பெற்றிலது. ஆதலின், பொது அறநெறியொன்றுளதோவெனும் ஐயப்பாட்டை அது ஏற்படுத்தியுள்ளது.

நான்காவதாக, மக்கள் தோற்ற நூலினின்று (Anthropology), பலவகையான மக்கள் பல்வேறு பழக்க வழக்கங்களையும் நடையுடை பாவனைகளையும் கொண்டுள்ளனரென்றும், அவற்றைத் தழுவியே அவர் அறநெறிமுறைகள் உள்ளனவென்றும், அறிகிறோம். இதனால் அறநெறியென்பது ஒப்பியலானதொன்றே யென்றும் தனிச் சிறப்புள்ளதன்று எனவும் வெளிப்படும் கருத்து பலப்படுகின்றது.

ஈற்றாக, அறநூல் விஞ்ஞானீய வழியே பொருள்களைக் கருதும் நோக்கத்தால் பெரிதும் பாதிக்கப்படலாம். விஞ்ஞானிகள் தம் பணி யாற்றுங்கால் தக்க சான்றுகளுடனுள்ளவற்றையே உண்மையென ஏற்றுக்கொள்ளும் இயல்பினர். எனவே உணர்ச்சியின்பாற் படாது பொருள்களை ஆய்ந்தறிதலே விஞ்ஞான வழியாம். மலரின் அழகிலீடுபடினும் அதைப் பிய்த்து ஆராயாது விஞ்ஞானி ஆறுதல் அடைவதில்லை. புழுவைத் தொட அருவருப்புத் தோன்றினும் அதையும் அறுத்துக் கீறி உன்னிக் காண்கிறான். இதனால், விஞ்ஞானி, அழகால் கவரப்படும் நுண்சுவையுணர்ச்சியற்ற கல்நெஞ்சன் எனச் சிலர் கூறலாம். அவ்வாறு கூறுதல் முற்றும் சரியன்று. விஞ்ஞானியும் அழகிலீடுபட்டுத் திளைக்கும் பெற்றி வாய்ந்தவனே. ஆயினும், அவன், சாதாரணமாய் உள்ளத்தைக் கவரும் அழகு பொருள்களின் வெளித் தோற்றத்தால் ஏற்படுவது, என உணர்ந்து அவற்றின் உள்ளுண்மையையும் அறியும் அவாவைப் பெறுகிறான். அறிவைக் கவரும் அழகே அவன் பெரிதும் போற்றும் எழிலாம். பல்வேறான பொருள்கள் பலர் உள்ளத்தைக் கவரலாம். சுவை யுணர்ச்சி மக்களுக் கேற்றவாறு வேறுபடும் தன்மையானது என்பதை உணர்ந்தோர், விஞ்ஞானியும் தன் அகத்தை யீர்க்கும் அழகையே நாடுகின்றான் என்பதை நன்குணரலாம். எனவே பரந்த நோக்கம் படைத்த எவரும் விஞ்ஞானி அழகைச் சிதைக்கும் கொடியோன் என்று கூறார். மேலும், விஞ்ஞான முறையில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளே முக்கியமெனக் கருதப்படுகின்றன. எனவே விஞ்ஞானிகள் எல்லா மக்களுக்கும் பொதுவானவற்றையே ஏற்றுக்கொள்ளும் இயல்பினர்; எவற்றையும் சீர்தூக்கிக் காண்பவர். இவ்வாறான விஞ்ஞானிகளின் செல்வாக்கு பெருகுவதால், நாளடைவில், நாட்டையும்-நிறத்தையும் - சாதியையும் - மதத்தையும் - வகுப்பையும் - பற்றி நில்லாததும் உலகப் பொதுவானதுமான அறநெறியொன்று பிறந்து ஓங்கலாம்.

முற்கூறியவற்றில், நாம் இரண்டாவதாய்க் குறிப்பிட்ட வழியிலேயே விஞ்ஞானம் அறம் நிறுவுவதற்குமிகவும் பயன்படும் எனலாம். சமூக வாழ்க்கையில் விஞ்ஞானத்தின் விளைவியல்களால் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன; இவற்றால் புது வகையான குற்றங்களை மனிதர் செய்ய ஏது ஏற்பட்டுள்ளது. சிற்றின்பங்கள் என அழைக்கப்படுபவற்றை மிகவும் அதிகரித்து பேரின்பம் எனச் சொல்லப்படுவதை மக்கள் நாடாது விஞ்ஞானம் செய்துள்ளது, என விஞ்ஞானத்தைப் பழி கூறுகின்றவர் பறைசாற்றலாம். பருப்பொருள்களிலேயே கவனத்தைச் செலுத்தி ஆன்மாவைப் புறக்கணிக்கும் நோக்கத்தை விஞ்ஞானம் வளர்க்கின்றது, எனப் பலர் எண்ணுகின்றனர். இவ்வகையான அபிப்பிராயங்கள் பரவுவதால் அபாயம் இல்லை யென்றே நாம் கூறலாம். விஞ்ஞான முன்னேற்றத்தால் ஏற்பட்ட பருப்பொருள் பெருக்கத்தின் நலனை பலரும் அடைய விரும்புதல் குற்றமன்று. அந்நலன்களை சிலர் மட்டும் அடைந்து பலருக்கும் மறுப்பதே குற்றமாம். உண்ண உணவையும், உடுக்க உடையையும், இன்

னும் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் பல வசதிகளையும் எல்லோரும் விஞ்ஞானத்தின் துணைகொண்டு பெறச் செய்யவேண்டும் எனும் நோக்கத்துடன், தன்னலங் கருதாது பொதுநலம் பேணும் பெரியோர் யாவரும் தொண்டாற்ற வேண்டும். இதுவே சிறந்த அறநெறியாம். இதை விட்டு, அழியும் உடற்பாற்பட்டவை இழிவானவை யென்றும், அழியா ஆன்மாவின் பாற்பட்டவையே உயர்ந்தவை யென்றும் கூறி பொதுநலத் தொண்டில் ஈடுபடல், அஸ்திவாரமின்றி வீடு கட்ட முயல்வது போலேயாம். ஆன்மாவைப் பற்றியவை மதவியலானவை. நம்மைப் போன்றே பிறரும் மதக் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று பிரசாரம் செய்தல், அவர்களை அடிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதாம். அது தனி மனிதனின் உள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் தன்மையதாம். எனவே இம்மைச் சுகத்தைப் பெருக்கவே விஞ்ஞானம் தொண்டு செய்கின்றது என்பதில் பிழையொன்றுமில்லை யென்றே நாம் எண்ணுகிறோம்.

சமயமென்பது தனி மனிதரின் ஆன்மாவுடன் தொடர்புள்ளது என்றும், அதைப் பற்றி ஒருவர் மற்றொருவரை பங்கித்தல் நியாயமன்று என்பதே எமது அபிப்பிராயம். சமயக் கொள்கைகள் பலவானவை. பொதுமக்கள் எல்லோரும் நல் உணவையும் நோயற்ற வாழ்க்கையையும் பெற்று குறைவற்ற செல்வத்துடன் இன்புற வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. ஆதலின் விஞ்ஞானத்தின் பாற்பட்ட சுகாதாரம் இன்னோரன்னவற்றைப் பெருக்குவதி லீடுபடுவதே, சமய வளர்ச்சியி லீடுபடுவதைவிட முக்கியமானது என நாம் எண்ணுகிறோம். எல்லா மக்களின் உடல் நலத்தையும் வாழ்க்கையின் சிறப்பையும் கோரும் வழியிலேயே அறம் வளரவேண்டும். சமூக வாழ்க்கைக்கேற்ற பொது அறநெறி யொன்றுண்டென்றும், அதை மக்கள் எல்லோரும் ஆர்வத்துடன் பின்பற்றி யொழுகவேண்டும் என்றும் யாவரும் உணருமாறு செய்யவேண்டும். அறநெறி முறைகள் விஞ்ஞானத்தால் உண்மையாகவே அபாயகரமான ஒரு வழியில் பாதிக்கப்பட்டுள்ளன. தொன்றுதொட்டு வழங்கி வந்த பல அறநெறி முறைகள் விஞ்ஞானீயமானவையே யென்று நிலைநாட்ட சிலர் முயற்சி செய்வதே இவ்வபாயம் எனலாம். விஞ்ஞானத்தின் மேன்மை நாளுக்கு நாள் அதிகப்படுவதைக் கண்டபலர் அதைத் தமது பிரசாரத்திற்கு ஆதரவளிக்கும் வழிகளில் பயன்படுத்த முன்னிடுகின்றனர். உதாரணமாக, குறித்த ஒரு சமயத்தினர், தமது கொள்கைகள் விஞ்ஞானத்திற் கியைந்தவாறுள்ளனவாதலால், தமது மதமே சிறந்தது என நிலைநாட்ட முற்படுகின்றனர். இவ்வாறு செய்தல் சமயத்தை இழிவுபடுத்தி விஞ்ஞானத்தைப் பழிப்பதாகும். சமயம் என்பது உணர்ச்சியும் அறிவும் சேர்வதால் தோன்றும் ஒன்றும். ஒரோ ரமயம் அது முற்றும் உணர்ச்சியின் பாற்பட்டதாகவேயிருக்கலாம். எவ்வாறிருப்பினும் அது 'பக்தி' யெனும் உணர்ச்சியையே அடிப்படையாய்க் கொண்டது. இவ்வாறான ஒன்றை உணர்ச்சியை முற்றும் விலக்கி, அறிவை மட்டுமே ஆதாரமாய்க் கொண்ட விஞ்ஞானத்தால் நிலைநாட்டல் இயன்றதொன்றாமோ? இதை யறியாது, விஞ்ஞானம் உண்மையே கூறும் இயல்பினது எனும் எண்ணம் மக்கள் மனத்தில் வேரூன்றி வருவதைக் கண்டு, சமய வளர்ச்சியி லீடுபட்டவரில் சிலர், விஞ்ஞானத்தைத் தமது ஏவலாளனுய்ப் பயன்படுத்த எண்ணுவதால், தம் சமயத்தையே குழிதோண்டிப் புதைக்கின்றனர்.

உயிர் நூல் (Biology) வளர்ச்சியால் கண்டறியப்பட்ட உண்மைகளை அடிப்படையாய்க் கொண்ட அறநெறியே இக்காலத்திற்கேற்றதாம். சுகாதாரம், மருத்துவம் என்றவற்றின் வளர்ச்சிக்கு உயிர் நூலே உயிராயுள்ளது. அவ்விரு நூல்களே மக்களின் நல்வாழ்க்கைக்கு அடிகோலுபவையாம். எனவே உயிர் நூலைத் தழுவிய சமூக நூல் முறையை யொட்டிய அறநெறியை மக்கள் பின்பற்றுமாறு செய்வதால் எல்லோரும் பலனடையலாம்.

மக்கள் தோற்ற நூலைப் பயில்வதால் அறநெறியைச் சார்ந்த பல கருத்துக்களை

நன்கு அறியலாம். அந்நூல் பலகாலத்து மக்கள் சமூகங்களைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் விஞ்ஞானீய ஒழுங்கு முறையில் கருதுவதாம். பண்டைக் காலத்து மக்களின் பழக்க வழக்கங்களையும் சமூக ஆசாரங்களையும் பற்றி அறிவதால் சமூக ஸ்தாபனங்களின் பரிணாமத்தைப் பற்றித் தெளிவான கருத்துகளைப் பெறலாம். மதம், ஆசாரம், அறநெறி—இவற்றினிடையுள்ள நெருங்கிய தொடர்பு அந்நூலைக் கற்பதால் வெளிப்படுகின்றது. உயர்ந்த நாகரிகத்துடன் விளங்கிய பல பண்டைக்கால சமூகங்கள் அழிந்து சிதைவுற்றதற்கான காரணங்களை அந்நூல் வாயிலாய் அறிந்து, நமது தற்கால நாகரிகமும் அவற்றைப் பின்பற்றி மறையாது, ஓங்கி வளர்வதற்கான வழிகளை யுணர்ந்து அவற்றை நாம் பின்பற்றலாம்.

இக்காலத்திய விஞ்ஞானம் விரவிய வாழ்க்கைக் கேற்ற அறநெறியை நிறுவதலே நமது முதற் பணியாம். அது அறிவின்பாற் பட்டதாயிருத்தல் இன்றியமையாததாம். உலகில் உழைப்பால் பெறக்கூடிய பொருள்களுக்கோர் எல்லை யுண்டு என்ற பொருளாதார நிலைமையிருந்த பண்டைக் காலங்களில் மக்களில் பலர் எளிய வாழ்க்கையுடனிருத்தல் இன்றியமையாதிருந்தது. பலவகையான கொள்ளை நோய்களைத் தவிர்க்கும் முறைகளையும் மக்கள் அறியாதிருந்தனர். ஆனால், இக்காலத்து இயந்திர ஆக்க முறைகளால் பல பொருள்களையும் பெருவாரியாய்ப் பெற ஏது உண்டு. நிலத்தின் வளத்தை வளர்க்கும் முறைகளும் விஞ்ஞானீயமான உழவுத் தொழில் முறைகளும் பலவுள. நல் வாழ்க்கைக் கேற்ற பலவற்றை விஞ்ஞானத்தின் துணை கொண்டு பெறலாம். கொள்ளை நோய்கள் பரவாதிருக்கவும், அவை வரவொட்டாது தடுத்தற்கும் ஏதுவான முறைகள் பலவற்றை மருத்துவ—சுகாதார நூலறிஞர் கண்டு பிடித்துள்ளனர். இவ்விஞ்ஞானீய முன்னேற்றத்தை யொட்டி அறநெறியையும் மாற்றி யமைத்தற்கேற்ற ஆற்றல் மட்டும் மக்களிடை யேற்படாதது மிகவும் வருந்தத்தக்கதேயாம். பொருள்கள் குறைந்திருந்த காலத்து, பிறர் நலன் கருதாது இருத்தலாலேயே ஒருவன் தன் வாழ்வைச் சிறப்பித்துக் கொள்ள இயன்றது. ஆதலின், மக்களிடை, பிறர் பொருளைக் கவரும் ஆற்றலே மேன்மையாய்க் கருதப்பட்டு வந்தது. இத்தகைய கருத்து மாறவேண்டும். கூட்டுறவாலும் ஒத்துழைப்பாலும் இயந்திரங்களின் திறனால் எல்லோரும் பல பொருள்கள் பெற்று இன்புறலாம், எனும் கருத்து பரவுதற்கேற்ற அறநெறி தோன்றவேண்டும். போட்டியின்றி எல்லோரும் எழிலுறு வாழ்க்கை நடாத்தும் வண்ணம் சமூகம் அமைக்கப்படவேண்டும்.

நமது உடலிலுள்ள பல நுண்கூடுகளின் (Cells) ஒத்துழைப்பினாலே நாம் உயிருடன் வாழ்கிறோம் என்று உயிர்நூல் கூறுகின்றது. எனினும் நுண் கூடு ஒவ்வொன்றும் தனிச் சிறப்புடன் உள்ளது. இவ்வாறே சமூகமும் அமைக்கப்படவேண்டும். சமூகத்திலுள்ள ஒவ்வொரு



வரும் வேளைக்கு வேளை நல் உணவும், ஏற்ற உடையும் இன்னும் பல சாதனங்களையும் பெற இயலுமாயின், எல்லோரும் இன்புற்று சமூக வாழ்க்கையும் சிறப்புறு மன்றோ? இவ்வுயரிய நிலையைப் பெறுதல் இயன்ற தொன்றேயாம். துன்பமும் இடுக்கணும் சீலத்தைப் பெருக்குதற்கு இன்றியமையாதவை யென்ற கருத்து மறையவேண்டும். தன்னலத்தை விட்டதால் மட்டும் தியாகியென எவரையும் போற்றும் நிலைமை ஒழியவேண்டும். துறவிகளே மக்களிற் சிறந்தவர் என்ற எண்ணம் மறைய வேண்டும். பலரின் ஒத்துழைப்பைப் பெற்றுப்பல பயன்படு பொருள்களையாக்கி அவற்றின் நலன்களைப்பலரும் பெறுமாறு செய்து சமூகத்தைச் சிறப்பிக்கும் நிர்வாக ஆற்றல் பெற்றவரே அறத்திற் சிறந்தோர் என்ற கருத்துத் தோன்ற வேண்டும். தன் பொருளை ஏழைகளுக்கீந்து, அவர் ஏழ்மை நிலைமையை எவ்வாற்றானும் மாற்றாது, தானும் ஏழையாய் ஆவோன் அறத்திற்சிறந்தவன் என்ற கருத்து மாறவேண்டும். உயர் வாழ்வைப்பலரும் பெறும் வழியில் தன் ஆற்றலையும் அறிவையும் பயன் படுத்துபவனே அறத்திற் சிறந்தவன் எனக் கருதும் நிலைமை யேற்பட வேண்டும். துறப்பதேமேல் யென்ற எண்ணம் மறைந்து பெருக்கிப்பகிர்வதே சிறப்பு யென்ற எண்ணம் பரவவேண்டும்.

முற்கூறிய இலட்சிய நிலைமையை ஏணி வைத்து எட்டிப்பார்க்கும் நிலைமையில் கூட இன்று நாம் இல்லை. எனினும் விஞ்ஞானவழியே அறத்தையும் அறத்தின் வழியே விஞ்ஞானத்தையும் செலுத்தும் முயற்சியை நாம் உடனே தொடங்க வேண்டும். அவ்வரும் பெரும் முயற்சியின் பலனை நாம் இன்றோ நாளோ நம் வாழ் நாட்களுள்கூட காண இயலாதிருக்கலாம். பல்லாயிரம் ஆண்டுகளாய் வேரூன்றி மக்களுள் பதிந்துள்ள வெற்றிகளை எளிதில் களைய இயலாது. ஆயினும் நாம் மனங்குன்றாது நம்பணியில் இறங்க வேண்டும். அறிவையும் உணர்ச்சியையும் வாழ்க்கையையும் ஒருங்கிணைக்கும் பணியாற்றான் விஞ்ஞானத்தை அறத்துடனும், அறத்தை அறிவுடனும் பிணைக்கலாம். அவ்வழி மக்கள் சிறப்பெய்துவர். இப்பெரும் தொண்டில் இக்காலத்து அறிஞரும் சிறிதேனும் ஈடுபடுதல் நற்றன்றோ?

எதிர்பாருங்கள்!

கா. சி. வேங்கடரமணியின்

★

தொடர் கதை

# புதிய மனிதன்

[கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.]

புதிய உலகத்தைப்பற்றியும் பண்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் இப்பொழுது அதிகமாகப்படிக்கிறோம். ஆங்கில அரசியல் வாதிகள் கூட இப்பொழுது புது ஏற்பாட்டைப்பற்றிப் பேசுகிறார்கள். 'புதிய உலகத்தில் மனிதர்கள்தான் புதியவர்களாக இருப்பார்கள்; உலகம் பழைய மாதிரிதான் இருக்கும்' என்று யாரோ சமீபத்தில் எழுதி இருந்தார்கள்.

மனிதர்கள் புதியவர்களாக எப்படி மாறப்போகிறார்கள்? மனித சுபாவம் மாறுமா? சத்தியாக்கிரக தத்துவத்தை எதிர்ப்பவர்கள் எல்லோரும் அதுமாறவே மாறாது என்ற மாதிரியல்லவா பேசுகிறார்கள்? மனித சுபாவம் இப்பொழுது இருக்கிறமாதிரி இருக்கும்வரை சத்தியாக்கிரகம் என்றபேச்சு பகற் கனவு என்கிறார்களே, பின் என்ன மாறுதல்மனிதனிடம் ஏற்படப்போகிறது?

அரசியல்வாதிகளும் சமயோசித வாதிகளும் தங்கள் கட்சி தற்சமயம் செல்வாக்கு பெறுவதற்காக சாதாரண மனப்பான்மைக்கு ஏற்றதாக ஏதாவது சொல்லிக்கொண்டே இருக்கலாம். ஆனால் இயற்கையின் முன்னேற்ற வேலைப்பாட்டிற்கு அவர்கள் சொல்லுவதற்கும் மேற்போய்நடந்து கொண்டேதான் இருக்கிறது. அதை அவர்கள் தங்கள் வாதத்திற்கு விரோதமானது என்று புறக்கணித்தாலும் தீர்க்க தரிசிகளான சிலராவது அதைக் கண்டு அதன் போக்கை நிர்ணயித்து ஆதரவளிக்காமல் இருக்கமாட்டார்கள்.

புதியமனிதன் என்பவன் தோன்றுவானா? உலகத்தையே ஆக்கிரமித்து நின்று அதற்கே 'புதிய உலகம்' என்று பெயர் கொடுக்கப் போகும் அந்தப் புதிய மனிதன்யார்? எத்தன்மை யுடையவன்? அவன் மனிதன்தானா? அல்லது மனிதத் தன்மையையே களைந்தெறிந்த தெய்வமா?

புதியமனிதனும் நிச்சயமாக மனிதன் தான். அவன் பிறக்கும் மண்ணின் சத்து முழுவதும் பாய்ந்தவன்தான். ஆனால் அவன் மனது முன்னேற்றம் என்ற இயற்கை விதியின் முற்றிய பழமாகத் தோன்றும்போது புது மணமும் ருசியும் பெறும்.

அந்தமனிதத்தன்மையில் குற்றங் குறைகள் இருக்காது. இயற்கை, சுபாவம் என்று தப்புப்பெயர்கள் சூட்டி, நாம் பல குறைகளை மனிதனுக்கு உரியவையாகச்சொல்லுகிறோமே அந்த நோய்கள் தீர்ந்து ஆரோக்கிய புருஷனைத் தோன்றும் குற்றமற்ற பிரகிருதிதான் புதிய மனிதன்.

வால்மீகி ராமனை 'குற்றமற்றவன்' (அனக:) என்று வர்ணிக்கிறார். முன்னேற்றம் என்று ரஸவாதமுறை மூலம் அழுக்குகள் நீங்கி, இழுக்குகள் போய், தோன்றப் போகும் லட்சிய புருஷன் குற்றமற்றவன், ராமன். நீட்ஷேயும் அவருக்குப்பின் ஷாவும் குறிப்பிடும் சூபர் மன் (சித்தபுருஷன் என்று சொல்லலாமா) அவர்தான். ஸ்ரீ அரவிந்தர் சொல்லும் பூரணயோகியும் அவர்தான். காந்திஜியின் சத்தியாக்கிரகியும் அவர் தான்?

இவ்வளவு பெயர்களால் வரவேற்கப்படும் இந்தப்புதிய மனிதன் உண்மையில் பழையமனிதன்தான். பிறந்த மேனியாகக் களங்கமற்று வாழ்ந்த புராதன மனிதன் தான் நாகரிகம் என்று பருவமாறுதலால் தன்மேல் படிந்து விட்டபாசம், அழுக்கு திரு பூராவையும் அகற்றி விட்டுப் புது மனிதனாகிறான்.

மனிதனுக்கு வந்த சிறுமை எல்லாம் இடையில் வந்தது. ஆதியில் மனிதன் பெரியவன், உயர்ந்தவன், மேன்மையானவன். அவனுக்கு அப்பொழுது நேர்மையைத் தவிர வேறொன்றும் தெரியாது.

பரிணாம தளர்ச்சி என்ற மாறுதல் இயற்கைப்பாதை யிலிருந்து விலகி வேறு வழியில் சென்று விட்டதால் அவன் உருவம் மாறி விட்டது. அஞ்ஞாதவாசத்தில் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட உருமாற்றம் போன்ற ஒரு சாபம் அவனுக்கு ஏற்பட்டது.

அவன் இயற்கையை மீறிச்சென்று செய்த 'அதிகப்பிரசங்கம்' தான் இந்த சாபத்திற்குக் காரணம்.

அறிவு என்ற பழத்தைத் தொடக் கூடாது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கடவுள் கட்டளையிட்டார். சைத்தனும் பாம்பும் ஏவாளும் கொடுத்த தூண்டுதலின் மேல் ஆதாம் பழத்தைத்தின்று விட்டான். உடனே ஈடன் என்ற திவ்விய வனத்திலிருந்து அவனும் ஏவாளும் வெளியேற நேர்ந்தது. இது கிறிஸ்தவவேதத்திலிருக்கும் அழகிய தத்துவார்த்தம் கொண்ட கதை.

மனிதன் பொருமையின்றி அளவுக்கு மீறி முன்னேற முயன்றதால் ஏற்பட்ட விபரீதம் தான் அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணம். தன் சக்தியை அவன் துர்வினியோகம் செய்தது தான் அந்த வீழ்ச்சிக்கும் அத்தாட்சி.

ஆனல் இயற்கை எப்பொழுதும் சளைக்காதது; வியாதி மேலோங்கின சமயத்திலும்சரீரத்திலுள்ள ரத்தபலம் அதை எதிர்த்துப் போராடுவதுபோல, இயற்கை மனிதனுடைய சிறுமையை இடைவிடாமல் எதிர்த்துப் போராடுகிறது.

ஆகையால் மனிதன் தற்காலம் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்வியாதியிலிருந்து விடுபடுவது நிச்சயம்—உயிருடனே அல்லது உயிர் நீங்கியோ.

உயிர் நீங்கிப்போகாது என்பது பெரியோர்களுடைய நம்பிக்கை. மனிதனுடைய சுபாவத்தில் இளமையும் ஆர்வமும் வளர்ச்சக்தியும் வியாதியை சகிக்கும் தன்மையும் அளவற்று இருக்கிறது என்று அவன் முன் செய்த செயல்கள் மூலம் தெரிகிறது. சரித்திரம் முழுவதும் அவன் ஒரு நிமிஷம் ஓய்ந்து படுத்ததாகத் தெரியவில்லை. ஏதாவது செய்து கொண்டேதான் இருந்தான் இன்னும் செய்து கொண்டேதான் இருப்பான். இல்லாவிட்டால் அவனுக்குப் பொழுது போகாது.

ஆகவே என்ருவது — இப்பொழுது இல்லாவிட்டாலும் எதிர் காலத்திலாவது மனிதன் தன் சிறுமையை — கிழிந்த ஆடை போல—களைந்தெறியத்தான் வேண்டும். சிறுமையை அவன் பெருமை கொண்டுகொண்டாட முடியாதகாலம் கண்டிப்பாக வந்தே தீரும்.

அப்போது மனிதன்மேல் மேகப்படை போல் பரவி இருக்கும் பாபம் நீங்கிப் போகும். அவன் சுய உருவமும் உணர்வும் 'சொரணை'யும் பெறுவான். கனவில் இருப்பவன் கனவுகலைந்ததும் துள்ளி எழுந்திருப்பது போல மனிதன் ஆச்சரியத்துடன் முன்போல விழித்தெழுந்து நிற்பான்.

முன்பிருந்த நிலையை மறுபடியும் அடைய மனிதன் படும்பாடுதான் முன்னேற்றத்தின்பாதை. தண்ணீரில் விழுந்து விட்டவன் கரையேறமுயலுவது போன்ற இந்தப்போராட்டம் தான் முன்னேற்றம்.

முன்னேற்றமே இந்த முறையில் பிற்போக்குதான்—பரிணாம சக்கரத்தில் சுழல ஆரம்பித்து மறுபடியும் இருந்த இடத்திற்கு வரும்முறை—விதை பல மாறுதல்களுக்குப்பிறகு மறுபடியும் விதையாவது போல.

# கிராமப் புனருத்தாரணம்

[இரா. சோம சேகரன்]

இந்தியநாட்டிலே இலக்ஷக்கணக்கான கிராமங்கள் உள. இக்கிராமங்கள் தாம் நம் நாட்டின் உயிர்நாடி. நம் நாடு வியவசாயத்தையே நம்பியிருப்பதால் கிராமங்கள் முக்கியம். பண்டைக்காலத்தில் மிக மகோன்னத நிலையிலிருந்த கிராமங்கள் இக்காலத்தில் அழிந்து கிடக்கின்றன. இவைகளைத்தாம் மகாத்மா காந்தியடிகள் சீர்திருத்தும்படி தேசசேவக சேவகிகளுக்கு அறிவுறுத்துகின்றார்.

ஒரு நண்பர் என்னை நோக்கி, "நீங்கள் பட்டணவாசங்களில் நவ நாகரீகத்தின் நலன்களை அனுபவித்துக்கொண்டு கிராமவாசிகளை கிராமங்களிலேயே வசிக்கச் சொல்வது நியாயமா?" என்றார். இவர் வினவிற்கு விடைகடினம்தான். ஆயினும் கூறுவல் கேண்மின், ஒவ்வொரு கிராமவாசியும் பட்டினங்களில் வசிப்பதற்காகத் தம் வீடு, மாடு, கன்று, தோட்டம், தரவு இவைதமைவிற்று வந்துவிடின் பயிர் செய்வோர்யார்? உலகுக்கு உணவு ஊட்டுவார் யார்? பிறகு இந்திய மக்கள் பசிகொண்டலையவேண்டும். எல்லோரும் பல்லக்கேற அவாவுறின் அதனைச்சுமப்பார் யார். எல்லாக்கிராம மக்களும் பட்டணவாசங்களை விரும்பினால் பயிர் செய்வார் யார்? அப்படியே கிராமவாசிகள் எல்லாவற்றையும் விற்றுக் கொண்டுவரும் பணம் எவ்வகையில் செலவழிக்கப்படுகிறது? சினிமா, நாடகம், மற்ற நவ நாகரீகம் என்னும் காட்டு, மிராண்டித்தன்மைகளில் சில நாட்களில் செலவழித்து விட்டு, பாவம்! பிறகு பரிதபிக்கின்றனர்.

ஆதலின் படித்த இளைஞர்களின் கடமை கிராம மக்களை சீர்திருத்தி நாட்டுக்கு நலன்விளைப்பதாம். இவர்கள் தங்கள் சொந்தபணத்தைச் செலவிடாது ஓர் நிதி திரட்டி கிராமங்களை மறுபடியும் நன்னிலைமைக்குக் கொணரலாம். பட்டம், பதவியை விரும்பி அதிகப்பணத்தைக் கொட்டிக் கொடுக்கும் பெரியோர்கள் நம் நாட்டுத்தொண்டுக்காக சிறு உதவியேனும் செய்யின் கீழ்க்கண்ட முறையில் கிராமங்களைச் சீர்திருத்தலாம்.

கிராமவாசிகள் சீர்குலைந்து உழல்வது கல்வியின்மையினாற்றான். மக்கள் கல்வி பெறின் அவர் வாழ்க்கை நடத்தும் முறையும், மற்றெல்லாமுணர்ந்து நன்றாய்வாழ்வர். கிராமங்களில் படித்தார் சிலரே. அதனாற்றான் கெட்ட தொழிலும், கீழானசெய்கையும் செய்கின்றனர். அவர்க்குப் புத்திகூறுவாரின்றி கெட்டலைகின்றனர். அவர்களுக்குத்திருவள்ளுவர் யாரெனத்தெரியாது. ஆதலின் நம்முதற்கடமை கிராமங்கள் தோறும் பலபள்ளிகளை நிருமாணித்து வயது வந்தவர், இளைஞர், சிறுபெண்கள் ஆகிய யாவருக்கும் கல்வி கற்பித்தல்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்பது அவர்தம் வேதாந்தம். படித்தால் பெண்கள் கெட்டுவிடுவார்களாம். வீட்டில் நாம் நெருப்பை உபயோகிக்கிறோம். அதை சாக்கிரதையாய் உபயோகிக்கும்வரை அது நமக்கு அனுகூலங்களைத்தருகின்றது. என்றாவது ஒருநாள் நம் அசாக்கிரதையினால் வீடு தீப்பிடித்துக்கொண்டால் "இனி நான் நெருப்பையே உபயோகிப்பதில்லை" எனலாமோ. அஃதேபோன்று கல்வி யென்னும் விளக்கேற்றி அறியாமை யிருளை விரட்டிவிடவேண்டும். சிறுபோதிலிருந்தே நல்ல நூல்களைக்கற்பித்தால் அவர்கள் நற்குணங்களோடு விளங்குவர். இக்கால நாவல்களைப்படித்தல் கேட்டினும் கேட்டைத்தாராநிற்கும்.

நூல் நிலயங்களை ஸ்தாபித்து பயிர்த்தொழில் செய்யும் முறையையும், ஆழ உழும்முறையையும் கற்பித்தல் வேண்டும். கல்வியின் இன்றியமையாத்தன்

மையை விளக்கவேண்டும். இங்ஙனம் சிற்றுயிர்க்கு உற்றதுணையாம் கல்வி பெறின் அவர் எல்லா நலனும் பெறுவர்.

குடிக்கும் தண்ணீரில் அதாவது சாப்பிடுவதற்கு நீரெடுக்கும் குளங்களில் மாட்டை நீராட்டுவது, துணிகளைத்து வைப்பது கூடாதென்றும், அம்மை, காலரா முதலிய வியாதிகாலங்களில் உடனே சர்க்காரால் செய்யப்படும் சிகிச்சை பெறல் நலமென்றும் கூறி நடந்து காட்டுதல் வேண்டும். வீட்டின்பக்கத்தில் குப்பைகளைக்கொட்டுவதும் கூடாதென அறிவுறுத்தல் நன்று. தினம் தினம் தம் தம் ஆடைகளைத்துவைத்து அவர்களும் குளித்துச் சுத்தமாயிருக்கவேண்டியதின் அவசியத்தைக் கூறவேண்டும்.

குடிசைக் கைத்தொழிலைக் கற்பித்தல் வேண்டும். நூல் நூற்றல், தேனீவளர்த்தல் இவை போன்றனவற்றைக் கூறி அதனுல் அடையும் ஊதியத்தையும் செய்கை முறையில் காட்டவேண்டும். பயிர்த் தொழில் செய்யாதகாலங்களிலும், ஓய்வு நேரங்களிலும் தம் நிலங்களில் விளையும் பருத்தியைக்கொண்டு இராட்டையினுல் நூல் நூற்று விற்பதினுல் கிடைக்கும் பணம் அவர்கள் தரித்திர நிலைக்கு மிக உதவியாக இருக்கும். ஐந்து அல்லது ஆறுரூபாய்க்குத் தேனீக் கூடு ஒன்று வாங்கிவைத்து விட்டால் வருடத்தில் அநேகமாக பத்து அல்லது பதினைந்து ரூபாய் கிடைக்கும். இங்ஙனமெல்லாம் கிராமத்தார்கள் மடியின்றி வேலை செய்ய வேண்டும்.

ஆடுமாடுகளை நன்ருய்ப் பாதுகாத்து வரல் வேண்டும். கால் நடைகளை மேய்ப்பதற் கென்று ஒரு நிலம் ஏற்படுத்தி நன்ருகப் புல் வளரவிட்டு அவைகளைக் காப்பாற்ற வேண்டும். பிறர் வயல்களில் தம் மாடுகள் மேயாதபடி காப்பாற்றி நன்ருய்ப் போஷித்து நல்ல வேலைகளுக்கு உபயோகிக்கலாம். கிராமங்களுக்கு உழவு மாடுகளே மிக முக்கியம். அதனுல் அவை தமைத்தம் கண்ணெனப் பாவித்துக் காப்பாற்றல் வேண்டும்.

கிராமமக்கள் அநேகமாக யாவரும் மிகுந்த கடன் காரரே. கலியாணம் காட்சிகளுக்கு நிறையக் கடன் வாங்கிச் செலவு செய்து விட்டுப் பிறகு அவதிப் படுகின்றனர். நிலங்களைச் சாகுபடி செய்து நெல் வீட்டிற்கு வாராத முன்னமே கடன்காரன் வந்து நெல்லை அளந்து கொண்டு போய் விடுகிருன். இவர்கள் தொல்லையை நீக்க சிக்கன முறையைக் கற்பித்து கூட்டுறவு சங்கங்களை நியமித்து குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து வருஷத்தில் கொஞ்சமாகக் கடனைத் திருப்பித்தரச் செய்தல் வேண்டும். அவர்கள் சேமிக்கும் பணத்தைத் தபாற் சாலையில் கட்டி வைத்து வேண்டிய போது வாங்கச் செய்வது நல்லது. பணத்தைக் கையில் வைத்திருந்தால் இரண்டு நாளில் செலவழித்து விடுவார்கள்.

கிராம மக்கள் முக்கிய மாகக் கடனில் உழல்வது முக்கிய மாகக் கள்ளுண்டலினுல் தான். பாவம். பகலெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ சம்பாதித்தக் காற்காசை கட்குடியில் விட்டு பிறகு வீட்டிலுள்ள பெண்டாட்டியின் நகை, தட்டு முட்டு சாமான்கள் இவைகளை அடகு வைத்து விடுகின்றனர். நிலமும் பிறகு விற்கப்படுகிறது. வீடும் தொலைந்தது. நிற்க நிழலின்றி ஓட்டாண்டியாகித் தவிக்கின்றனர். உடலும் உரம் பெற்று விளங்குவதில்லை. இங்ஙனம் அவர்கள் அவதியுறலை நல்ல புத்தி மதிகளைக் கூறி நிறுத்தல் வேண்டும்.

கிராமங்களில் தீண்டாமைப் பேய் தலை விரித்தாடுகிறது. ஒவ்வொரு தேசபக்தனின் கடமையும் தீண்டாமையை விலக்குவதாம்.

கிராமங்களில் மற்ருெரு கொடிய பழக்கம் உயிர்களைக் கடவுள் பெயரால் பலியிடுவது. இவர்கள் பிள்ளைகளும் இவர்களும் நோய் வாய்ப்பட, கோழியும் ஆடும் செய்த கொடுமை என்ன ? ஆதலின் இவைகளை ஒழிக்கப் பாடுபட வேண்டும்.

மேற்கூறிய வழிகளில் நம் மிந்தியச் சிருர்கள் முனைந்து பாடுபட விழைவாராயின், நாட்டுத் தொண்டுக்குப் பணம் படைத்த பெரியோர் உதவுவாராயின் நம் நாடு ஓர் பெரும் பேறு பெறுமென்பதில் ஐயமில்லை.




# அரசனும் கிழவனும்

[பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ. பி. எல்]

முன்னொரு காலத்திலே, பாரசீக தேசத்து அரசன் ஒருவன் ஒருநாள் குதிரை ஏறி வேட்டையாடப் போனான். வழியிலே ஓரிடத்தில் கிழவன் ஒருவன் மரக்கன்று ஒன்றை நட்டுக்கொண்டிருந்தான். அவ்வளவு வயதான பிறகும் கூட ஒருவன் தோட்டவேலை செய்கிறதைப் பார்த்து ஆச்சரியமடைந்த அரசன், அந்தக் கிழவனைப் பார்த்து, 'ஐயா, கிழவனாரே, உமக்கு எத்தனை வயது ஆயிற்று?' என்று கேட்டான்.

அதற்கு அந்தக் கிழவன்: 'என் வயதா? எனக்கு நாலு வயது ஆயிற்று' என்றான். என்றதும் அரசனோடு கூட இருந்த அவனுடைய பரிவாரங்களில் ஒருவன் கிழவனைப் பார்த்துக் கோபித்துக் கொண்டு, 'என்ன மரியாதை இல்லாமல் வம்புத்தனமாகப் பதில் சொல்லுகிறாய்? யார் முன்னால் பேசுகிறாய் என்பது கவனம் இல்லையோ?' என்று சொன்னான்.

அதற்குக் கிழவன் 'காரணம் இல்லாமல் நீ என்னைக் கோபித்துக் கொள்ளுகிறாய். யோசனை செய்யாமல் வாயில் வந்தபடி நான் பேசவில்லை. சாப்பாட்டிலும், தூக்கத்திலும், உடம்பைப்போஷிப்பதிலும், வெட்டிக் காரியங்களிலும், வீண் பொழுதுபோக்கிலும் செலவழிந்த நேரத்தை யெல்லாம் பெரியவர்கள் தங்களுடைய வாழ்க்கையோடு சேர்ப்பதில்லை. அந்த நேரங்களில் தாங்கள் வாழ்ந்ததாக அவர்கள் நினைப்பதில்லை. ஆகையால், கணக்கோடு சேராத அந்த நேரங்களை யெல்லாம் தள்ளிவிட்டுத் தெய்வத்தை வணங்குவதிலும், ஜனங்களுக்கு உபகாரமான காரியம் ஏதாவது செய்வதிலும் செலவழிந்த நேரத்தையே நான் நிஜமாக வாழ்ந்த நேரமாகக் கணக்கிட்டேன். அந்தப்படி பார்த்தால் என் வயது நாலுக்கு மேல் ஆகவில்லை. அவ்வளவுகூட ஆகியிருக்குமோ என்று கூடச் சந்தேகப்படுகிறேன்' என்றான்.

இதைக்கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து, அவனுடைய அறிவைக் கொண்டாடினான். மறுபடியும் கிழவனைப் பார்த்து, அரசன்,

"சாதாரணக் கணக்குப்படி உமக்கு வயது ஆகிவிட்டதே. நீர் இப்பொழுது நடுகிற செடி மரமாகிப் பூத்துக் காய்த்துப் பலன் தருவதற்கு வெகுகாலம் பிடிக்குமே. உமக்குப் பயன்படாதே. அப்படி யிருக்கும் போது இந்த வீண் முயற்சியில் ஏன் உம்முடைய காலத்தைச் செலவிடுகிறீர்?" என்று கேட்டான்.

"மற்றவர்கள்—நமக்கு முந்தின தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள்—நட்ட மரங்களின் பலனை நாம் அடை

கிறேம். அவர்கள் அடையவில்லே. அவர்கள் நட்டிராவிட்டால் நாமும் அடையமாட்டோம். ஆகையால் நமக்குப் பிற்காலத்தவர் பயன் பெறும்படியாகச் சில மரங்களே யாவது நாம் நடவேண்டாமா?" என் ருன் கிழவன்.

'அச்சா!' என்று சந்தோஷப் பட்டான் அரசன். அரசனுடைய குறிப்பை உணர்ந்த அவனுடைய பொக்கிஷதாரன் அந்தக் கிழவ னுக்கு ஒரு பொன் முடிப்பைப் பரிசாக அளித்தான்.

அதைப் பெற்றுக்கொண்ட குடி யானவன் அரசனைத் தாழ வணங்கி 'மற்றவர்கள் நடும் மரங்கள் நாற்பது வருஷத்துக்குமுன் பலனுக்கு வருவ தில்லே. நான் நட்ட கன்றின் பெரு மையைப் பாருங்கள். வைத்தவுடன் பலன் தந்துவிட்டது' என்ருன்.

'பேஷ்! பேஷ்!' என்று கைதட் டிச் சந்தோஷப்பட்டான் அரசன்.

அதைக்கண்ட பொக்கிஷதாரன் கிழவனுக்கு இன்னெரு பொன் முடிப்பைக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு, குடியா னவன் முன்னிலும் தாழ வணங்கி 'மகாராஜ்! மற்றவர்கள் வைக்கும் செடிகள் வருஷத்துக்கு ஒரு முறை தான் பலன் கொடுக்கும். நான் வைத்த செடியோ ஒரே நாளில் இரண்டு தரம் பலனைத் தரும் அற் புதசக்தி வாய்ந்திருக்கிறது' என் ருன்.

'பலே! பலே. நன்ருய்ச் சொன் னீர்!' என்று அரசன் சந்தோஷப் படவே கிழவனுக்கு மூன்ருவது பொன் முடிப்புக் கிடைத்தது. அர சனுடைய பெருந்தன்மையைக் கண்ட கிழவன் அவனை வணங்கிக் கொண்டாடினன்.

அரசனும் அவனுடைய அறி வைப் புகழ்ந்து 'கிழவனரே! நான் இன்னும் கொஞ்சநேரம் உம்மோடு பேசிக் கொண்டிருந்தால் என்னு டையபொக்கிஷம் காலியாய்ப்போய் விடும்போல் தோன்றுகிறது. நான் போய் வருகிறேன்' என்று சொல் லிக்கொண்டே, குதிரையைத் தட்டி விட்டு நாற்கால் பாய்ச்சலாகப் போய்விட்டான்.

(ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியது)

---

## யூக்ரெய்ன்

யூக்ரெய்ன் விவசாயத் துறையில் மாத் திரமல்லாமல், தொழில் துறையிலும் ஸோவியத் யூனியனில் முக்கியத்வம் வகிக் கிறது. சென்ற 15வருஷங்களாக தொழில் ஜனத்தொகை இரட்டித்துவிட்டது. 30,000,000 ஜனத்தொகையுள்ள இப் பிரதேசம் ஸோவியத் யூனியனில் எல்லா குடியரசு நாடுகளேக் காட்டிலும் அதிக ஜனத்தொகை யுள்ளது. இந்த ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பாகம், இப் பொழுது தொழி லபிவிருத்தியில் ஈடு பட்டு வருகின்றது. யூக்ரெய்ன், ஸோவியத் தின் 63% இரும்பு, 43% எஃகு; 72% அலு மினியம், 35% "மாங்கனிஸ்", உற்பத்தி செய்கிறது. ரஷ்யா நிலக்கறியின் 60% யூக் ரெய்னிலிருந்து வருகிறது, ரஷ்யத் தொழில் யுக்ரெய்னின் நிலக்கறி ஸப்ளே யைப் பொருத்து இருக்கிறது.

யூக் ரெய்னிலுள்ள சில முக்கிய தொழில் ஸ்தாபனங்கள் ஸோவியத்துக்கு மிகுந்த ஒத்தாசையாய் இருக்கின்றன. ஸோவியத்தின் மிகச் சிறந்த தொழிற் சாலேகள் ஸோவியத்தின் யுத்த யூக் ரெய னில்தான் இருக்கின்றன. எனவே ஸப்ளே தொழிலில் யூக் ரெய்ன் முக்கியத்வம் வகிக்கிறது.

# விளையும் பயிர் முளையிலே

[எம். எஸ். சுப்ரமணிய ஐயர்]

ஆலம் விதை மிகவும் சிறியது. மாமானல், ஆகாயத்தை அளாவும்; பரந்து விரிந்து தழைக்கும்; சதுரங்க சேனைக்கும் தங்க நிழல் தரும்.

அவ்விதைபோல் தோன்றியவன் சிவாஜி. அவன் சின்ன ஜமீன்தாரின் மகன்; தனியே நின்றான்; தோளே துணையாகக் கொண்டான்; மொகலாய வல்லரசை வாட்டினான்; தனியரசு கொண்டான்; மகாராஷ்டிர ஸாம்ராஜ்யம் கண்டான்; தரணியெங்கும் புகழ் பரப்பினான். இம்மட்டோ?

பின்பு; அவன் குலத்தார் கிளம்பினர்; பாரதபூமி முழுதும் சென்றனர்; இமயம் முதல் குமரி வரையில் பரவினர்; எங்கும் ஆண்மைக்கொடி தூக்கினர்; அரிய வெற்றி அடைந்தனர்; ஏக சக்ராதிபத்தியமும் எய்த முயன்றனர். அது சமயம் ஆங்கிலேயர் தோன்றினர்; தந்திரமாக அவர்களைப் பிளவுபடுத்தினர். பின்பே ஆங்கிலேய அரசு இங்கே நிலைத்தது.

அக்குல திலகம், வீரச் செல்வம், சிவாஜி சத்திரபதி சின்ன வயதில் வளர்ந்த விதம், வாழ்ந்த வகை எப்படி என்பதை இங்கே ஆராய்வோம். 1627-ஆம் ஆண்டு, ஏப்ரல் 10-ந் தேதி அம்மைந்தன் பிறந்தான். அவன் தந்தையின் பெயர் ராஜா ஷாஜி. தாயின் பெயர் ஜீஜாபாய். விஜயபுரி யரசிலே ஷாஜி ஒரு சேனாதிபதி. ஓயாச் சண்டை, ஒழியாச் சண்டை. போர் முனையே சதா ஷாஜியின் இருப்பிடம்.

மனைவியும் மகனும் உடன் வசிப்பது எப்படி? இருவரும் பூனா நகரில் வசித்து வந்தனர். பூனா அவர்களுக்குச் சொந்தம். இருவருக்கும் உதவிபுரிய ஓர் அந்தணன். அவன் பெயர் காண்டதேவன்.

ஜீஜாபாய் ராஜ பரம்பரையைச் சேர்ந்தவள்; வெற்றி வீரனுக்கு மாலையிட்டவள். வீரனாய், ராஜனாய், மகன் விளங்கவேண்டும் என்பதே அவள் பிரார்த்தனை. சதா அவளுக்கு அதே நினைவு, அதே நோக்கம், அதே முயற்சி, அதே கிளர்ச்சி! புருஷனோ அருகில் இல்லை; பிள்ளையே அவளுக்குக் கதி. பிள்ளையை விட்டு ஒரு கணமும் பிரியாள்.

சீராட்டுகையில், வீரம் ஊட்டுவாள்; பாராட்டுகையில், பெருமிதம் புகட்டுவாள்; முத்தமிடுகையில், மொய்ம்பு காட்டுவாள்; கட்டியணைக்கையில், கண்ணியம் சூட்டுவாள். பாலூட்டுகையில, பரிவுடன் பாடுவாள்; தொட்டிலில் இட்டு ஆட்டுகையில், தொல்குல சரிதம் சொல்லுவாள். எல்லாவற்றையும் சிவாஜி கூர்ந்து கவனிப்பான்.

பாட்டைக் கேட்டதும், சில குழந்தைகள் மெய்மறந்து தூங்கிவிடும். சிவாஜியோ தூங்கான்; "உம் உம்" என்று பாட்டைக் கவனிப்பான்; பாடலை நிறுத்தினாலோ, பதைத்து எழுவான்; படபடத்து நோக்குவான். ஜீஜாபாய் மேலும் பாடல் கூறுவாள். உடனே சிவாஜி சித்தங் களிப்பான்.

பூனாவின் அருகே மலைகள் மிகுதி. அங்கே வன விலங்குகள் அதிகம். இரவிலே காடி கத்தும், புலி உருமும். வயது வந்தவரும் பயப்படுவர். சிவாஜியோ; "அம்மா! என்ன சப்தம் இது?" என்பான். "காடி கத்துகிறது; புலி உருமுகிறது" என்பாள் ஜீஜாபாய்.

"அப்படியா! காடியைக் காணவேண்டும்; புலியைப் பிடிக்கவேண்டும். இரண்டையும் கட்டிப் போடவேண்டும்; இரண்டையும் அவிழ்த்துவிட்டு விளையாடவேண்டும்" என்று சிவாஜி சொல்லுவான். "புலி துஷ்ட மிருகம்; பொல்லாத பிராணி. மனிதரைத் தின்றுவிடும்" என்று ஜீஜாபாய் பேசுவாள். "என்ன அம்மா! எந்த மிருகமும் என்னை என்ன செய்யும்? எதையும் அடக்கிப் போடுவேன், ஏறி சவாரி செய்வேன்" என்பான் மைந்தன்.

வேடிக்கை காட்ட இடுப்பிலே குழந்தையை வைத்துக்கொண்டு, ஜீஜாபாய்

வாசலிலே நிற்பாள். தொலைவிலே மலைக் குன்றுகள் தென்படும். "அம்மா வா; மலைக்குப் போகலாம், புலியைப் பிடிக்கலாம். வா அம்மா, வா" என்பான் சிவாஜி. நாளை ஆகட்டும் என்று சொல்லி, அவள் ஆற்றுவாள்.

தெருவிலே குதிரைகள் செல்லும் உடனே, "அம்மா! இக்குதிரை மீது ஏற வேண்டும்; வேகமாகச் சவாரி போக வேண்டும்" என்று அவன் துடிப்பான்; இடுப்பை விட்டு, இறங்கவும் முயலுவான். "நல்லதப்பா, கொஞ்ச நாள் ஆகட்டும்" என்பாள் தாயார்.

ஒருநாள் ஆயுத அறை திறந்து கிடந்தது. தாவி உள்ளே சென்றான் சிவாஜி. ஈட்டியை எடுத்து, அதன் கூர்மையை நோக்கினான்; வாளை எடுத்து, அதன் கருக்கைப் பார்த்தான்; ஒட்டுச் சல்லடத்தை எடுத்து, இடுப்பில் தரித்துப் பார்த்தான்; இருப்புச் சட்டையை எடுத்துப் போட்டுக் கொள்ள முயன்றான். பார்த்தாள் ஜீஜாபாய்; பிரமித்து நின்றாள். வேறென் செய்வாள்!

"அப்பா எங்கே? அப்பா எங்கே?" என்று அவன் அடிக்கடி கேட்பான். "அப்பா சண்டைக்குப் போயிருக்கிறார்" என்பாள் ஜீஜாபாய். "அப்பா மட்டுமா போயிருக்கிறார்? துணைக்கு நானும் போக வேண்டாமோ? என்னை அனுப்பு அம்மா" என்று அவன் வாதாடுவான். ஜீஜாபாய் என்ன செய்வாள்? "அப்பா! போகலாம் பொறு, சமயம் வரும்" என்று சொல்லித் தேற்றுவாள். என்ன சொல்லியும் அவன் திருப்தியடைய மாட்டான்.

தினம் ஜீஜாபாய் கதை சொல்லுவாள். கதை என்றால் சிவாஜிக்கு வெகு பிரியம். அவள் கட்டுக்கதை சொல்லமாட்டாள். ராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம் இவற்றிலிருந்தே கதைசொல்லுவாள். அப்போது அவன் காதுகொடுத்துக் கேட்பான், கவனத்துடன் கிரகிப்பான்; இமை கொட்டாமல் தாயின் முகத்தை நோக்குவான்; கண்முன்னே கதாநாயகர் நிற்பது போல் நினைப்பான்; மனக்கண்கொண்டு, சமரைச் சிந்திப்பான்; தோள் தட்டுவான்; ஆயுதசாலையில் இருக்கும் ஆயுதங்களை எடுத்தாள எண்ணுவான்.

கோதண்டபாணியின் வில்லாண்மை கேட்கையில், அவன் தோள்கள் உயரும்; இளையபெருமாளின் வாஞ்சை கேட்டதும் தம்பி இல்லையேயென்று அவன் உள்ளம் உருகும்; இராவணனது சீதாபகாரணம் கேட்கையில், அவன் உடம்பு துடிக்கும்; துள்ளியோடிப் பிடிக்க நடிக்கும் காண்டீபனது தாளாண்மை கேட்கையில், அவன் உள்ளம் சிலிர்க்கும்; கன்னனது கொடை வன்மை கேட்கையில் கையிரண்டும் அள்ளிக்கொடுக்க அலையும்; துரோணரது வில்வரிசை கேட்கையில், அவனுக்கு வீரப்பு மிகும்; பலராமனது பராக்கிரமம் கேட்கையில், பேரானந்தம் பிறக்கும்; கண்ணனது தந்திரங்களைக் கேட்கையில் களிவுபிறக்கும்; அவ்வீர சிகாமணிகளைப் போல் வரிசையும்வாழ்வும் வீறும் வெற்றியும் விரைவில் எய்தவேண்டும் என்றே இரத்தத்துடிப்பு எழுந்தோங்கும்.

பத்து வருஷம் அவ்விதம் கழிந்தது. இனி, காண்டதேவன் வேதிய வகுப்பினன்; அகன்ற அறிவும் பரந்த நோக்கமும் படைத்தவன்; பயிர்பண்ணும் உழவரிடம் அபிமானம் வாய்ந்தவன். உழவருக்குள் சிலசமயம் சச்சரவு நேரும். இருவர் சொல்லையும் அவன் நன்கு கேட்பான்; துலைக் கோல்போல் நீதி வழங்குவான்.

அவ்வேளை சிவாஜி உடனிருப்பான்; நிர்வாக நேர்மையை நோக்குவான்; ஐயம் தோன்றின், அந்தணனுடன் தர்க்கம் பண்ணுவான்; உண்மையை உணர்வான். காண்டதேவனுக்கு வியப்பா யிருக்கும். குழந்தைக்கு ஏன் இக்கவலை? பிஞ்சில் பழுத்ததோ என்று எண்ணுவான்.

ஒரு நாள் காண்டதேவன் அந்தரங்கமாக ஒரு காரியஞ் செய்ய முயன்றான். சிவாஜிக்கு அது பிடிக்கவில்லை "ஐயா! தாங்களே எனக்குத் தந்தையின் ஸ்தானம். ஆசிரியனும் ஆவீர். போஷகனுமாகவும் இருக்கிறீர். என்னை ஒதுக்குவது ஏன்? பச்சைப் பாலன் என்றா? கருவிலேயே அபிமன்னுவுக்குக் கண்ணபிரான் பாரதப் போர் முறை புகட்டினன். அந்தரங்க

கருமமும் அடியேனுக்குத் தெரிய வேண்டாமோ? நான் ஆறறிவு அடைதல் எங்ஙனம்?" என்று சிவாஜி வினயமாக வினவினன்.

பாலனது ஆவலை உணர்ந்தான் அவ் வந்தணன்; மதிவன்மையையும் மதித்தான். எக்காரியத்திலும் சிவாஜியைக் கலந்து கொள்ளத் தீர்மானித்தான். சிக்கலான வழக்குகள் வரும். சிவாஜியையே விசாரிக்கச்சொல்வான்; தீர்ப்புங்கூறச் செய்வான்; அவசியம் நேரின் ஆலோசனைமட்டும் சொல்வான். அவ்விதம் தினம் பயிற்சி நடந்துவந்தது.

ஜாகீரின் உழவரும் சரி, வேலையாளரும் சரி, மாவலர் எனும் வகுப்பார்; மலை நாட்டில் வசிக்கும் முரட்டு மக்களும் ஆவர். அம்மாவலரின் மக்களுடன் சிவாஜிதாராளமாகப் பழகுவான்; ஓடியாடி விளையாடுவான். ஜமீன்தாரின் மகனென்று மமதை கொள்ளான். அச்சகாக்களை மாளிகைக்கு அழைத்து வருவான்; அன்னைக்குக் காட்டுவான்; அரிய தின்பண்டங்கள் வழங்குவான்; அளவளாவி ஆனந்தம் அடைவான். அவர்களுக்கோ பரமானந்தம் பிறக்கும்.

மேலும் உழவரின் வீடுகளுக்கு ஒரோரு சமயம் செல்வான். அவர்களின் வாழ்க்கை நிலையை அறிவான்; அன்னாரின் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வான். மாவலருக்கு அது கண்டு பரவசம் பிறக்கும்; சிவாஜியிடம் மதிப்பு பெருகும்; நேசம் முதிரும். நிம்மதியும் உண்டாகும்.

அவ்விதம் சிவாஜிக்கு வயது பதினன்கு நிரம்பியது. தந்தை ஷாஜி தன் தனயனைப் பார்க்க விரும்பினன். தாயும் பிள்ளையுமாக விஜயபுரி சென்றனர். அங்கே ஷாஜிக்கு ஏற்றம் அதிகம். ஷாஜி மைந்தனை அப்பிரபுக்கள் அழைத்து ஒரு சமயம் உபசரித்தனர்.

யாரிடமும் அவன் கண்ணியமாக நடந்தான்; எல்லாருடனும் இனிமையாகப் பேசினன். பெரியாரைக் கண்டதும் பக்தி விசுவாசம் காட்டினன்; படித்தவரைக் கண்டதும் போற்றிப் புகழ்ந்தான். "என்ன ஆச்சரியம்! வயது பதினறு கூட ஆகவில்லை. எவ்வளவு அடக்கம்! எவ்வளவு மட்டு மரியாதை! என்ன அறிவு? என்ன விநயம்!" என்று எல்லாரும் மெச்சினர்; கொண்டாடினர்.

விஜயபுரியிலே குதிரைப் பந்திக்கு சிவாஜியை அழைத்துச் சென்றனர். உடனே ஒரோரு குதிரையாக அவன் உற்று நோக்கினன்; சுழி சுத்தங்களை சூட்சுமமாகக் கவனித்தான். மிகச் சிறந்த குதிரைகள் பல இல்லையே என்று சொன்னன். குதிரை வீரர் அதுகேட்டு வியந்து நின்றனர்.

பின்பு யானைப் பந்திக்குச் சென்றுன். குஞ்சரங்களின் லட்சணங்களையும் கவனித்தான். ஆயுதசாலை சென்று, படைக்கலங்கள் பலவற்றையும் பார்த்தான்; பொக்கிஷஞ் சென்று, பொன் காசின் குவியல்களைக் கூர்ந்து நோக்கினன். ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்தால் தர்மமாய் இருக்கும் என்றுன். அவன் நடை, நொடி, பாவனை கண்டு பிரமிக்காதார் இல்லை.

விஜயபுரி சுல்தான் ஒரு தினம் கொலுவில் இருந்தான். பிரபுக்களும் பிறரும் வீற்றிருந்தனர். ஷாஜியும் சிறப்பாக அமர்ந்திருந்தான். அப்போது ஷாஜியின் புதல்வனைப் பற்றிப் பலரும் புகழ்ந்து பேசினர். பச்சைப் பிள்ளை மகா சமர்த்தன் பேரறிவாளி என்றனர் அனைவரும். "அப்படியா? அத்தகைய மைந்தனை நானும் காண வேண்டும், கண்டுகளிக்க வேண்டும்" என்று சுல்தான் பேசினன். அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் அல்லவா?

பூனு திரும்பியதும் சிவாஜி சும்மா இருக்கவில்லை. தோழருடன் சென்று, ஜமீன் கிராமங்களைப் பார்வையிடுவான்; ஆங்குள்ள பாதைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், அரண்கள், கோட்டை கொத்தளங்கள் இவற்றை உற்று நோக்குவான்; பூமியின் இயற்கை நிலையை எண்ணிப் பார்ப்பான்; மலையுச்சியானுலும் விரைந்தேறுவான்; நான்கு திசைகளையும் நோக்கி உணர்வான்.

அங்குள்ள மக்கள் அனைவரும் காணிக்கை பொருள்களுடன் வந்து, அவனைக் கண்டுகொள்வர். அவர்களுடன் மலர்ந்த

முகமும் இனிய சொல்லும் கொண்டு, அவன் உரையாடுவான்; அவர்களது உள்ளத்தைக் கவர்வான். வடிவழகையும் தோற்றத்தையும் கண்டு, அனைவரும் மகிழ்வர். வந்து காணுவோருக்கு அவன் சன்மானம் அளிப்பான்.

தினம் சிவாஜி அதிகாலையில் எழுவான்; சரீர தர்மத்தைக் கவனிப்பான்; உடனே அன்னையை வணங்குவான்; பின்பு ஆலயஞ்சென்று ஆண்டவனைத் துதிப்பான். அதன்பின், குதிரை சவாரி போவான்; இதர தேகாப்பியாசமும் செய்வான். நோய்நொடிக்கு இடங்கொடான். அவன் சரீர அமைப்பும் கட்டும் பலரையும் கவர்ச்சி பண்ணும்.

விஜயபுரியரசில் வேலைக் கமருப்படி காண்டதேவன் சொன்னான். "பிறரிடம் கைகட்டிச் சேவகம் புரியேன், சுயவரசே கண்டேன்" என்றான் சிவாஜி. இத்துடன் சிவாஜி நிற்கவில்லை. சிவாஜிக்குப் பால்ய சிநேகிதர் பலர். அவர்களில் தானாதி, ஈசாதி இவர்கள் முக்கிய புருஷர். அன்னாருடன் தன் கருத்தை உரைத்தான் சிவாஜி. அவர்களும், " ஆம்-அதுவே சரி. உடனின்று உயிரும் கொடுப்போம்" என்றனர். சிவாஜிக்கு உடனே துணிவு மிகுந்தது.

சிவாஜிக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்பர் அன்னியர். நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம் என்றாள் ஒளவை. அறிவும் வீரமும் சிவாஜிக்கு இயற்கைக் குணங்கள் ஆயின. அவ்விரண்டுங்கொண்டு, அவன் பேரரசன் ஆனான். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது பழமொழி.



# புத்தக விமர்சனம்

[கனவு (கவிதைகள்) இயற்றியவர் "கம்பதாஸன்". விலை. ரூ. 1—0—0]

கம்பதாஸன் புது யுகத்தின் தலைவாசலில் நிற்கும் வாலிபக்கவி. ஆவேசத் துடிப்புடன் புதுவாக்குத் தேடி, புதிய குரலில் பாடுகிறார், என்று இந்த நூலின் முன்னுரையில் பிரபல கவியான ஹரீந்திரநாத சட்டோபாத்யாய கூறுகிறார்.

ஒரு கவியைப் பற்றி ஒரு கவிதான் நன்கு அறிந்து மதிப்பிட முடியும் யென்பதற்கு ஹரீந்திரரின் மேற் கூறியவார்த்தைகள் மிகப் பொருந்தும்.

ஆமாம், கம்பதாஸன் புதுமைக் கவிதான். புதுமை இலக்கியம் மலர்ந்து நிற்கும் இதர பாஷைகள் ஒன்றும் அவருக்குத் தெரியாது என்று கூறினல் அது அவரைக் குறை கூறுவதாகாது. அவரிடம் இருப்பதெல்லாம் முழுக்க முழுக்கத் தமிழ்ச்சரக்கு. கற்பனை அலைமோதும் தம் கவிதை யுள்ளத்தின் இசைப் பெருக்குத்தான் அவர் கவிதைகள். புதுமை உணர்ச்சி என்னும் சிப்பியில் வெடித்த முத்துக்கள். தமிழில் ஒருவரும் கையாளாத முறைகளை இவர் கையாண்டிருக்கிறார். உவமைகள் யாவும் புது உருக்கொண்டவை. உதாரணமாக, அந்திநேர வானத்தைப் பற்றிக் கூறும்போது

........சேக்கச்சிவக்க வானம்—ஏழை விக்கிவிடும் மூச்சில் வீசும் நெருப்பைப் போல் என்று கூறுகிறார்.

தமிழைப் பற்றிக் கூறும்போது,

தேன்றல் சுகமும்—தேனின் 'சுவையும் தமிழின் பதத்திற்கு ஈடாகாதென்கிறார். மழையை எப்படி வர்ணிக்கிறார் பாருங்கள்.

ஏனெனக் கேட்பாரற்ற உழவர்—நிலைக்கு ஈசன் உகுக்கும் கண்ணீர் துளியோ— எவ்வளவு பொருத்தமான உவைகள்.

காதல் என்ற தலைப்பில் பாடியிருக்கும் பாட்டுக்கள் மிக நன்ருக இருக்கின்றன. உதாரண மாக—

முல்லை மோட் டெனவே நானிருந்தேன்—அவர் மொய்த்திடும் தென்றலதாகி வந்து சோல்லாம லென்னவோ சொன்ஞரடி—என்றன் தூக்கம் கலைந் திடமெய் சிலிர்த் தேன்—

இன்னும் எத்தனையோ நயமான பாட்டுகள் இருக்கின்றன. புஸ்தகத்தின் அமைப்பு நன்ருக இருக்கிறது.

அ. கி. ஜயராமன்

கூண்டுக் கிளி:—ஆசிரியர்: ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய—மொழி பெயர்த்தவர்: "தி. ஜ. ர"—சக்தி காரியாலயம், முத்துமாரி செட்டி தெரு, மதருஸ்.

விலை ரூ 1-0-0.

வங்காளத்தின் வாலிபக் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயரின் "ஐந்து நாடகங்கள்" என்ற புத்தகத்தை "தி. ஜ. ர." மூலத்தின் சுவை குன்ருது அழகாக மொழிபெயர்த்து கலா ஆஸ்திகர்களுக்கு ஸமர்ப்பித்திருக்கிறார். இந்த நாடகங்களில் கவிதை மணம் வீசுகிறது.

ஆசிரியர் இந்த நாடகங்களில் முக்கியமாக தொழிலாளி உலகத்தில் உள்ள மாசுக்களைப் பளிங்குபோல் எடுத்துக் காண்பிக்கிறார். ஒவ்வொருவரும் படித்து ஆனந்திக்கத்தக்க பிரசுரம் இது.

அமெரிக்கா:—ஆசிரியர்: ஏ. கே. செட்டியார்—பிரசுரகர்த்தா, சக்தி காரியாலயம்—விலை ரூ. 1-0-0.

ஏ. கே. செட்டியார் ஓர் "உலகம் சுற்றும் தமிழன்". அவர் மேல்நாட்டு பிரயாணங்களில் விசேஷ அனுபவம் பெற்றவர். ஆங்காங்கு தான் நேரில் கண்டு கேட்டவைகளை தன் தேசத்தவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற ஆஸ்தையுள்ளவர். எல்லோருக்கும் புரியும்படி அழகாக தன் அனுபவங்களை எழுதும் சக்தி வாய்ந்தவர். அவர் எழுதிய இப் புத்தகம் ஒவ்வொரு தமிழனும் படித்து அமெரிக்காவைப் பற்றித் தெரிந்துகொள்ளத் தகுந்தது.

வி. வி. என்.